திருக்கோயில்

"என் கடன் பணி செய்து கிடப்பதே"

CONNEMARA
12 JUL 1973
MADRAS



கூத்தாடும் விநாயகர்

மாலை 11] இலக - பங்குனி - ஏப்ரல் 1969 [மணி 7

தமிழ் நாடு அரசின் அறநிலைய



திருவெண்காடு ஸ்ரீ சுவேதாரண்ய ஈசுவரர் கோயிலில் நிகழ்ந்த திருப்பாவை விழாவிற் கலந்துகொண்டு சிறப்பித்த பெருமக்கள் (24—12—68).

பொருளடக்கம்

1. திருமந்திரச் சிறப்பு
2. திருமால்நெறியும் திருக்குறளும்
3. திருக்குறளின் சொற்பொருட் சிறப்பு
4. திருக்குறட் கருத்து வளம்
5. அபிராமி அந்தாதி
6. நெடுநாளைய தேட்டம்
7. நலந்தரும் சொல்
8. மகாபாரதம்
9. செல்வச் செழிப்பு
10. வழித்துணை
11. ஸ்ரீவசநபூஷணத்தின் சாரம்

சந்தாதாரர்களுக்கு வேண்டுகோள்

ஆண்டுச் சந்தா ரூ. 10/- தனி இதழ் விலை ரூ. ஒன்று

'திருக்கோயில்' இதழின் சந்தாதாரர்கள் ஆகச் சேர விரும்புபவர்கள் "திரு. ஆணையர் அவர்கள், அறநிலைய ஆட்சித்துறை, சென்னை-34" என்னும் முகவரிக்கு ரூபா பத்து அனுப்பி, எப்போது வேண்டுமாயினும் சந்தாதாரர்கள் ஆகச் சேர்ந்து கொள்ளலாம்.

அல்லது, அவ்வவ் வட்டார அறநிலைய உதவி ஆணையாளர்களின் அலுவலகங்களிலும், மேற்படி சந்தாத் தொகையைச் செலுத்திச் சேரலாம்.

சந்தாதாரர்கள் தங்களுடைய சரியான முழு முகவரியைத் தெரிவித்துதவுதல், இதழ்கள் தவருமற் சேர்தற்கு மிகவும் இன்றியமையாதது.

—ஆசிரியர்.



மாலை 11] கீலக - பங்குனி - ஏப்ரல், 1969 [மணி 7

திருமந்திரச் சிறப்பு

முன்னுரை : அமிழ்தினும் இனிய நமது தமிழ்மொழியில், அளப்பருஞ் சிறப்புடைய நூல்கள் மிகப்பல உள்ளன. அவற்றுள், திருமூலர் என்னும் தெய்வப் பெருஞ்சான்றோர் இயற்றிய திருமந்திரம் என்னும் புனித நூல், தனிப்பெரும் சிறப்புடையதாகத் திகழ்கின்றது.

தமிழ் நூல்களின் வரிசையில், இலக்கணத் துறையில் தொல்காப்பியமும், நீதி நூற் பிரிவில் திருக்குறளும், பக்திநெறிப் பனுவல்களில் திருவாசகமும், செந்தமிழ்க் காப்பியங்களிற் சிலப்பதிகாரமும், கவிதை நயச்சுவையிற் கம்பராமாயணமும், தத்துவ நுண்பொருட் செறிவில் சிவஞான போதமும், சமய குரவர் வரலாறு விளக்கும் வாய்மையிற் பெரியபுராணமும்போல, யோக ஞான அனுபவ விளக்கத் துறையிற் பெரிதும் சிறப்புற்று விளங்குவது, திருமூலர் இயற்றியருளிய திருமந்திரம் ஆகும்.

திருமந்திரம் : மக்கள் வாழ்வின் இம்மை மறுமை நலங்களுக்கு உரிய மறை பொருள் நுட்பங்கள் அனைத்தையும் ஒருங்கெடுத்துத் தெளிவித்து உரைப்பதில், திருமந்திரம் போல்வதொரு விழுமிய முழு நூலை, உலகின்கண் வேறு எந்தமொழியிலும் காண்டல் அரிது. முடிந்த முடிபான சிறந்த மந்திரங்கள், அவற்றை உருவேற்றும் முறைகள், அவற்றை அமைக்கும் சக்கரங்கள், அம் மந்திரங்களுக்குரிய மாபெரும் தெய்வங்கள், அத்தெய்வங்கள் அனைத்தும் முழுமுதற் கடவுளான சிவபரம் பொருளின் ஆணைவழிநின்று தம்மை வழிபடுவார்க்கு இம்மை மறுமைப் பயன்களை அளிக்கும் வகைகள், சரியை கிரியை யோகம் ஞானம் முதலிய தவ ஒழுக்கத்தின் பாகுபாடுகள், அவற்றை மேற்கொண்டு ஒழுகும் முறைமைகள், அழிவிலாப் பேரின்பம் ஆகிய வீடுபேற்றியல் நிலைகள், ஆகிய பலவற்றையும், முற்ற எடுத்து முடியக் கூறித் தெற்றென விளக்கும் முழு முதல் நூல், திருமூலர் திருமந்திரமேயாகும் எனத் துணிந்து கூறலாம்.

அதனாலேயே, நம் தமிழ்நாட்டில் வாழையடி வாழையாக வந்த மாபெரும் சான்றோர்

கள் பலரும், திருமூலர் அருளிய திருமந்திரத்தினைப் பெரிதும் போற்றிப் பயன் கொண்டுள்ளனர்.

இராமலிங்கர் : அண்மைக் காலத்துச் சான்றோர் ஆகிய வடலூர் இராமலிங்க அடிகளை அறியாதவர், தமிழ்நாட்டில் எவரும் இரார். அவருக்குத் திருமந்திரத்தின் பால் இருந்த ஈடுபாடு எல்லையற்றது. "தோத்திரத்தில் சிறந்தது திருவாசகம்; சாத்திரத்தில் சிறந்தது திருமந்திரம்" என்பது, இராமலிங்க அடிகளார் திருவுள்ளம். இராமலிங்கர் ஒரு பெருஞ்சித்த புருடர் என விளங்கியவர். 'பாம்பறியும் பாம்பின் கால்' என்றபடி, சித்தபுருடராகத் திகழ்ந்திருந்த இராமலிங்கர்தாம், 'கயிலாயத்தொரு சித்தர்' எனப்பெறும் திருமூலரின் அருமை பெருமைகளைச் செவ்விதின் அறிந்திருத்தல் இயலும். ஆதலின் அவர், திருமந்திரத் திருமுறையின் பெருமையையுணர்ந்து பெரிதும் போற்றிப் பயன் கொண்டார் எனத் தெரிகின்றது.

"இறைவன்ஒருசமயம் எனக்குத்தில்லைத் திருச்சிற்றம்பலத்திற்குருவடிவாகப்போந்து மெய்ம்மொழிப் பொருளை உபதேசித்தான்; பின்னர் ஒரு கால் திருமந்திரத் திருமுறையினால், அம்மெய்ம்மொழிப் பொருள் விளங்கும்படி தெளிவுமிக உணர்த்தியருளினான்; பிறிதொரு சமயம் என் உள்ளத்திலே நிலைபெற்று அம்மெய்ம்மொழிப் பொருளைக் காட்டியருளினான். இங்ஙனம் இறைவன் செப்பியதும் உணர்த்தியதும் காட்டியதும் ஆகிய மெய்ம்மொழிப் பொருள், என் உள்ளத்திலே மருவிப் பொருந்தியுள்ளது; அதனையே யான் நம்பியிருக்கின்றேன்; என்னுடைய இந்நிலையை இறைவனின் திருவுள்ளம் நன்கறியும்" என்கிறார் இராமலிங்கர்.

> "திருவளர் திருஅம் பலத்திலே அந்நாள்
> செப்பிய மெய்ம்மொழிப் பொருளும்
> உருவளர் திருமந் திரத்திரு முறையால்
> உணர்த்திய மெய்ம்மொழிப் பொருளும்
> கருவளர் அடியேன் உளத்திலே நின்று
> காட்டிய மெய்ம்மொழிப் பொருளும்
> மருவளர் உளத்தே நம்பிநான் இருக்கும்
> வண்ணமும் திருவுளம் அறியும்"

எனவரும் திருவருட்பாப் பாடல் ஒன்றே, இராமலிங்க வள்ளலார்க்குத் திருமந்திரத்தின்பால் இருந்த எல்லையற்ற ஈடுபாட்டினை இனிது புலப்படுத்தப் போதியதாகும்.

தாயுமானவர் : இராமலிங்கர்க்கு முன்பு இருந்த சான்றோர் தாயுமானவர். அவர் தம் சால்புநலம் அளப்பரியது. வேதாந்த சித்தாந்த சமரசஞான வித்தகப் பெருங்குரவர் என விளங்கியவர் தாயுமானவர்! எளிமையும் இனிமையும் தெளிவும் நிறைந்த அவர்தம் பாடல்களைச் சமயவுணர்வுடையோர் அனைவரும் ஆரா அன்பிற் போற்றி மகிழ்வர். அத்தகைய தாயுமானவர் திருமூலரின் யோகஞான நெறிமுறைகளைப் பின்பற்றி உய்ந்து உயர்ந்த சிறப்பினரே யாவர். "திருமூலரின் மரபில் வந்த மௌனகுரு என்பவரே எனக்கு ஞானகுருவாக அமைந்து அருள்புரிந்தார். என்னை உலகாயதம் (Materialism) ஆகிய புறச் சமயநெறியிற் புகுதாமல் காத்து ஆட்கொண்டார்; வேதாந்த சித்தாந்த சமரச சிவாநுபூதி நெறியில் நிற்கும்படி செய்து வாழ்வித்தார்" எனத் தாயுமானவர் குறிப்பிடுகின்றார்.

> "தரணிமிசை லோகாயதன் சமயநடை
> சாராமல், வேதாந்த சித்தாந்த
> சமரச சிவாநுபூதி
> மன்ன, ஒருசொற் கொண்டு என்னைத்
> தடுத்தாண்டு, அன்பின்
> வாழ்வித்த ஞானகுருவே!
> மந்த்ர குருவே! யோக தந்த்ர குருவே!
> மூலன்மரபில் வரும்மௌன குருவே!"

எனவரும் பாடற் பகுதியால், இவ்வுண்மை செவ்விதிற் புலனாதல் காணலாம்.

இம்மட்டோ; திருமூலரின் சிறப்புக்களையெல்லாம் நினைத்து வியந்து தாயுமானவர் அவரைச் "சக்கரவர்த்தி" என்றும், "தவராசயோகி" என்றும் குறிப்பிட்டுப் புகழ்ந்து போற்றுகின்றார்! அவருடைய அருளைத் தாம் அடையப் பெறும்நாள், எந்நாளோ என்றும் ஏக்கறுகின்றார்.

"சக்கர வர்த்தி
தவராச யோகிஎனும்
மிக்கதிரு மூலன்அருள்
மேவும்நாள் எந்நாளோ?"

என்பது, அவர் பாடியருளிய குருமரபு வணக்கச் செய்யுள்களில் ஒன்று. திருமூலர் திருமந்திரத்தின் சொற்பொருட் சுவைகளிலும், கருத்து நலங்களிலும், தாயுமானவர் பெரிதும் ஆழ்ந்து திளைத்து மகிழ்ந்துள்ளார்.

உரையற்ற தொன்றை உரைசெயும் ஊமர்காள்
கரையற்ற தொன்றைக் கரைகாணல் ஆகுமோ?
திரையற்ற நீர்போலச் சிந்தை தெளிவார்க்குப்
புரையற் றிருந்தான் புரிசடை யோனே

எனவரும் திருமந்திரச் செய்யுளின் சிறந்த நுண்பொருளில் திளைத்து வியந்து, பொன்போலப் போற்றிப் பெரிதும் பாராட்டி,

திரையற்ற நீர்போல் தெளியஎனத் தேர்ந்த
உரைபற்றி உற்றங்கு ஒடுங்கும்நாள் எந்நாளோ?

எனத் தாயுமானவர் அருளிச் செய்திருக்கும் அருமைப்பாடு, இங்கு நாம் நன்கினிது சிந்தித்து இன்புறுதற்குரியது.

அருணகிரியார் : தாயுமானவர்க்குச்சற்று முன்னே வாழ்ந்திருந்த அருளாளர் திருப்புகழ் பாடிய அருணகிரிநாதர். 'வாக்கிற்கு அருணகிரி' எனத் தமிழ்கூறும் நல்லுலகம் அவரைத் தகவுற மதித்துச் சால்புறப் போற்றி வருகின்றது. அருணகிரியாரைத் தமக்கு ஒரு ஞானத்தந்தை என்றும், அவரைப்போல ஒவ்வொரு சொல்லும் உயரிய பொருளும் அனுபவமும் அமையும்படி உண்மையாகக் கூறியவர்கள் எவரும் இலர் என்றும், தாயுமானவர் கூறுகின்றார்.

"ஐயா! அருணகிரி அப்பா! உனைப்போல
மெய்யாக ஓர்சொல் விளம்பினர்யார்?"

என்பது அவர்தம் பாடல். இங்ஙனம் தாயுமானவர் புகழ்ந்து ஏத்தும் அருணகிரியார்க்கும், திருமூலர்பால் மிக்க மதிப்பும் ஈடுபாடும் இருந்ததெனத் தெரிகின்றது. "நந்தி அருளாலே நாதனும் பேர் பெற்றேன்" என்று திருமூலர் பாடியிருப்பதனால், அருளாளர் சிலருக்கு "நாதர்" என்னும் பெயர் அமைவதுண்டு எனத் தெரிகின்றது. அம்முறையில் "அருணகிரிநாதர்" எனப் பெயர் அமைந்து வழங்கிவரும் சிறப்பு, இங்குக் கருதத்தகும். திருமூலருக்கும் அருணகிரியாருக்கும் இடையே எத்தனையோபல சொற்பொருட் கருத்தொப்புமைகள் அமைந்து காணப்படுகின்றன. அவற்றுள் ஒரு சிலவற்றைமட்டும், இங்குக் குறிப்பிடுதல் சாலும்.

திருமூலர் ஆகிய சிறந்த சிவயோகியார் ஓராண்டுக்கு ஒன்றாக, மூவாயிரம் ஆண்டுகள் தவம் இருந்து, திருமந்திரப் பாடல்கள் மூவாயிரத்தினையும் பாடியருளினர் என்பது வரலாறு. இஃது உண்மையா? இவ்வாறு இருத்தலும் இயலுமோ? காலத்தை வெல்ல எவரால் முடியும்? என நம்மில் ஒரு சிலர் ஐயப்படுவதுண்டு. இவ்வையப்பாட்டிற்கு விடையளித்து விளக்கம் தருவது போல, அருணகிரிநாதரின் பாடல் ஒன்று காணப்படுகின்றது. "சிவயோகியர்கள் காலத்தை வென்று நெடுங்காலம் நிலை பெற்றிருப்பார்கள்; அவர்களுக்கு இறப்பு என்பது இல்லை; அவர்கள் ஒருபோதும் மரிக்க மாட்டார்கள். தீவினைகளாகிய கன்மங்களைச் செய்கின்ற நம்மைப்போன்றவர்கள் தான், காலத்தை வெல்லும் வகையறியாமல் மரித்தொழிவார்கள்" என்பதனை அப் பாடல் அறிவுறுத்துகின்றது.

"நீலச் சிகண்டியில் ஏறும்பிரான்
எந்த நேரத்திலும்
கோலக் குறத்தியுடன் வருவான்;
குருநாதன் சொன்ன
சீலத்தை மெள்ளத் தெளிந்தறிவார்;
சிவயோகிகளே
காலத்தை வென்றிருப்பார்; மரிப்பார்
வெறும் கர்மிகளே"

எனவரும் கந்தரலங்காரப்பாடல், திருமூலரை நினைத்துத்தான் அருணகிரியாரால் பாடப்பெற்றதோ, என நாம் நினைத்து மகிழும்படி அமைந்துள்ளது.

"ஏற்றி இறக்கி இருகாலும் பூரிக்கும்
காற்றைப் பிடிக்கும் கணக்கறிவார் இல்லை
காற்றைப் பிடிக்கும் கணக்கறிவாளர்க்குக்
கூற்றை உதைக்கும் குறியது வாமே"

என்பன போன்று வரும் திருமந்திரப் பாடல்கள், சிவயோகிகள் காலத்தை வென்றிருப்பார் என்னும் செய்திக்குச் சிறந்த சான்று பகருதல் காணலாம்.

"ஒத்துப் புலனுயிர் ஒன்ருய் உடம்பொடு
செத்திட் டிருப்பர் சிவயோகி யர்களே

எனவரும் திருமந்திரப்பாடற் பகுதியின் பொருளேயே தழுவி விளக்கும் முறையில்,

"நின்னை உணர்ந்துணர்ந்து எல்லாம்
ஒருங்கிய நிர்க்குணம்பூண்டு
என்னை மறந்திருந்தேன்; இறந்தே
விட்டது இவ்வுடம்பே"

என அருணகிரிநாதர் கந்தரலங்காரத்தின் கண் அருளிச் செய்திருத்தல், அறிந்தின் புறற்பாலது.

"கரும்பும் தேனும் கலந்ததோர் காயத்தின்
அரும்பும் கந்தமும் ஆகிய ஆனந்தம்
விரும்பியே உள்ளம் வெளியுறக் கண்டபின்
கரும்பும் கைத்தது தேனும் புளித்ததே"

என இறையருட் பேற்ருல் எய்தும் இன்பச் சுவை நலத்தின் சிறப்பினைத் திருமூலர் விளக்கியருள்கின்ருர். இதனைத் தாமும் அனுபவித்து உணர்ந்து உடன்பட்டு வலியுறுத்தி அநுவதித்து மொழிபவர் போல,

"பெரும்பைம் புனத்தினுள் சிற்றேனல்
காக்கின்ற பேதை கொங்கை
விரும்பும் குமரனை மெய்யன்பினுல்
மெல்ல மெல்ல உள்ள
அரும்பும் தனிப்பர மானந்தம்;
தித்தித்து அறிந்த அன்றே
கரும்பும் துவர்த்துச் செந்தேனும்
புளித்து அறக் கைத்ததுவே"

என அருணகிரிநாதர் பாடியிருத்தல், அவருக்குத் திருமூலர் திருமந்திரத்தின்பால் அமைந்திருந்த அளப்பரிய பேரார்வத்தினையும், பெருமதிப்பினையும் புலப்படுத்தும்.

சிவநெறிச் சான்ருேர் : இனி சேக்கிழார் பெருமான், நம்பியாண்டார் நம்பிகள், சுந்தர மூர்த்தி சுவாமிகள் என்னும் சிவநெறிப் பெருஞ் சான்ருேர்கள், திருமந்திரத்தைப் போற்றிய திறத்தினைத் தனியே விரித்து உரைக்கவேண்டுவது இல்லை. சேக்கிழார் பெருமான் திருமூலரின் வரலாற்றினைச் சிறப்புறவும் சுவைபெருகவும் பாடியிருப்பதுடன்,

"ஊனுடம்பிற் பிறவிவிடம்
தீர்ந்துலகத் தோர்உய்ய
ஞானம்முதல் நான்கும்மலர்
நற்றிருமந் திரமாலை"

என்றும், இனிதெடுத்து விளக்கிப் புகழ்ந்து போற்றுகின்ருர். நம்பியாண்டார் நம்பிகளோ, தம்முடைய திருத்தொண்டர் திருவந்தாதி என்னும் நூலில்,

குடிமன்னு சாத்தனூர்க் கோக்குலம்
மேய்ப்போன் குரம்பைபுக்கு
முடிமன்னு கூனற் பிறையாளன்
தன்னை, முழுத்தமிழின்
படிமன்னு வேதத்தின் சொற்படியே
பரவிட்டு, என்உச்சி
அடிமன்னவைத்த பிரான்
மூலன் ஆகின்ற அங்கணனே

என்னும் பாடலில், திருமூலரை "என் உச்சியில் தம்திருவடியை மன்னும்படி வைத்த பிரான், அங்கணன் (அருள் நோக்கம் உடையவன்)" என்றும்; திருமந்திரத்தை "முழுத்தமிழின்படி மன்னும் வேதத்தின் சொல்" என்றும் புகழ்ந்து போற்றுகின்ருர்.

நம்பியாண்டார்க்கு முற்பட்ட நம்பியாரூரர் ஆகிய சுந்தரமூர்த்தி சுவாமிகளோ, தாம் "சகமார்க்கம்" என்னும்யோக நெறிக்குரிய தலைவராதலின், அவ்யோக நெறியிற் கைவந்த திருமூலரையே தமக்குரிய குருவும் தலைவருமாகக் குறிப்பிட்டு "நம்பிரான் திருமூலன் அடியார்க்கும் அடியேன்" என

அருளிச் செய்தார். "நாடுவன் நாடுவன் நாபிக்கு மேலே ஓர் நால்விரல்" எனத் திரு வாய் மலர்ந்திருந்தலின், சுந்தரர் யோக நெறி நின்றவர் என்பது புலனாகும்.

திருநாவுக்கரசர்: இனி திருநாவுக்கர சரும் திருமந்திரத்ததை ஓதித் தெளிந்து சிறந்தவரே எனக் கூறுதல் பொருந்தும். திருநாவுக்கச்சரின் தேவாரத்தில் திருமந்தி ரத்தை நினைவூட்டும் பகுதிகள் பற்பல காணப்படுகின்றன.

"ஒன்றி யிருந்து நினைமிகள்;
உந்தமக்கு ஊனம் இல்லை"

"என்னுளே உயிர்ப்பாய்ப் புறம்போந்துபுக்கு
என்னுளே நிற்கும் இன்னம்பர் ஈசனே"

"உயிரா வணம்இருந்து உற்று நோக்கி
உள்ளக் கிழியின் உருவெழுதி"

என்பனபோல வரும் பாடற் பகுதிகள், திரு மந்திரம் விளக்கும் யோகச் செந்நெறியின் இயல்பினையே உட்கிடையாகக் கொண்டு விளங்குகின்றன.

"தன்னினில் தன்னை அறியும் தலைமகன்
தன்னினில் தன்னை அறியத் தலைப்படும்
தன்னினில் தன்னைச் சார்கிலன் ஆகில்
தன்னினில் தன்னையும் சார்தற் கரியனே"

எனவரும் திருநாவுக்கரசர் திருக்குறுந் தொகைப் பாடல்,

"தன்னை அறியத் தனக்கொரு கேடில்லை
தன்னை அறியாமல் தானே கெடுகின்றான்
தன்னை அறியும் அறிவை அறிந்தபின்
தன்னையே அர்ச்சிக்கத் தான்இருந் தானே"

எனவரும் திருமந்திரப்பாடலையே பெரிதும் அடியொற்றியமைந்தது போலக் காணப் படுகின்றது.

"வானம் துளங்கில்என்? மண்கம்பம்
ஆகில்என்? மால்வரையும்
தானம் துளங்கித் தலைதடு
மாறில்என்? தண்கடலும்
மீனம் படில்என்? விரிசுடர்
வீழில்என்? வேலைநஞ்சுண்டு
ஊனம் ஒன் றில்லா ஒருவனுக்கு
ஆட்பட்ட உத்தமர்க்கே"

என்னும் திருநாவுக்கரசர் திருவிருத்தம்,

வான்நின் றிடிக்கில்என்? மாகடல் பொங்கில் என்?
கான்நின்ற செந்தீக் கலந்துடன் வேகில்என்?
தான்ஒன்றி மாருதம் சண்டம் அடிக்கில்என்?
நான்ஒன்றி நாதனை நாடுவன் நானே

எனவரும் திருமந்திரப் பாடலைப் பெரிதும் நினைவூட்டும் வகையில் அமைந்து விளங்கு தல் காணலாம். இவ்வாறே,

எந்தையும் என்னை அறியகி லான்ஆகில்
எந்தையை யானும் அறியகில் லேனே"

என்னும் திருமந்திரப் பாடல் (2428) வரி களை நினைப்பித்து, அவற்றின் பொருளை விரித்துரைத்து விளக்குதல் போல,

"என்னை ஏதும் அறிந்திலன் எம்பிரான்
தன்னை நானும்முன் ஏதும் அறிந்திலேன்
என்னைத் தன்அடி யான்என் றறிதலும்
தன்னை நானும் பிரான்என் றறிந்தெனே"

எனவரும் திருநாவுக்கரசர் திருக்குறுந் தொகைப் பாடல் அமைத்திருக்குந்தன்மை நாம் சிந்தித்து மகிழும் நலமுடையதாகும்.

திருஞான சம்பந்தர் : திருஞானசம்பந் தர் திருவாவடுதுறைக்கு வந்து இங் குள்ள மாசிலாமணி ஈசரையும், ஒப்பிலா முலை அம்மையையும் வழிபட்டபோது, இங்கே தமிழ்மணம் கமழ்தலை யுணர்ந்து, பலிபீடத்தின்கீழ் இருந்து திருமந்திர ஏடு களை ஆராய்ந்து வெளிப்படுத்தியருளினர் என்பது வழிவழிச் செய்தி.

"அப்பரிசு எண்பத்துநான்குநூ றுயிரம்
மெய்ப்பரிசு எய்தி விருந்துயிராய் நிற்கும்"

எனவரும் திருமந்திரப் பாடலின் கருத்து.

"உரைசேரும் என்பத்து நான்குநூறு
ஆயிர மாம் யோனி பேதம்
நிரைசேரப் படைத்தவற்றின் உயிர்க்குயிராய்
அங்கங்கே நின்றான் கோயில்"

என்னும் திருஞானசம்பந்தர் தேவாரப் பாட லிலும் சிறப்புற மருவி வந்துள்ளது. மேலும் திருஞானசம்பந்தர்க்கு "ஆணை

நமது என்ன வல்லான்" என்ற ஒரு சிறப் புப் பெயர் உண்டு.

"நனிபள்ளி உள்க வினைகெடுதல்
ஆணை நமதே" (2.84.11)

"வானில் அரசாள்வர்
ஆணை நமதே" (2.84.11)

"அந்தஉலகு எய்தி அரசாளும்
அதுவே சரதம் ஆணை நமதே" (3.78.11)

"வானிடை வாழ்வர் மண்மிசைப் பிறவார்
மற்றிதற்கு ஆணையும் நமதே (3.118.11)

எனத் திருஞான சம்பந்தர், தம்திருப்பதிகங் களில் "ஆணை நமதே" என அருளிச் செய் திருத்தல் காணலாம். ஏனைய பிற திரு முறையாசிரியர்கள் எவரும் இங்ஙனம் ஆணையிட்டுப் பாடியிருக்கக் காண்கின்றி லோம். திருஞானசம்பந்தர் ஒருவர் மட் டுமே இவ்வாறு திருவாய்மலர்ந்தருளியுள் ளார். அவருக்கு இத்துறையில் வழிகாட்டி யாக அமைந்தவர்,

"நிறைமொழி மாந்தர் ஆணையிற் கிளந்த
மறைமொழி தானே மந்திரம் என்ப"

என்னும் தொல்காப்பிய நூற்பாவுக்கு ஏற்ப, ஆணையிற் கிளந்து பற்பல திருமந் திரப் பாடல்களை (516, 532, 534, 590, 722 730, 734, 805) அருளிச் செய்த திருமூல ரேயாவர் எனத் துணிந்து கூறலாம்.

மணிவாசகர்: 'இவ்வாறே பைந்தமிழ் நவின்ற செந்நாப் புலவன்' எனக் குமரகுரு பரராற் புகழ்ந்து போற்றப்பட்ட மணிவாச கப்பெருமானுக்கும், திருமந்திரத்தில் மிக்க ஈடுபாடு இருந்ததென்று தெரிகின்றது.

எட்டும் இரண்டும் இனிதறி கின்றிலர்
எட்டும் இரண்டும் அறியாத ஏழையார்

என்னும் திருமந்திரப்பாடலைப் நினைப்பிக் கும் வகையில்,

"பட்டி மண்டபம் ஏற்றினை ஏற்றினை
எட்டி னோடுஇரண் டும்அறியே னையே"

எனவரும் திருவாசகப் பாடற்பகுதி இலங்கு கின்றது. இஃதொன்றோ? அம்பிகை இறைவனுக்கு அருட்சத்தியாய்ப் பலவகை நிலைகளிலும் வயங்கிநிற்கும் பெருமாண் பினை வியந்து,

"வாயும் மனமும் கடந்த மனோன்மணி
பேயும் கணமும் பெரிதுடைப் பெண்பிள்ளை
ஆயும் அறிவும் கடந்த அரனுக்குத்
தாயும் மகளும்நல் தாரமும் ஆமே"

என ஆசிரியர் திருமூலர் அருளிச் செய் திருப்பதனைத் தழுவி,

"எம்பெருமான் இமவான் மகட்குத்
தன்னுடைக் கேள்வன் மகன்
தகப்பன் தமையன்'

என மணிவாசகப் பெருமானும், சுவை கெழுமப் பாடியிருத்தலைக் காண்கின்றோம்.

முடிவுரை: இவ்வாறே சைவசித்தாந்த தத்துவ நெறிப் பெருஞ் சான்றோர்களான ஆசிரியர் மெய்கண்டார், அருள்நந்தி சிவம், உமாபதி சிவம் போன்ற பெருமக்க ளும், திருமந்திர நூலைப் பயின்று, அதன் சொற்பொருட் கருத்துச் சுவை நலங்களிற் பெரிதும் தோய்ந்து, அதன் அரிய பெரிய விழுமிய கருத்துக்களைத் தத்தம் நூல் களிற் பொதிந்து போற்றிப் பயன்கொண்டி ருக்கக் காண்கின்றோம். அது பெரிதும் விரி வாக ஆராய்ந்து அறிதற்குரியது. ஆத லின் அதனைப் பிறிதொருகாற் கருதி மகிழ் வோம்.

இதுகாறும் கூறியவாற்றால், அண்மைக் காலத்தில் இருந்த இராமலிங்கர் முதலாகத் தொன்மைக்காலத்தில் விளங்கிய சான் றோர்கள் பற்பலரும், திருமூலர் அருளிய திருமந்திரத்தினைப்போற்றிப் பயின்று பயன் கொண்டு மகிழ்ந்தனர் என்னும் உண்மை இனிது புலப்படும். ஆதலின், அத்தகைய பெருஞ்சிறப்பு வாய்ந்த திருமந்திர நூலினை நாமும் பால்காற் பாங்குறப் பயின்று நலம் பலவும் எய்தி உய்ய முயலுவோமாக!

[திருவாவடுதுறை ஆதீனத்தில் நிகழ்ந்த திருமந் திர மாநாட்டில், குருமகா சந்நிதானம் ஸ்ரீலஸ்ரீ **அம்பலவாண தேசிக பரமாசாரிய சுவாமிகள்** அவர் கள் திரு முன்னிலையில், **அருள்மொழியரசு திரு முருக கிருபானந்த வாரியார்** அவர்களின் தலைமை யில், ஆற்றிய சொற்பொழிவின் ஒருபகுதியைத் தழுவியது. (17—1—69)]

—ஆசிரியர்

திருமால் நெறியும் திருக்குறளும்

முன்னுரை :

தமிழ் நாட்டில் நிலவி வரும் பழம்பெருஞ் சமயங்களுள், திருமால் நெறியும் ஒன்று. பௌத்தம் சமணம் முதலிய பிற சமயங்களைப் போலத் திருமால் நெறியானது, தமிழ் நாட்டில் புதிதாக வந்து புகுந்த தொன்றன்று. சிவநெறியைப் போலவே திருமால் நெறியும், தொன்று தொட்டே தமிழ்நாட்டில் நின்று நிலவி வந்த பெருஞ் சிறப்புடைய தொரு சமயம் ஆகும்.

தொல்காப்பியம் :

நிலப்பரப்பை முல்லை குறிஞ்சி மருதம் நெய்தல் பாலை என்னும் திணைகளாகப் பகுத்தும், அத்திணைகளுக்கு உரிய தெய்வங்களை வகுத்தும் போந்த பண்டைத் தமிழ்ப் பெருஞ்சான்றோர்கள், காடும் காடு சார்ந்த நிலமுமான முல்லைத் திணையையும், அதன் அதிதெய்வமான திருமாலையும், முதற்கண் வைத்துச் சிறப்பித்துக் கூறியுள்ளமையைத் தொல்காப்பியம் என்னும் பழந்தமிழ் இலக்கணப் பெருநூலிற் காணலாம். இற்றைக்குச் சற்றேறத்தாழ ஐயாயிரம் ஆண்டுகளுக்கு முற்பட்ட தொல்காப்பியம், "மாயோன் மேய காடுறை யுலகம்" எனக் கூறும் கருத்தினைத் தழுவியே, சிவநெறிச் சான்றோர் ஆகிய ஆசிரியர் சேக்கிழார் பெருமானும்,

"அங்கண் முல்லையின் தெய்வம்
என்று அருந்தமிழ் உரைக்கும்
செங்கண்மால்........."

எனத் தமது பெரிய புராணத்தினுள் திருமாலைச் சிறப்பித்துப் பாடியுள்ளமை காணலாம். திருமாலை 'மாயோன்' என்று செவ்விதிற் குறிப்பிடும் தொல்காப்பியம், அவர்தம் அளப்பரும் புகழினை,

"மாயோன் மேய மன்பெருஞ் சிறப்பில்
தாவா விழுப்புகழ்"

என்று திறந்தெரிந்து சிறந்தெடுத்துப் போற்றியிருக்கின்றது. இவ்வாற்றால், திருமால் நெறியின் பழம்பெருஞ் சிறப்பினை, யாவரும் இனிதுணரலாம்.

திருக்குறள் :

திருக்குறள் தமிழ் நூல்களுள் தலைசிறந்தது. "தமிழ் வேதம்" என்று சான்றோர்கள் பலரானும் போற்றிப் பாராட்டப் பெறுவது. உயர்வற உயர்ந்த உண்மைகளை உலக மக்கள் அனைவருமே உவந்து ஏற்றுக் கொள்ளும் வண்ணம், எல்லாக் காலத்திற்கும் இடத்திற்கும் பொருந்தும் படி, எத்தகைய வேறுபாடும் நிகழாமல், சுருங்கச் சொல்லி விளங்க வைக்கும் திறனில், திருக்குறளுக்கு இணையாக வேறொரு நூலைக் காண்டல் அரிது. இனைய பல சிறப்பியல்புகள் பற்றியே, எல்லாச் சமயத்தாரும் திருக்குறளைத் தத்தம் சமயத்திற்கு உரிய நூல் என்று தழுவிப் போற்றிக் கொண்டு மகிழ்ந்தின் புறுகின்றனர். அந் நிலையில், தமிழ் நாட்டின் பழம்பெருஞ் சமயமாகிய திருமால் நெறிக்கும், தமிழ் நூல்களுள் எல்லாம் தலைசிறந்த திருக்குறளுக்கும் இடையேயுள்ள இயைபினை, ஒரு சிறிது ஆராய்ந்து விளக்குவதே, இக் கட்டுரையின் நோக்கம் ஆகும்.

குறளின் ஈரடி :

திருக்குறளை நினைக்கும்போதே, திருமால் நெறியினர் அல்லாத பிறருக்கும்

கூடத் திருமால் பற்றிய நினைவு எழுவதாகத் தெரிகின்றது. குறள் என்னும் வெண்பா வகையினால், இயன்ற காரணம் பற்றி, அடையடுத்த கருவியாகு பெயராக அமைந்த 'திருக்குறள்' என்னும் பெயர்ச் சிறப்பில் ஈடுபட்ட பழம் பெருங் கவிஞர் ஒருவர், திருமாலின் அவதாரங்களுள் ஒன்றாகிய வாமனாவதாரத்திற்கும் அப் பெயர் பொருந்து மாற்றினை நினைந்து, அதனோடு இதனிடையுள்ள ஒப்புமை தோன்ற விளக்குகின்றார்.

முன்னொரு காலத்தில் திருமால் மாபலியிடம் குறள் (வாமன) வடிவம் எடுத்துச் சென்று, மூவடி நிலம் கேட்டுப் பின்னர் ஓங்கி வளர்ந்து உலகம் முழுவதையும் தனது இரண்டு அடிகளால் அளந்து முடித்தார்; அது போலத் திருவள்ளுவரும் மக்கள் நினைக்கும் கருத்துக்கள் எல்லாவற்றையும் தமது குறள் வெண்பாவின் இரண்டு வரிகளினாலேயே முற்ற அளந்து முடித்து விட்டார்" என்னும் கருத்து அமையுமாறு,

"மாலும் குறளாய் வளர்ந்திரண்டு மாணடியால்
ஞாலம் முழுதும் நயந்தளந்தான்—வாலறிவின்
வள்ளுவரும் தம்குறள்வெண் பாவடியால் வையத்தோர்
உள்ளுவஎல் லாம் அளந்தார் ஓர்ந்து"

என நயங்கெழும, அவர் நன்கினிது பாடியுள்ளார். 'குறள்' என்னும் சொல்லின் இருபொருட்பெற்றி தோற்றி, ஈரடியால் அளந்த இயல்பையும், ஓங்கி வளரும் உயர்வும் பிறவும் ஆகிய ஒப்புமைப் பண்புகளையும் காட்டி, இப்பாடல் திருக்குறளின் சிறப்பைச் செவ்விதின் உணர்த்துகின்றது.

பவம் பத்து :

திருக்குறளின் சிறப்பைத் திருமால் எடுத்த திருக்குறள் (வாமனர்) அவதாரம் பற்றி நினைந்து, பழங்கவிஞர் ஒருவர் பாடவே, திருமால் எடுத்தருளிய பத்து அவதாரங்களையுமே நினைவு கூர்ந்து, "திருமால் பத்து அவதாரங்கள் எடுத்து உலகைத் திருத்தி உய்யக் கொள்ளக் கருதினார்; அதுபோலத் திருவள்ளுவரும், தாம் கூறக் கருதும் ஒரு பொருளைப் பத்து முறை வற்புறுத்தி உலகைத் திருத்தி உய்யக் கொள்ள விரும்பினார்" என்று, துறைமங்கலம் சிவப்பிரகாசர் நிறைநயம் பொலியப் பாடுகின்றார்.

"வற்புறுத்த ஓர் பொருளை வள்ளுவனார் பத்துமுறை
சொற்பொருத்தி ஓதும் துணிவுபோல்,
—தற்பதத்தால்
ஓதும் பிரமமது தான்என்ப தொன்றனைமால்
காதுபவம் பத்தெடுத்துக் காட்டினான்"
—திருவெங்கையுலா.

திருவள்ளுவர் :

ஆசிரியர் திருவள்ளுவர் இற்றைக்கு இரண்டாயிரம் ஆண்டுகளுக்கு முன்பு தமிழ் நாட்டில் தோன்றி வாழ்ந்து விளங்கியிருந்தவர். அவர் தமது திருக்குறளில் எந்த ஒரு சமயத்தையேனும், எந்த ஒரு சமயத்திற்குரிய கடவுளையேனும், தனிச் சிறப்பாகச் சுட்டிக் கிளந்து கூறிக் குறிப்பிட்டுரைக்கக் காண்கின்றிலோம். அதனாலேயே,

"சமயக் கணக்கர் மதிவழி கூறாது
உலகியல் கூறிப் பொருள்இது என்ற
வள்ளுவன்........."

என்று கல்லாடனார் என்னும் கவிஞர், திருவள்ளுவர் பெருமானைச் சிறப்பித்துரைப்பாராயினர். "எல்லா நூல்களிலும் நல்லன எடுத்து எல்லார்க்கும் பொதுப்படக் கூறுதல் இவர்க்கு இயல்பு" என ஆசிரியர் பரிமேலழகரும், திருவள்ளுவரின் நடுவு நிலைப் பொதுமை நல்லியல்பின் திறத்தினைப் பெரிதும் விதந்து விளக்கியுள்ளமையும் இங்கு நாம் கருதத்தகும்.

இங்ஙனம் எந்த ஒரு சமயத்தினையும் கிளந்து குறிப்பிட்டுக் கூறாமல், 'பாலிற்படும் நெய்போல்' மறைய நின்று வெளிப்படும்படியே பெரும்பாலும் தமது கருத்துக்களைக் கூறிச் செல்லும் இயல்பேயுடையவர் திருவள்ளுவர். எனினும் தயிரின் நெய்போல்' விளங்கித் தோன்றும்படி, அவர் இயற்றியருளிய திருக்குறளில் இரண்டிடங்களில் திருமால் பற்றிய குறிப்புக்கள் அமைந்து காணப்படுகின்றன.

திருக்குறளில் திருமால் :

"மடியிலா மன்னவன் எய்தும்;
அடியளந்தான்
தாஅயது எல்லாம் ஒருங்கு"

(1) திருக்குறளில் 'அரசியல்' என்னும் பகுதியில் ஓர் அரசன்பால் அமைந்திருத்தற்குரிய அரும்பெருங் குணநலங்களைப் பற்றிக் கூறி வருங்கால், 'மடியின்மை' என்னும் அதிகாரத்தில், "கருதிய செயல்களை முடித்தற்கண் சோம்புதல் இல்லாத அரசன், வாமனனாக வந்து திரிவிக்கிரமனாக வளர்ந்து தனது திருவடியினால் எல்லா உலகையும் அளந்தவர் ஆகிய திருமால் தாவிக் கடந்ததாகிய இந்நிலவுலகம் முழுவதையும், முறையே சிறிது சிறிதாக அன்றி, ஒருசேரத் தனக்கு உரியதாக அடைவான்" என்கின்றார்.

சோம்பற்றன்மை யில்லாத அரசன், இந்நிலவுலகம் முழுவதையும் ஒரு சேரத் தனக்கு உரியதாகப் பெறுவான் என்று கூறுதலே கருத்தாயினும், இந் நிலவுலகத்தினை 'அடியளந்தான் தாஅயது' எனக் குறிப்பிட்ட திறத்தால், திருவள்ளுவர்க்குப் பொதுவாகத் திருமால் நெறியிலும், சிறப்பாகத் திரிவிக்கிரமாவதாரத்திலும் இருந்த ஈடுபாடு இனிது வெளிப்பட்டுப் புலனாகின்றது.

"நனந்தலை உலகம் வளைஇ நேமியொடு
வலம்புரி பொறித்த மாதாங்கு தடக்கை
நீர்செல நிமிர்ந்த மாஅல் போலப்
பாடிமிழ் பனிக்கடல் பருகி வலனேர்பு
கோடுகொண்டு எழுந்த கொடுஞ்செலவு எழிலி"
—முல்லைப்பாட்டு.

"மூவுலகமும் ஈரடியால் முறைநிரம்பா
வகைமுடியத் தாவிய சேவடி........."
—சிலப்பதிகாரம்

எனச் சங்க நூல்களிலும்,

"அறியாமைக் குறளாய்
நிலம் மாவலி மூவடி என்று
அறியாமை வஞ்சித்தாய்
எனதாவி யுட்புகுந்தே"

"எதிர்சூழல் புக்கு எனைத்தோர் பிறப்பும்
எனக்கே அருள்கள் செய்ய
விதி சூழ்ந்ததால் எனக்கேல்
அம்மான் திரிவிக்கிரமனையே"

எனவும் பிறவாறும் ஆழ்வார் அருளிச் செயல்களிலும், புகழ்ந்தோதப் பெற்ற வாமன திரிவிக்கிரம அவதாரங்களைப் பற்றிய அரிய பல குறிப்புக்கள், மேலைத் திருக்குறளில் அமைந்திருத்தல், நாம் பெரிதும் எண்ணி இன்புறுதற்குரியது.

(2) இவ்வாறே திருக்குறளில், காமத்துப்பால் என்னும் பகுதியில், 'புணர்ச்சி மகிழ்தல்' என்னும் தலைப்பில், இயற்கைப் புணர்ச்சி நிகழ்ந்ததற்பின் தலைவனின் மனத்தளர்ச்சி நிலையைக் கண்டு "எல்லையற்ற இறையருட் பேரின்பத்திற் குரிய நீ, இழிந்த இச் சிற்றின்பம் குறித்து இங்ஙனம் தளர்தல் ஆகாது" என்ற பாங்கனுக்கு, "அழகிய செந்தாமரை மலரைப் போன்ற சிவந்த கண்களையுடையவனான திருமாலின் மிகச் சிறந்த வைகுந்த உலகமும், காதலர்கள் தாம் விரும்புகின்ற காதலியரின் மெல்லிய தோள்களில் துயிலப் பெறும் துயிலைப் போல இனிமையுடையதாகுமோ" எனத் தலைவன் மறுமொழி பகர்வதாகத் திருவள்ளுவர் குறிப்பிடுகின்றார்.

"தாம்வீழ்வார் மென்தோள் துயிலின்
இனிதுகொல்
தாமரைக் கண்ணான் உலகு"

என்பது, அவ்வினிய திருக்குறள். இதன்கண் திருமாலைத் "தாமரைக் கண்ணான்" என்றும், அவனது வைகுந்தம் இன்பப் பேற்றிற்கு இணையற்ற பேரெல்லையாக விளங்குவதாதலின், அதனையே விதந்து குறிப்பிட்டுக் கூறி, அதனின் "இனிது கொல்" என்றும், தலைவனின் கூற்றாகத் திருவள்ளுவர் குறிப்பிட்டுள்ள திறம் உன்னித்து உணரற்பாலது.

'தாமரைக் கண்ணான்' என்னும் சொற்றொடரால் சிறப்பாகக் குறிக்கத் தக்கவர் திருமாலே என்பது,

"திரிவிக் கிரமன்
செந்தாமரைக்கண் எம்மான்" (2657)
"வாமனன் என்மரகத வண்ணன்
தாமரைக் கண்ணினன்" (2858)
"சிரீஇதரன் செய்ய
தாமரைக் கண்ணன்" (2859)

"தாமரைக் கண்ணுவோ
தமியேன் தனியாளாவோ" (2392)
"என்செய்ய தாமரைக் கண்ணன்
என்னை நிறை கொண்டான்" (3140)

என்பனபோல வரும் எண்ணற்ற பாசுரங்களால், இனிது தெளியப்படும். வைகுந்தத்தில் நித்திய சூரிகளால் இமையாது விழித்திருந்து பெறற்பாலதாகிய இன்பத்தினை இங்குத் துயின்றே பெறுதலும்; 'மரணமானல் வைகுந்தம் கொடுக்கும் பிரான்' என்றபடி, இறந்த பின்னர் மறுமையில் அவ்வுலகில் பெறுதற்குரிய இன்பத்தினை உயிர் வாழ்ந்தே இம்மையில் இவ்வுலகிற் பெற்று நுகர்தலும்; அரிய பெரிய தவங்கள் பலசெய்து வருந்த வேண்டாமல் எளிதாகக் கிடைத்தலும் ஆகிய இயல்புகள் தோன்றுமாறு, தலைவனின் கூற்றாக இத்திருக்குறள் அமைந்திருக்கும் திறன், வியந்து பாராட்டி மகிழ்தற்குரியது.

ஆழ்வார் அருளிச் செயல் :

இதுகாறும் திருக்குறளில் திருமால் பற்றிய குறிப்புக்கள் வந்திருத்தலைக் கண்டோம். இனி வேறொரு வகையாலும் திருக்குறளுக்கும் திருமால் நெறிக்கும் இடையேயுள்ள தொடர்பினை ஆராய்தல் கூடும். திருமால்நெறியின் சிறந்த சான்றோர்களாக விளங்கிய ஆழ்வார்களின் அருளிச்செயல் ஆகிய திருப்பாடல்களில், திருக்குறளை நினைப்பிக்கும் வகையில் எங்கேனும் இடையிடையே, வரும் ஒரு சில ஒப்புமைப் பகுதிகளையும், இங்கு நாம் ஆராய்ந்து கண்டு மகிழ்தல் நலம் பயக்கும்.

(1) 'ஆதிபகவன்' என்னும் திருக்குறட் சொற்றொடர் 'ஆதியம் பகவன்' (1.3.5) என ஆழ்வார் வாக்கிலும் பயின்றுள்ளது. 'மலர்மிசை ஏகினன்' என்னும் திருக்குறட் கருத்து, "மனன்நக மலம்அற மலர்மிசை எழுதரும்" (2676) எனத் திருவாய்மொழியில் அமைந்து இருக்கக் காண்கின்றோம். 'அறவாழிஅந்தணன்' என்னும் சொற்றொடர், "அறவனை ஆழிப்படை அந்தணனை மறவியை யின்றி மனத்து வைப்பாரே" (2741) என்புழியும் பெரிதொத்துக் காணப்படுகின்றது. 'பிறவிப் பெருங்கடல்' என்னும் உருவகக் கருத்தின் தெளிபொருள் "புணைவன் பிறவிக்கடல் நீந்துவார்க்கே" (2864) என விளக்கப்பெற்றது.

(2) 'நாள்என ஒன்று போற் காட்டி உயிர்ஈரும் வாள்' என்னும் திருக்குறள் 'வாள்களாகி நாள்கள் செல்ல' என்னும் திருமழிசை யாழ்வார் பாசுரப் பகுதியை ஒத்துக் காணப்படுகின்றது.

(4) 'வித்தும் இடல்வேண்டும் கொல்லோ' என்னும் திருவள்ளுவரின் திருக்குறட் கருத்தினை,

வித்தும் இடல்வேண்டும் கொல்லோ விடையடர்த்த
பத்தி உழவன் பழம்புனத்து—மொய்த்தெழுந்த
கார்மேகம் அன்ன கருமால் திருமேனி
நீர்வானம் காட்டும் நிகழ்ந்து

எனத்திருமழிசையாழ்வார், இனிது விரித்து விளக்கியருள்கின்றார்.

(5) 'கண்டுகேட்டு உண்டு உயிர்த்து' எனத் தொடங்கும் திருக்குறள், நம்மாழ்வார் அருளிச் செய்த

" கண்டு கேட்டு உற்றுமோந்து
உண்டுழலும் ஐங்கருவி
கண்ட இன்பம் தெரிவரிய
அளவில்லாச் சிற்றின்பம் "

என்னும் திருவாய்மொழிப்பாடலில் எதிரொலி புரிந்து இன்பம் விளைவிக்கின்றது.

(6) 'ஊரவர் கவ்வை எருவாக' எனத் தொடங்கும் திருக்குறளின் சொற்பொருட் கருத்துக்கள்,

" ஊரவர் கவ்வை எருவிட்டு
அன்னைசொல் நீர்மடுத்து
ஈரநெல் வித்தி முளைத்த
நெஞ்சப் பெருஞ்செய்யுள்... "

என்னும் திருவாய்மொழிப் பாடலிற் சிறப்புறப் பொருந்தியுள்ளன.

(7) திருமங்கையாழ்வார் அருளிச் செய்த "சிறிய திருமடல்" என்னும் சிறந்த நூலின்கண்,

"பாரோர் சொலப்பட்ட மூன்றன்றே; அம்மூன்றும்
ஆராயில் தானே அறம்பொருள் இன்பம்என்று

"ஆரார் இவற்றின் இடையதனை எய்துவார்
சீரார் இருதலையும் எய்துவார்......"

எனவரும் இனிய வரிகள், திருவள்ளுவர் இயற்றிய திருக்குறளின்கண் சொல்லப் பட்ட அறம்பொருள் இன்பம் என்னும் முப்பால்களை நினைவூட்டி நிற்கின்றன.

(8) இவ்வாறே, திருமங்கையாழ்வார் அருளிச் செய்த "பெரிய திருமடல்" என்னும் நூலின்கண்,

"அன்ன நடையார் அலர்ஏச ஆடவர்மேல்
மன்னும் மடல்ஊரார் என்பதோர் வாசகமும்
தென்னுரையிற் கேட்டறிவ துண்டு......"

எனவரும் எழில்கனிந்த வரிகளும், 'கடல் அன்ன காமம் உழந்தும் மடல் ஏருப் பெண்ணிற் பெருந்தக்க தில்' என்னும் திருக் குறளை இனிது குறிப்பிடுவதாகக் காணப் படுகின்றன.

அருளிச்செயல் உரைகள் :

இனி வேருெரு வகையாலும் திருக்குற ளுக்கும் திருமால் நெறிக்கும் இடையே யுள்ள தொடர்பினை நாம் ஆராய்ந்தறிந்து மகிழலாம். திவ்வியப் பிரபந்தம் என்னும் தெய்வச் செந்தமிழ்ப் பனுவல்களுக்கு உரை வகுத்தருளிய பெரியோர்கள், தமது வியாக்கியானத்தின்கண் இடையிடையே ஒரோவழி திருக்குறட்பாடல்களை எடுத்துக் காட்டி யிருக்கின்றனர். அவ்வாற்ருல், அவ்வருட்பெருஞ் சான்ருேர்கள் திருக்குற ளின்பால் கொண்டிருந்த அன்பும் நன்கு மதிப்பும் புலனுகின்றன.

(1) திருவாய் மொழியில் "என் நீர்மை கண்டுஇரங்கி இதுதகாது என்னுத என் நீல முகில்வண்ணன்" என்னும் பாசுரத் திற்கு உரை விரிக்குங்கால், பட்டரை ஒரு தமிழன், இப்பாடலில் தலைவி 'கேட்டிரங்கி' என்னுமற் 'கண்டிரங்கி' என்னப் பெறுமோ? அணைத்த கை நெகிழ்ந்த அளவிலே வெளுத்தபடி கண்டால் பிரியத் தகாது என்றிருக்க வேண்டாவோ? இப் படிக் கூடுமோ? என்ருன். அதற்குப் பட்டர்,

'புல்லிக் கிடந்தேன் புடைபெயர்ந்தேன் அவ்வளவில்
அள்ளிக்கொள் வற்றே பசப்பு"

என்னும் திருக்குறளையும்,

"ஊருண் கேணி உண்துறைத் தொக்க
பாசி யற்றே பசலை; காதலர்
தொடுவுழித் தொடுவுழி நீங்கி
விடுவுழி விடுவுழிப் பரத்த லானே"

என்னும் குறுந்தொகைச் செய்யுளையும் எடுத்துக் காட்டி, "உனக்கு இத்தமிழ் போகாதோ? (தெரியாதோ?) என்று அருளிச் செய்தார்.

(2) 'வலையுள் அகப்படுத்து' எனத் தொடங்கும் திருவாய்மொழிப் பாசுர வியாக்கியானத்தில், 'தலையால் வணங்க வும் ஆம் கொலோ?' எனவரும் பகுதிக்கு அரும்பதவுரை செய்தருளிய வைணவப் பெரியாருள் ஒருவராகிய ஜீயர், "தீவினை தீர்வரம் வேண்டினுள் தொழுதென்று விளம்புவாய்" என்று கம்பரும்; "தெய்வம் தொழாஅள் கொழுநற் ருெழுதெழுவாள்" என்று திருவள்ளுவரும் சொன்னதை ஸம்வாதமாகக் கண்டுகொள்வது என்ருர்.

(3) "ஊழிதோறு ஊழி உலகுக்கு நீர் கொண்டு" என்னும் திருவாய்மொழிப் பாசுர வியாக்கியானத்தில் "வாழிய வானமே" எனவரும் பகுதிக்கு, "வானம் என்று மேகத்துக்குப் பெயர். 'வான் கலந்த வண்ணன்' என்றதிறே. 'வானம் வழங்காதெனின்' என்ருனிறே தமிழனும்" என்புழி, ஈட்டுரையாசிரியர் 'தானம் தவம் இரண்டும் தங்கா' என்னும் திருக்குறளை நினைவு கூர்ந்துள்ளார்.

(4) "ஞானம் விசதமானுல் அவ்விடம் அணித்தாய் இவ்விடம் தூரமாய் இருக் கும்" எனவரும் திருப்பாவை வியாக்கியா னம், "ஐயத்தின் நீங்கித் தெளிந்தார்க்கு வையத்தின் வானம் நணிய துடைத்து" என்ற திருக்குறட் கருத்துக்கு அரண் செய்கின்றது.

(5) "போய பிழையும் புகுதருவான் நின் றனவும் தீயினில் தூசாகும்" எனவரும்

திருப்பாவைப் பகுதிக்கு, "அவையாவன உத்தர பூர்வாகங்கள். ஞானம் பிறப்ப தற்கு முன்பு புத்தி பூர்வமாகப் பண்ணின பாவம் பூர்வாகம். பகவத் சமாச்ரயணத்துக் குப் பின்பு பிரகிருதி வாசனையாலே பிராமா திகமாகச் செய்யும் பாவம் உத்தராகம். பாலும் கண்டசர்க்கரையும் குடிக்கப் பித் தம் தன்னடைவே போமாறு போலப் பக வதநபவம் பண்ண, இவைகளும் நெருப் பிற் போகட்ட பஞ்சுக்குவை போல் உரு மாய்ந்து இல்லையாய்ப் போம்" எனச் செய் யப் பெற்றுள்ள விளக்கம், "இருள்சேர் இருவினையும் சேரா" என்னும் திருக்குறட் பொருளைச் சிந்திக்கச் செய்கின்றது.

பரிமேலழகர் : இனி, திருமால்நெறியும் திருக்குறளும் என்னும் தலைப்பினை, வேறொரு வகையிலும் நாம் சிந்தித்து உணரக் கடமைப்பட்டிருக்கின்றோம். திருக்குறளுக்குத் தருமர் மணக்குடவர் தாமத்தர் நச்சர் பரிதி திருமலையர் மல்லர் பரிப்பெருமாள் காளிங்கர் எனப் பற்பலர் உரை இயற்றியுள்ளனர். எனினும் அவை கள் எல்லாவற்றிலும் பல்லாற்றானும் சிறப் புற்றுத் திகழ்வது பரிமேலழகர் உரையே என்பது, அறிஞர் அனைவரும் ஒப்பமுடிந்த தொன்று. "பாரிற் பரித்த உரையெல்லாம் பரிமேலழகன் தெரித்த உரையாமோ, தெளி" என்பது ஒரு பழம்பாடல். அத்த கைய நல்லுரையினை இயற்றியருளிய வித்தகர் ஆகிய பரிமேலழகர், ஒரு சிறந்த திருமால்நெறிச் சான்றோர், வைணவசமயப் பேரறிஞர் என்பது, நாம் எண்ணி எண்ணி மகிழத் தகுவது.

ஆசிரியர் பரிமேலழகர், காஞ்சிபுரத்தில் உல களந்த பெருமாள் கோயிலில், அருச்சகராக விளங்கி யிருந்தவர். இச்செய்தி, 'காஞ்சி வாழ் பரிமேலழகன்' 'நீணிலங் கடந்தோன் தாள் தொழும் மரபிற் பரிமேலழகன்' எனவரும் பழம் பாடற் பகுதிகளாற் புலனுதல் காணலாம்,

பன்னூல்கள் பயின்று, பலகலைகள் உணர்ந்து, பலசமயமும் தெளிந்து கை வந்த பரிமேலழகர், திருக்குறளுக்கும் திரு மால் நெறிக்கும் உள்ள செவ்விய தொடர் பினைப் போற்றி, ஆங்காங்கே தமது உரை யின்கண் அழகுறக் குறிப்பிட்டுச் செல் கின்றார்.

(1) அறத்துப்பாலில் 'துறவு' அதிகாரத் தில் 'பற்றற்ற கண்ணே பிறப்பறுக்கும்' என்னும் குறளுக்கு விளக்கம் எழுதுங்கால் "காரணம் அற்ற பொழுதே காரியமும் அற்றதாம் முறைமை பற்றிப் 'பற்றற்ற கண்ணே' என்றார். **'அற்றது பற்றெனில் உற்றது வீடு'** (திருவாய்மொழி 1.2.5.) என் பதூஉம் அதுபற்றி வந்தது" என எழுதி யருள்கின்றார்.

(2) அறத்துப்பாலில் அவாவறுத்தல் என்னும் தலைப்பில் 'ஆரா இயற்கை அவாநீப்பின்' என்னும் திருக்குறளுக்கு உரை வரையுங்கால்,

"நன்றாய் ஞானம் கடந்துபோய்
நல்லிந் திரியம் எல்லாம் ஈர்த்து
ஒன்றாய்க் கிடந்த அரும்பெரும்பாழ்
உலப்பி லதனை உணர்ந்துணர்ந்து
சென்றாங் கின்பத் துன்பங்கள்
செற்றுக் களைந்து பசையற்றால்
அன்றே அப்போதே வீடும்;
அதுவே வீடு வீடாமே"

என்னும் திருவாய்மொழிப் பாடலைச் சிறப் புறப் போற்றி முழுவதாக எடுத்து மேற் கோள் காட்டியிருக்கின்றார்.

(3) திருக்குறட் பொருட்பாலில், 'இறை மாட்சி' என்னும் அதிகாரத்தின் தொடக் கத்தில், "உலக பாலர் உருவாய் நின்று உலகம் காத்தலில் இறை என்றார். 'திரு வுடை மன்னரைக் காணில் திருமாலைக் கண்டேனே' என்னும் என்று பெரியாரும் பணித்தார்" என்று எழுதியிருக்கின்றார்.

(4) 'பேராண்மை என்ப தறுகண்' என் னும் திருக்குறளுரையில், "பகைவரை எதிர்த்துப் போரிடுதல் சிறந்த வீரம்; ஆயி னும் அப்பகைவர்க்கு ஒரு தாழ்வு வந்துற்ற போது, அவர்பால் இரக்கம் காட்டி உதவி செய்யும் தன்மை, அவ்வீரத்திற்குக் கூர்மை" என்று பொருள் வரைந்து "அஃதா வது இலங்கையர் வேந்தன் (இராவணன்), போரிடைத் தன் படை முழுவதும் அழிந் தொழியத் தமியனாய் அகப்பட்டானது நிலைமை நோக்கி, அயோத்தியர் இறை (இராமபிரான்), இன்றுபோய் நாளை நின் தானையுடன் வா' என விட்டாற் போல்வது"

எனப் பரிமேலழகர் விளக்கமும் தந்திருத்தல், நம் சிந்தைக்கு இனிய செய்தியாகும்.

"ஆளையா உனக்கு அமைந்தன
மாருதம் அறைந்த
பூளை ஆயின கண்டனை;
இன்றுபோய்ப் போர்க்கு
நாளை வாவென நல்கினன்;
நாகிளங் கமுகின்
வாளை தாவுறு கோசல
நாடுடை வள்ளல்"

எனக் கவிஞர்பிரான் ஆகிய கம்பநாடரும், இராமபிரானின் இக்கருணைத் திறத்தினை இனிதெடுத்துப் பாடியிருத்தல் காணலாம்.

(5) 'ஐந்தவித்தான் ஆற்றல் அகல்விசும் புளார் கோமான்' என்னும் திருக்குறளில், திருவள்ளுவரும் இராமாயணத்திற் போதரும் அகலிகை வரலாற்றினைக் குறிப்பிட்டுரைத்திருத்தல், இங்கு நாம் நினைவு கூரற்பாலது.

முடிவுரை: இதுகாறும் கூறியவாற்றுல், திருக்குறளுக்கும் திருமால் நெறிக்கும் இடையேயுள்ள சிறந்த தொடர்பினை, ஓரளவேனும் யாவரும் அறிந்து மகிழலாம். ஆதலின், இத்தகைய திருக்குறளின் சிறப்பினை இனிதுணர்ந்து, நம்மனோர் அனைவரும் அதனை நன்கினிது கற்கவும், கற்றவழிநிற்கவும், இயன்றவரையில் முயன்று, நலம் பலவும் எய்தி இன்புறுவோமாக!

—ஆசிரியர்

மதிப்புரைகள்

ஸ்ரீ ஆண்டாள் திருமணம்: இந்நூல், உபய வேதாந்த வித்வான்-சிரோமணி-திருமலை நல்லான் இராமகிருஷ்ண ஐயங்கார் சுவாமிகள் அவர்களால், இற்றைக்குச் சுமார் 32 ஆண்டுக்குமுன் இயற்றப்பெற்று, இப்போது இரண்டாம் பதிப்பாக வெளியிடப்பெற்றுள்ளது. ஸ்ரீ பின்பழகராம் பெருமாள் ஜீயர் சுவாமிகள் எழுதிய, ஆறுயிரப்படி குரு பரம்பரைப் பிரபாவம் என்னும் நூலைத் தழுவி, இந்நூலை நாடக வடிவில் மிகவும் நன்கினிது சிறந்த முறையில், ஆசிரியர் அவர்கள் இயற்றியளித்துள்ளார்கள். நாடக நூல் வடிவிற்கு ஏற்ப, நூலின் இடையிடையே சிலேடை உருவகம் உவமை பழமொழிகள், நயமான பேச்சுகள், கற்பனைகள், சிறப்புற அமைக்கப் பெற்றிருக்கின்றன. ஆங்காங்கே சுவையான புதிய சிறந்த பாடல்கள் சிலவற்றையும், ஆசிரியர் தாமே பாடிப் பொருத்தமாகச் சேர்த்துள்ளார். பிராட்டி, புருஷகாரம், பிரபத்தி, எம்பெருமானின் சௌலப்பிய குணம், திருவெட்டெழுத்து மந்திரம் முதலிய பற்பல சமய நுண்பொருள்கள், அங்கங்கே அழகுற விளக்கப்பட்டிருக்கின்றன. அநுக்கிரகை விரஜை நற்செல்வன் விதூஷகன் சுசீலை முதலிய கற்பனை மாந்தர்களை, நாடக முறைக்கு ஏற்ப ஆசிரியர் நயமுறப் படைத்திருக்கின்றார். கற்பனைத் திறமும், காவியச் சுவையும், தத்துவ விளக்கமும், இந்நூல் முழுவதிலும் சிறந்து காணப்படுகின்றது. திருப்பாவைப் பாடல்களைத் தழுவிய கதைப்போக்கும், உரையாடல்களும், அவற்றின் வாயிலாக உணர்த்தப்பெறும் வியாக்கியான விசேடங்களும், மிகவும் போற்றத்தக்கனவாக உள்ளன. மிகவும் சிறந்த நல்ல பயன்மிக்க இனிய நூல்! கிடைக்குமிடம்: திருமலை நல்லான் இராமகிருஷ்ண ஐயங்கார் அவர்கள், 29, பெருமாள் முதலித் தெரு, சௌகார் பேட்டை, சென்னை—1. விலை ரூ. 2-00.

—ஆசிரியர்.

தொண்டை நாட்டுச் சிவதலங்கள்: இந்நூல், செந்தமிழ்ச் செல்வர், சைவ சமய சிரோமணி, பேராசிரியர் வித்துவான் திரு. **பாலூர் கண்ணப்ப முதலியார்** எம். ஏ., பி. ஓ. எல்., அவர்கள் எழுதியதாகும். தொண்டை நாட்டில், சைவ சமய ஆசிரியர்கள் ஆகிய நால்வர் பெருமக்களால் பாடப்பெற்று விளங்கும் 32 சிவதலங்களையும் பற்றிய வரலாறுகள், செல்லுதற்குரிய வழிவகை விவரங்கள், பாடப்பெற்றுள்ள பதிகங்களின் பொருட் சுருக்கங்கள், ஆராய்ச்சிக் கருத்துக்கள், நுண்பொருள் விளக்கங்கள், கல்வெட்டுச் செய்திகள் முதலியன பலவும், இந்நூலின்கண் தொகுத்துத் தரப்பெற்றுள்ளன, சிவதலங்களுக்கு அருகேயுள்ள திருமால் கோயில்கள், முருகன் கோயில்கள் முதலியனவற்றைப் பற்றிய குறிப்புக்களும். அங்கங்கே சேர்க்கப்பெற்றிருத்தல், அன்பர்களுக்குப் பெரிதும் பயன்படும். நல்ல இனிய எளிய நடையில், பயன்படும் வகையில், இந்நூல் நன்கினிது எழுதப்பெற்றுள்ளது. தலயாத்திரை செய்ய விழையும் அன்பர்களுக்கு மிகவும் பயன்படும்! கிடைக்குமிடம்; பாரி நிலையம், 59. பிராட்வே, சென்னை-1. விலை: ரூபா. 5-00.

—ஆசிரியர்.

திருக்குறளின் சொற்பொருட் சிறப்பு

முன்னுரை :

திருவள்ளுவர் இரண்டாயிரம் ஆண்டு கட்கு முன்னர் வாழ்ந்திருந்தவர். ஆயினும் அவர்தம் திருக்குறள் இன்றும் அழியாச் சிறப்பினதாக அமைந்து விளங்குகின்றது. காலத்தாற் பெரிதும் பழமையுடையதெனினும், கருத்துக்களால் மிகவும் புதுமை பெற்றுத் திருக்குறள் பொலிகின்றது. இவ்வாற்ருல் 'முன்னைப் பழம் பொருட்கும் முன்னைப் பழம் பொருளாய்ப் பின்னைப் புதுமைக்கும் பேர்த்தும் அப்பெற்றியனே' என விளங்கும் இறைவனைப் போன்று, திருக்குறள் இணையற்றுத் திகழ்கின்றது.

ஏறத்தாழ நானூறு ஐந்நூறு ஆண்டுகட்கு முன்னர்த்தான், ஷேக்ஸ்பியர், சாசர் போன்ற ஆங்கில நாட்டுப் புலவர்கள் விளங்கி யிருந்தனர். ஒரு சில நூற்ருண்டுகளே முற்பட்ட இப்புலவர்கள் எழுதிய அண்மைக்கால நூல்களின் மொழிநடையே,பலவகைளில் எவ்வளவோ மாறுபட்டும், வழக்கிழந்தும், சிதைந்தும் இருக்கக் காண்கின்ருேம். (1)

ஆனல், நம் அருமைத் திருக்குறளோ, இரண்டாயிரம் ஆண்டுகளுக்கு முன்னரே இயற்றப்பட்டதாயினும், இன்று இயற்றப் பெற்றது போலவே, யாவருக்கும் தெளிவுறப் புரியும் வண்ணம், மாறுதல் சிறிதும் அடையாமல், எளிய இனிய நடையில், ஓரசை ஈரசைச் சொற்களாலேயே பெரிதும் இயன்று, பளிங்கென விளங்க வல்லதாகச் சுடர்விட்டு ஒளிர்கின்றது! உலகில் வேறு எந்த நாட்டிலும், வேறு எம்மொழியிலும், இங்ஙனம் இரண்டாயிரம் ஆண்டுகளாகியும், எத்தகைய சிறிய மொழிநடை மாறுதலையும் எய்தாமல், மக்களிடையே பெருகப் பரவி வழங்கி வரும் நூல் ஒன்றினைக் காண்டல் அரிது. இஃதொன்று தானே, திருவள்ளுவரின் பெருமையினையும், திருக்குறளின் சிறப்பினையும் உணர்த்தப் போதிய தெளிவான சான்று ஆகும்.

' காழில் கனி '

அதுமட்டுமோ! உலகப் பேரறிஞர்கள் மிகப் பழங்காலத்தில் எழுதிய எத்துணையோ கருத்துக்கள், இன்று நடைமுறைக்கு ஒவ்வாமலும், அறிவுக்குப் பொருந்தாமலும், எள்ளி நகையாடும் வகையிலும், இருக்கக் காண்கின்ருேம். உதாரணமாக, மேல்நாடுகளிலெல்லாம் மிகப் பெரிய ஞானவித்தகர் எனப்போற்றப் பெறும் **அரிஸ்டாட்டில்** என்னும் பேரறிஞர் எழுதிய நூல்களிற் காணப்படும் கருத்துக்கள் பலவற்றை 'அறிவுத் துறைக் குப்பைகள்' என இகழ்வாகக்குறிப்பிட்டு, **பெட்ரண்ட்ரஸ்ஸல்** என்னும் பேரறிஞர் அருவருத்து ஒதுக்கி எள்ளி நகையாடுவதைக் காண்கின்ருேம். (2) அவ்வாறே ஏனைய பல பழங்காலப் பேரறிஞர்கள் பிறரின் நூல்களிலும்கூட, இந்நாளைய உலகத்துக்கு ஒவ்வாத எத்துணையோ பல பிழைபட்ட கருத்துக்கள், இடம் பெற்றிருத்தலை அறிஞர்கள் அறிவர்.

அங்ஙனமெல்லாம் இன்றி, நூற்றுக்கு நூறு விழுமிய கருத்துக்களே பொருந்தி, ஒதுக்கித் தள்ளத் தக்கது எதுவும் இன்றி,

---

(1) "Just compare the language of **Caedmon**, of **Langland**, of **Chaucer**, of **Shakespeare**, of **Milton**, and of **Tennyson** one with the other, and see to what great an extent the language of one poet differs from that of another."

—**Dr. Meiklejohn.**

"காழில் கனி" எனக் கட்டுரைக்கலாம் படி கவின்மிகச் சிறந்து, காலம் இடம் இனம் நாடு மொழி முதலிய எல்லைகளை யெல்லாம் கடந்து, அறிவுக்கும் இயற்கைக்கும் நடைமுறைக்கும் உண்மைக்கும் அணுத்துணையும் பிறழாமல், தன்னிலையிற் றிரியாமலும் மாறாமலும் நிலைபேறுற்று நிகரின்றித் திகழ்கின்றது நம் திருக்குறள்! இஃது எண்ணுந்தொறும் எண்ணுந்தொறும் நமக்கு மிகவும் இறும்பூது பயப்பதன்றோ?

திட்பநுட்பம் :

ஓவியப் புலவன் தூரிகை கொண்டு பல் வேறு காட்சிகளைத் தீட்டிக் காட்டுகின்றான்; அதுபோலவே காவியப் புலவன் தன் கற்பனைத் திறனால் பலவேறு உணர்ச்சி நிலைகளைச் செவ்விதின் வெளிப்படுத்தி விளக்குகின்றான். ஓவியப் புலவனுக்குப் பலதிற வண்ணங்களும் கோடுகளும் பயன்படுமாறு போன்று, காவியப் புலவனுக்குச் சொற்களும் இலக்கண முறைகளும் உதவி புரிகின்றன. உலகப் பெருங் கவிஞர்களின் தலைவர் ஆகிய திருவள்ளுவர், தம்முடைய திருக்குறளின் ஒவ்வொரு சொல்லும் எழுத்தும் அசையும் கூட, மிகவும் பொருள் பொதிந்து விளங்கும் வண்ணம், அழகுற ஆய்ந்து அமைத்திருக்கின்றார்!

திருக்குறளில் ஒரு சிறு சொல்கூட, வறிதாகப் பொருளின்றி அமைக்கப்பட வில்லை. ஒவ்வொரு சிறு அசையும் கூடப் பொருள் சிறந்து பொலிந்து நிற்கின்றது. திருவள்ளுவர் தம் கருத்துக்களையும் அகவுணர்ச்சிகளையும் அறிவுரைகளையும், எத்துணையோ பலப்பல நுட்ப முறைகளைக் கடைப்பிடித்துத் திட்பமுற உணர்த்துகின்றார். நவில்தொறும் நயம் பயக்கும் நலமிக்கதாகத் திருக்குறள் திகழ்கின்றது. தொட்டனைத் தூறும் மணற்கேணிபோல, ஆராய ஆராய அதன் கருத்துக்கள் ஆழ்ந்து விரிவடைந்துகொண்டு செல்கின்றன. 'அறிதோறு அறியாமை கண்டற்றால்' என்றதற்கு ஏற்ப, நாம் திருக்குறளை ஆராய்ந்து அறியுந்தோறும் நம்முடைய அறியாமையே புலப்படுகின்றது. திருக்குறளின் கருத்துவளம் சிந்தனைக்குப் பெருவிருந்தாகும். திருவள்ளுவர் தம் நுண்மாண் நுழை புலனால், ஒவ்வொரு சிறு சொல்லும் அசையும் கூடச் சிறந்த பல நுட்பக் குறிப்புகளை உட்கொண்டு ஒளிரும் வண்ணம், தம்முடைய நூலை இயற்றியருளி யிருக்கின்றார். அதனை விளக்கும் ஒரு சில உதாரணங்களை மட்டும் ஈண்டுக் காண்போம்.

கற்றதனால் ஆய பயன் :

(1) மெய்யுணர்வினையுடைய இறைவனது நல்ல திருவடிகளை வணங்கமாட்டார்கள் என்றால், எல்லா நூல்களையும் கற்றவர்க்கும், அக்கல்வி அறிவால் ஆகிய பயன் யாதும் இல்லை. இக் கருத்து அமைந்த,

> "கற்றதனால் ஆய பயனென்கொல் வாலறிவன்
> நற்றாள் தொழாஅர் எனின்"

எனவரும் திருக்குறளை அனைவரும் அறிவர். கல்வியின் பயன் கடவுளைத் தொழுதல் என்பதே, தாம் கூற விழையும் கருத்தாயினும், திருவள்ளுவர் அதனை அங்ஙனம் நேரே கூறி முடித்து விடாமல், 'கற்றதனால் ஆய பயன் என்கொல்?' என வினவி, நம்மைச் சிந்திக்க வைக்கின்றார்.

கல்வியின் பயனென்னாமல், 'கற்றதனால் ஆய பயன்' என நீட்டி விரித்துப் பெருக்கி முழக்கிக் கூறுவதனால், 'கலை கலைக்காகவே' என்பாரையும், பொருளீட்டல் தொழிலியற்றல் போன்ற செயல்களே கல்வியின் பயன் என்பாரையும் மறுத்து, இவற்றுக்கெல்லாம் முடிந்த முடிபான மிகமேலான பயன் ஒன்று உண்டு என்று காட்டினார். இறைவனை 'வாலறிவன்' என்றும், அவனது திருவடிகளைப் பிறவிப் பிணிக்கு மருந்தாதலின், 'நற்றாள்' என்றும், பயன் வகைகளைப் பண்புற விளக்கி யருளினார்.

இறைவனைத் தொழுதல் இன்றியமையாததாயின், அங்ஙனம் தொழுதல் எப்பொழுதோ ஒருமுறை ஓராண்டிற்கேனும் ஒரு திங்களுக்கேனும் அமையும் போலும்

என நம்மனோர் எண்ணுமைப் பொருட்டு, இறைவனை நாம் இடையருது எப்பொழுதும் நீள நினைந்து தொழுதல் வேண்டும் என்னும் குறிப்பினைத் **'தொழாஅர்'** என்னும் அளபெடையின் அமைப்பினுற் புலப்படுத்தினர். இங்கே அளபெடை இசை நிறைப்பதற்கு மட்டுமேயன்றி, இடைவிடாமல் தொழுதல் ஆகிய குறிப்புப் பொருளையும் உணர்த்தி வந்தது.

மலர்மிசை ஏகினன் :

(2) அன்பர்களின் உள்ளமாகிய தாமரையிற் சென்று தங்கியிருப்பவனது, மாட்சிமை மிக்க திருவடிகளைச் சேர்ந்து இடையருது தொழுது தியானிப்பவர்கள், எல்லா உலகிற்கும் மேலான வீட்டுலகின் கண்ணே நிலைபெற்று நெடுங்காலம் வாழ்ந்து இன்புறுவார்கள்.

> " மலர்மிசை ஏகினன் மாணடி சேர்ந்தார்
> நிலமிசை நீடுவாழ்வார்"

என்னும் திருக்குறளில், இறைவனை 'மலர் மிசை ஏகினன்' என்று திருவள்ளுவர் குறிப்பிடுகின்றார். இதன் நுண்பொருட்டிறம் எண்ணியுணர்ந்து மகிழ்தற்கு உரியது.

அன்பினுல் எழில்நலம் பெற்று விரிதலும், இறைவன் எழுந்தருளிப் போந்து வீற்றிருத்தலும் ஆகிய சிறப்புடைமை கருதி, அன்பர்களின் உள்ளங்களை 'மலர்' என்று புகழ்ந்தார். இதனுற் கருங்கல் போன்று திண்ணிதாகிய நம்மனோர் மனம் நெகிழ்ந்துருகி மென்பதப்பட்டு மலர்போல் தூய்மையும் சிறப்பும் அடைந்தவழியே, இறைவன் அதன்கண் எழுந்தருளி விளங்கியருள்வான் என்றும், ஆசிரியர் குறிப்பிட்டருளினர் ஆயிற்று.

தன்னை அன்பால் நினைவாரது உள்ளத் தாமரையின்கண், அவர் நினைந்த வடிவோடு சென்று அருள்புரியும் இயல்பினன் இறைவன், என்பதனைக் குறிப்பிட ஆசிரியர் விரும்புகின்றார். அக் குறிப்பை **'ஏகினன்'** என்னும் சொல்லால் அழகுற உணர்த்துகின்றார். இறப்பு நிகழ்வு எதிர்வு என்னும் முக்காலத்திலும் ஒப்ப நிகழும் எந்தச் செயலையும் நிகழ்காலச் சொல்லாலேயே கூறுதல் வேண்டும். "முக்காலத்தினும் ஒத்தியல் பொருளைச் செப்புவர் நிகழும் காலத் தானே" என்பது இலக்கணம். ஆயினும் முக்காலத்தினும் அருள் புரியும் இறைவனை 'ஏகினன்' என இறந்த காலச் சொல்லாலேயே திருவள்ளுவர் குறிப்பிட்டருளியுள்ளார். 'கால வழு' என்னும் இலக்கணக் குற்றம் ஆகக் கருதத் தக்கது இது! எனினும், ஒரு சிறந்த பொருத்தமான காரணம் ஏதேனும் பற்றி இங்ஙனம் காலத்தை மாற்றியமைத்துக் கூறுவதற்குக் கவிஞர்களுக்கு உரிமையுண்டு. அப்போது அது 'கால வழுவமைதி' என ஏற்றுக்கொள்ளப்படும்.

இறைவன் அன்பர்களின் உள்ளத்திற்கு எழுந்தருளிச் சென்று தங்கி அருள் புரிவது, அவர்கள் தன்னை நினைந்து வழிபட்டு நெடுங்காலம் கழித்த பின்னர் அன்றி, அன்பர்கள் தன்னை நினைந்த அப்பொழுதேயாகும், என வற்புறுத்த விழைகின்றார் ஆசிரியர். தன்னை நினைந்த மாத்திரத்திலேயே, இறைவன் மிக விரைந்து போந்து அன்பர்க்கு அருள்புரிகின்றான் என்பதனை வலியுறுத்துதற் பொருட்டே,

> " வாராக் காலத்தும் நிகழும் காலத்தும்
> ஓராங்கு வரூஉம் வினைச்சொற் கிளவி
> இறந்த காலத்துக் குறிப்பொடு கிளத்தல்
> விரைந்த பொருள என்மனூர் புலவர்"

என்னும் தொல்காப்பிய நூற்பாவினைத் தழுவி, 'ஏகினன்' எனத் திருவள்ளுவர் இறந்த காலத்தாற் குறிப்பிட்டருளினர்.

இனி வேறென்றும் இங்குக் கருதற்பாலது உள்ளது. அன்பர்களின் உள்ளத்தில் இறைவன் எழுந்தருள்வது, அவர்கள் தன்னை நினைத்த பிறகேயன்று. அன்பர்கள் தன்னை நினைப்பதற்கு முன்பே, இறைவன் அன்பர்களின் உள்ளத்தில் எழுந்தருளி விளங்குகின்றான்.

> நினைப்பித்தா நித்தா நிமலா எனநீ
> நினைப்பித்தால் ஏழை நினைப்பேன்; நினைப்பின்
> மறப்பித்தால் யானும் மறப்பேன்; எவையும்
> பிறப்பித்தாய்! என்னல்லன்? பேசு.

என இராமலிங்கர் பாடுமாறுபோல, அன்பர்கள் தன்னை நினைந்தவழி அருள் செய்வதேயன்றி, அவர்கள் அன்பினால் தன்னை நினைக்கும்படி செய்து நினைப்பித்து நிற்பவனும் இறைவனே யாவன். இப்பொருட் சிறப்பும் 'ஏகினன்' என்னும் சொற்குறிப்பினாற் புலப்படுத்தப் பெறுகின்றது.

எனைத்துணையர் ஆயினும் என்னாம் :

(3) எவ்வளவுதான் பெருமையும் வலிமையும் செல்வமும் உடையவர்களாக இருப்பினும், ஒரு சிறிதாவது விளைவுகளையும் பழிபாவங்களையும் எண்ணிப் பாராமல், பிறன் ஒருவனுக்குரிய மனைவியை விரும்புவார் என்றால், அவர் எவராய் இருந்தால் தான் நமக்கு என்ன? அத்தகையோர் மிகமிக இழிந்த புல்லியரே ஆவர். இக் கருத்து அமைந்த

" எனைத்துணையர் ஆயினும் என்னாம்? தினைத் துணையும்
தேரான் பிறனில் புகல்"

என்னும் திருக்குறள், பிறன்மனை விழையும் ஒருவன், எவ்வளவுதான் உயர்வற உயர்ந்த பெருமையும் வலிமையும் பிறவும் உடையவனாயினும், அவன் மிகமிக இகழ்ந்திழித்து ஒதுக்கப்படத் தக்கவனே ஆவன் என்கின்றார் திருவள்ளுவர் !

இக்கருத்தினைப் பெரிதும் வலியுறுத்திக் கூற விழையும் திருவள்ளுவர், **"எனைத் துணையர்"** என முதற்கண் மிகவும் உயர்த்தி, அரியாசனத்தில் அமர்வித்தல் போலப் பன்மை யுணர்த்தும் பலர்பாற் சொல்லாற் சுட்டினார். பிறனில் விழைதல் ஆகிய பெரும் பிழையினைச் செய்வராயின், பின்னர் அத்தகையோரையும் பிடர் பிடித்துக் கீழே தள்ளி ஒறுப்பது போலத் **"தேரான்"** என ஒருமையாற் சுட்டி இகழ்ந்துரைத்தார். ஒரு சிறிதாயினும் எண்ணிப் பார்ப்பின், பிறனில் விழைதல் ஆகிய பிழையைச் செய்ய முற்படார் எனற்கு **'எனைத்துணையும்'** என்றார். எவ்வளவுதான் உயர்ந்தவரே எனினும் இக்குற்றம் புரிவோர், பெரிதும் இழிந்தவரே எனத் தெருட்டுதற்கு 'எனைத்துணையர் ஆயினும் என்னாம்? என்றார்.

'எனைத்துணையர்' எனப் பன்மையில் தொடங்கி, **'தேரான்'** என ஒருமையில் சுட்டி, 'பன்மை ஒருமை மயக்கம்' என்னும் இலக்கணக் குற்றமும், ஓர் இலக்கிய நயம் பயக்க அமையும்படி, அழகு பெறக் கையாண்டுள்ள திருவள்ளுவரின் திறம், பெரிதும் போற்றற்பாலது.

ஏவவும் செய்கலான் :

(4) பிறர் அறிவுரை கூறினாலும், அதனைக் கேட்டுக்கொண்டு, எதனையும் செவ்விதிற் செய்யமாட்டான் ; தானும் எதனையும் சிந்தித்துத் தெளியமாட்டான்; அத்தகைய உயிரானது, உடலைவிட்டு நீங்கி இறக்கும் அளவும், உலகத்திற்குப் பொறுத்தற்கு அரியதொரு கொடிய நோய் ஆகும்.

" ஏவவும் செய்கலான் தான்தேரான் அவ்வுயிர்
போஓம் அளவும்ஓர் நோய் "

என்பது, 'புல்லறிவாண்மை' என்னும் தலைப்பில் வரும் ஒரு திருக்குறள். புல்லறிவாண்மையாவது, தான் சிற்றறிவினனாக இருந்தே தன்னைப் பேரறிவினனாக மதித்து உயர்ந்தோர் கூறும் உறுதிச்சொல்லை ஏற்றுக் கொள்ளாமை.

பிறர் சொல்லியும் கேளாமல், தாமும் சிந்தித்து உணராமல், தம் மனம் சென்றவாறு நடக்கும் புல்லறிவாளர்களின் புன்மையையும், அவர்கள்பால் தமக்குள்ள வெறுப்புமிக்க அளவிறந்த சீற்றத்தினையும், ஆசிரியர் திருவள்ளுவர் 'ஏவவும் செய்கலான் தான்தேரான்' என முதற்கண் உயர்திணை ஆண்பால் குறிக்கும் னகர ஒற்றீற்றுச் சொல்லாற் குறிப்பிட்டு, அதற்கேற்பப் பின்னரும் 'அம்மனிதன்' என்றோ 'அவன்' என்றோ உயர்திணை ஆண்பாற் சொல்லாற் குறிப்பிடாமல், **'அவ்வுயிர்'** என அஃறிணைப் படர்க்கை ஒருமைச் சொல்லாற் சுட்டுதலாற் புலப்படுத்தி அருளினார்.

தானே சிந்தித்துத் தெளிதலினும், பெரியோர் சொல்லக்கேட்டுச் செய்தல் எளியதாதலின், 'ஏவவும் செய்கலான்' என்பதனை முன்னும், 'தான் தேரான்'

என்பதனை அதற்குப் பின்னும், ஆசிரியர் முறையே வைத்தார்.

உண்மைப் பெரியோர் எது கூறினும், அதுவே கட்டளையாகக் கொண்டு செயல் புரிதல் நல்லோர் கடமையாதலின், அதனை யுணர்த்துதற் பொருட்டுக் 'கூறவும் தேருன்' என்னுது 'ஏவவும் செய்கலான்' என்ருர்.

பெரியோர் பக்கலில் தானே முன் சென்று, நீவிர் பணிப்பது யாது? எனப் பணிந்து நின்று, அவர் கூறுவனவற்றைக் கேட்டு நடத்தல் கடமையாகவும், அஃதொழிந்து அவர்தாமே முற்போந்து அருளாற் கூறித் திருத்த முனையிலும், அவர் சொற்கேட்டு நடவான் என்பது, 'ஏவவும் செய்கலான்' என்புழி வரும் உம்மையால் உணர்த்தப் பெற்றது. இத் தன்மைதான் அவனது இயலாமை பற்றிய காரணத்தால் அன்று; அவனுக்கு உரிய புல்லறிவாண்மையாகிய இயல்பினுலேயே யாம் எனத் தெருட்டுதற்குச் 'செய்கிலான்' என்னுமல், 'செய்கலான்' என்ருர். 'கில்' ஆற்றல் உணர்த்துவதோர் இடைச் சொல்லாதல் காண்க.

தானும் தெளியாமல், பிறர் சொல்லியும் கேளாமல் இருப்பான் ஒருவன், மனித வடிவில் இருப்பினும், மனிதன் எனற்குத் தகுதியற்றவன் ஆதலின், 'அம்மனிதன்' என்னுது 'அவ்வுயிர்' என அஃறிணையாகக் குறிப்பிட்டு, அவன்பால் தமக்குள்ள அருவருப்பைப் புலப்படுத்தினுர் ஆசிரியர்.

அத்தகைய ஒருவனுல், குடும்பம் சமுதாயம் நாடு உலகம் என்பனவற்றிற்கு எத்தகைய ஒரு சிறு நலனும் ஏற்படாமையே யன்றித் தீங்குகள் பலவும் உண்டாதலின், அவனை 'நோய்' என உருவகம் செய்து இழித்துரைத்தார். பிற நோய்களின் வேறுபட்டதும் கொடியதும் ஆதலின் 'ஓர் நோய் என்ருர்.

தான் பிறந்த குடும்பத்திற்கோ, சமுதாயம் நாடு உலகம் என்பவற்றிற்கோ, கொடிய நோய் போலத் துன்பமும் தீங்குமே விளைவித்து நிற்கும் புல்லறிவாளர்கள், இருத்தலிலும் இறத்தலே நலமாதலின், 'வாழும் அளவும்' அல்லது 'இருக்கும் அளவும்' என்னுது, தமது அருவருப்புத் தோன்ற 'ஒழிந்து போகும் வரையில்' என்னும் கருத்தில் 'போம் அளவும்' என்ருர்.

நல்லவர்கள் எல்லோரும் மிக விரைவில் சிற்றிளம் பருவத்திலேயே மறைந்து விடுதலும், இத்தகைய பயனில் புல்லறிவாளர்கள் மிக நீண்ட நெடுங்காலம் இறந்தொழியாமல் மூத்து முதிர்ந்து உழன்றுகொண்டிருத்தலும் ஆகிய கொடுமையினை, இவ்வுலகத்துக் காண்கின்ரேம். ஆதலின், அக் கொடுமையின் நீடிப்பும், அதனுல் தமது நெடிய ஆற்ருமையும் விளங்கப் 'போம்அளவும்' எனற்பாலதனையே 'போஓம் அளவும்' என நீட்டிய அளபெடைக் குறிப்பாற் புலப்படுத்தினுர்.

முடிவுரை :

இதுகாறும் கூறியவாற்ருல், திருக்குறளின் சொற்பொருட் சுவைநலங்களின் சிறப்பு, இனையதென்று யாவரானும் ஓரளவேனும் உணரப் பெறும். இத்தகைய சிறப்புடைய திருக்குறளைப் பெற்றிருப்பது தமிழ் மக்களாகிய நம்முடைய பெறலரும் தவப்பேறேயாகும். ஆதலின் நாம் அனைவரும் அப் புனிதப் பெருநூலை நனிமிக ஓதியுணர்ந்து, நலம் பலவும் எய்த முயலுவோமாக!

—ஆசிரியர்.

---

(2) " Aristotle, in spite of his reputation, is full of absurdities. He says that children should be conceived in the winter when the wind is in the North, and that if people marry too young the children will be female.

He tells us that the blood of females is blacker than that of males; that the pig is the only animal liable to measles; that an elephant suffering from insomnia should have its shoulders rubbed with salt, oliveoil, and warm-water; that women have fewer teeth than men, and so on.

—Dr. Bertrand Russel

திருக்குறட் கருத்து வளம்

முன்னுரை :

திருக்குறள் ஒப்புயர்வற்ற தெய்விகப் பெரு நூல். காலத்தாலும் இடத்தாலும் மாறுபடா தனவும், நிறம் இனம் மொழி நாடு முதலிய வேறுபாடுகளைக் கடந்தனவும், என்றும் பொய் யாதனவும், எல்லா மக்களும் உவந்தேற்றுக் கொள்ளத் தக்கனவும் ஆக விளங்கும் அடிப் படை உண்மை அறக்கருத்துக்களை வரை யறுத்து உணர்த்தும் நலத்தில் திருக்குறள் தலைசிறந்ததாகத் திகழ்கின்றது. உலக மொழிகள் அனைத்திலுமுள்ள நீதி நூல்கள் பலவற்றுள்ளும், திருக்குறளுக்கு ஒரு பெருந் தனிச் சிறப்பிடம் உண்டு.

திருக்குறள் கூறும் கருத்துக்கள், மிகவும் உயர்ந்தவை; திட்பநுட்பம் செறிந்தவை; நவில் தொறும் நயம் பயப்பவை; அறி தோறும் அறியாமை புலனாகும்படி ஆழ்ந்து அகன்று நுணுகிச் செல்லுபவை; எண்ணி யுணரும்தோறும் மேன்மேற் பல நுண்ணிய பொருள்களை விளக்குபவை.

ஒரு குறள் : திருக்குறளின் கருத்துச் சிறப்பிற்கும் வளத்திற்கும், இங்கு ஒரு சான்று மட்டுமே காண்டல் அமையும். நமக்குத் "துன்பம் செய்தவர்களை நாம் தண்டிக்கும் முறையாவது, அவர்கள் நாணும்படி அவர் களுக்கு நாம் நல்ல இனிய உதவியைச் செய்து விடுதலேயாகும்" என ஒரு திருக்குறட் பாடல் கூறுகின்றது.

"இன்னாசெய் தாரை ஒறுத்தல் அவர்நாண
நன்னயம் செய்துவிடல்"

எனவரும் திருக்குறளை அனைவரும் அறிவர். இக்குறள் கூறும் இனிய கருத்து, எண்ணி எண்ணி யுணர்ந்து பெரிதும் போற்றுதற்கு உரியது.

"ஒருவன் உன்னை எதிர்த்தால், நீயும் அவனை எதிர்த்து நில்; ஒருவன் உனக்குத் துன்பம் செய்தால், நீயும் அவனுக்கும் துன்பம் செய்" என்பதுதான், பொதுவாக மக்கள் அனை வரும் கடைப்பிடிக்கும் கொள்கை. இவ்வியல் பையும் செயலையுமே **வீரமாகப்** போற்றிப் புகழ்ந்து கூறுவதும் உண்டு. ஆனால், ஒரு சில சான்றோர்கள், "உனக்குப் பிறன் ஒருவன் துன்பம் செய்தாலும், நீ அவனுக்குத் திருப்பித் துன்பம் செய்யாதே. அவன் செய்த துன்பத்தைப் பொறுத்துக் கொண்டு மன்னித்து விடு" என்றும், நமக்கு அறிவுரை கூறியுள்ளனர். ஆனால், திருவள்ளுவர் பெரு மானோ, அவர்களினும் ஒருபடி மேலே சென்று, "ஒருவன் உனக்குத் துன்பம் செய் தால், அவன் செய்யும் அத்துன்பத்திற்கு எதிராக, நீ அவனுக்குத் துன்பம் செய்யாதே! அது மட்டும் அன்று! நீ அவன் செய்யும் துன்பத்தைப் பொறுத்துக்கொண்டு, அவனை மன்னித்து விடு! மன்னித்தல் மட்டும் போதாது. துன்பம் செய்த அவனுக்கு, நீ இனிய நல்ல உதவியையும் செய்தல் வேண் டும். அதுதான் அவனைத் தக்காங்கு ஒறுக் கும் முறை" என்கின்றார்.

இஃது, எவ்வளவு பெரிய சிறந்த அரிய அருளுரை என்பது, நினைத்து வியக்கத் தகுவது. "பிதாவே! இவர்களை மன்னியும். இவர்கள் தாங்கள் செய்வது இன்னதென்று அறியாமல் இருக்கின்றார்கள்" என்று பரிந்து கூறி வேண்டிக் கொண்ட **இயேசுநாதர்** திருமொழியோடு நினைவு கூர்ந்து கருதின், இத்திருக்குறட் கருத்தின் அருமை பெருமை கள் விளங்கும்.

"தன்னரிய திருமேனி
சதைப்புண்டு தவிப்பெய்திப்
பன்னரிய பெரும்பாடு
படும்போதும், 'பரிந்து எந்தாய்!
இன்னதுஎன அறியகிலார்

தாம்செய்வது; இவர்பிழையை
மன்னியும்' என்று எழிற்கனிவாய்
மலர்ந்தார் நம் அருள்வள்ளல்''

எனவரும் இரட்சணிய யாத்திரிகச் செய்யுள், இங்கு நாம் கருதி இன்புறற்பாலது.

பிற குறள்கள் : இத்துணைச் சிறந்துயர்ந்த இனிய கருத்தினை, இவ்வொரு திருக்குறளில், இந்த ஓரிடத்தில் மட்டுமே, திருவள்ளுவர் கூறிச் சென்றனர் அல்லர். இவ்வுயர்ந்த இனிய செவ்விய கருத்தினையே, வேறு பிற பல இடங்களிலும் திருவள்ளுவர் கூறியருள் கின்றார்.

(1) மனச் செருக்கினால் தீங்கு மிக்க கொடிய துன்பங்களைச் செய்தவர்களை, நல்ல பெரியோர்கள், தாம் தம்முடைய பொறுமைத் தன்மையினால் மன்னித்து, அவர்களிலும் மேம்பட்டு உயர்ந்து, வெற்றியை அடைவார் களாக.

''மிகுதியான் மிக்கவை செய்தாரைத் தாம்தம்
தகுதியான் வென்றுவிடல்''

(2) செய்யத்தகாத கொடிய தீங்குகளைத் தன்கண் பிறர் செய்தாராயினும், அவர்கட்கு அதனால் வரும் துன்பத்திற்காக மனம் வருந்தி, அவர்கள்பால் அறனல்லாத செயல் களைச் செய்யாதிருத்தல், ஒருவனுக்கு நலம் பயப்பதாகும்.

''திறனல்ல தற்பிறர் செய்யினும் நோநொந்து
அறனல்ல செய்யாமை நன்று''

(3) தமக்குத் தீங்கு செய்பவர்களுக்கும் கூடத், தாம் தீங்கு செய்யாமல் விட்டொழித் தலை, தமக்குஉறுதிப் பொருளைத்தேடும் அறிவு கள் எல்லாவற்றுள்ளும் மேலான சிறந்த அறிவுஉடைய செயலாகும் என்று நல்லோர் சொல்லுவர்.

''அறிவினுள் எல்லாம் தலைஎன்ப; தீய
செறுவார்க்கும் செய்யா விடல்''

(4) தமக்குத் தீங்கு செய்தவர்களுக்கும் கூட, ஒருவன் இனிய நல்ல உதவிகளையே செய்தல் வேண்டும். இங்ஙனம் செய்யாமற் போனால், நல்லியல்புகள் எல்லாம் நிறைந் திருத்தல் ஆகிய சால்புடைமை என்னும் பண்பு, வேறு என்ன பயனைத்தான் உடை யது ஆகும்?

''இன்னா செய்தார்க்கும் இனியவே
செய்யாக்கால்
என்ன பயத்ததோ சால்பு''

எனவரும் பிற திருக்குறள்களிலும் இவ்வுயரிய கருத்தினையே, திருவள்ளுவர் செவ்வியின் விளக்கி யுரைத்திருத்தல் காணலாம்.

மெய்ப்பொருள் நாயனார் : சேதி நன்னாட்டு நீடு திருக்கோவலூரில், அரசோச்சி வாழ்ந் திருந்த மலாடர்கோமான் ஆகிய மெய்ப் பொருள் நாயனார், தம்மை வஞ்சகத்தாற் கொல்ல வந்த முத்தநாதனையும் 'மெய்த்தவ வேடமே மெய்ப்பொருள்' எனத் தொழுதார்; அவ்வஞ்சகனைக் கொல்ல முற்பட்ட தன் பாதுகாவலனையும் ''தத்தா! நமர்'' எனத் தடுத்தார்; ''எம்பிரான் அடியார் (முத்தநாதன்) போக, மீதிடை விலக்கா வண்ணம் கொண்டு போய் விடு'' என்று தத்தனுக்குக் கட்டளை யிட்டார்; தத்தன் முத்தநாதன் தன்னைத் தீதிலா நெறியில் விட்ட சொற்றிறம் கேட்க வேண்டிச் சோர்கின்ற ஆவிதாங்கினார்; தத்தன் திரும்பி வந்து ''இடையூறு இன்றி விட்டனன்' என்று கூற, 'இன்று எனக்கு ஐயன் செய்தது யார் செய்ய வல்லார்?'' என்று, அவனை நோக்கி நிறை பெருங் கருணை கூர்ந்தார். இன்னா செய்தார்க்கும் இனியவே செய்யும் நன்னயத்திற்கு, இத னின் மிக்க எடுத்துக் காட்டு வேறொன்றில்லை எனலாம். இத்தகைய வரலாறுகள் வேறு சிலவற்றையும், திருத்தொண்டர் புராணம் என்னும் பெரிய புராணத்துட் கண்டு மகிழ லாம்.

உரை நயம் : இனி, மேலே குறித்த 'இன்னா செய்தாரை' (314) என்னும் திருக்குறளில், நாம் கருதத் தக்கதொன்றுண்டு. அக்குறட் பாவுக்கு உரை எழுதிய ஆசிரியர்கள் பலரும், 'நன்னயம் செய்து விடல்' என்னும் தொடருக்கு 'நல்ல நயமுடையவற்றைச் செய்து விடுக' என்றே பொருள் வரைந் துள்ளனர். அவர்கள் அனைவரும் 'செய்து விடல்' என்பதனை ஒரு சொல் நீர்மைத்தாகவே கொண்டு விட்டனர். ஆனால், ஆசிரியர் பரிமேலழகர் 'செய்து + விடல்' என இதனை இரு சொற்களாகக் கொண்டார். ஏனையோ ரெல்லாரும் 'விடல்' என்பதனை ஒரு துணை வினைச் சொல் (Auxiliary verb) என்றே கொண்டு அமைந்தனர். ஆனால், பரிமேலழ கரோ, இதனை மிகவும் பொருள் பொதிந்த ஒரு முதல் வினைச் சொல் (Principal verb) எனக் கொண்டு, அதன் வாயிலாக அரிய சிறந்த ஆழ்ந்த பொருள் விளக்கம் ஒன்றைச் செய்தருள்கின்றார்!

ஸ்ரீ கற்பகாம்பாள் திருமயிலை சென்னை

"தமக்கு இன்னாதவற்றைச் செய்தாரை ஒறுத்தலாவது, அவர்தாமே நாணுமாறு அவர்க்கு இனிய உவகைகளைச் செய்து, அவ் விரண்டனையும், அஃதாவது நமக்கு அவர் தீங்கு செய்தார் என்பதும், நாம் அவர்க்கு நன்மையே செய்தோம் என்பதும், ஆகிய இருவகை நினைவு களையும் மறந்து விடுதல். மறவாவழிப் பின்னும் மேன்மேற் பகைமை வந்து கிளைக்குமாகலின், மறக்கற்பாலவாயின. இதனால் அவரை வெல் லும் உபாயம் கூறியவாறு."

எனப் பரிமேலழகர் வகுத்துள்ள உரை விளக்கம், எத்துணைச் சிறந்ததாகத் திகழ் கின்றது. 'விடல்' என்னும் ஒரு சிறு சொல், எவ்வளவு சிறந்துயர்ந்த பொருளைத் தன்கண் பொதிந்து கொண்டுள்ளது. காண்மின்கள்!

'நன்னயம்' : மேலைத் திருக்குறளிற் பரிமேல் அழகர் 'விடல்' என்னும் சொல்லின் பொருள் நுட்பத்தினை அழகுற விளக்கியருளின ராயினும் 'நன்னயம்' என்பதற்கு 'இனிய உவகை' என்ற அளவில் மட்டுமே, அவர் பொருள் குறித்துச் சென்றார். அவ் "இனிய உவகைஎஃது? எத்தனை வகைத்து?" என்பன போன்றவற்றை அவர் விளக்கிற்றிலர்.

ஸ்ரீ வசந பூஷணம் :

பிள்ளை லோகாசாரியார் என்னும் வைஷ்ண வப் பெரியார் ஒருவர், ஸ்ரீவசந பூஷணம் என்னும் சிறந்ததொரு நூலை அருளிச் செய் துள்ளார். அதனை,

முன்னம் குரவோர் மொழிந்த வசனங்கள்
தன்னைமிகக் கொண்டுகற்றோர் தம்முயிர்க்கு
மின்னணியாச்
சேரச் சமைத்தவரே, சீர்வசன பூடணம்என்
பேர், இக் கலைக்கிட்டார் பின்.

ஆர்வசன பூடணத்தின்
ஆழ்பொருள்எல்லாம் அறிவார்?
ஆர்அதுபோல் ஓர்சொல்
அநுட்டிப்பார்?

என்று மணவாள மாமுனிகள், தாம் இயற்றி யருளிய உபதேசரத்தின மாலை என்னும் நூலில், உளமுவந்து புகழ்ந்து போற்றி யிருக் கின்றார்.

இத்தகைய சிறப்பு மிக்க ஸ்ரீவசந பூஷணம் என்னும் நூலிற் காணப்படும் பின்வரும் அழகிய வாக்கியம், மேலே நாம் குறித்த 'நன்னயம்' என்னும் சொற்பொருள் நலத் தினை யுணர்த்தும் அற்புதம் மிக்கதாக, அமைந்து விளங்குகின்றது. நமக்கு இன்னா செய்தவர்கள் இடத்தில், நம் உள்ளமானது பொறுமை, இரக்கம், சிரிப்பு, உவப்பு, நன்றி பாராட்டல் என்னும் ஐந்து வகையான உணர்ச்சிகளையுடையதாக இருத்தல் வேண் டும். இங்ஙனம் ஸ்ரீவசந பூஷணம் நம்மைத் தெளிவிக்கின்றது.

ஐவகை நன்னயம் :

(1) நமக்குத் தீங்கு செய்தவர்களுக்கு எதிராக நாம் தீங்கு செய்யாமையும், அவர் செய்த தீங்கினை நாம் நினையாமையும் ஆகிய **பொறுமை.**

(2) நமக்குத் தீங்கு விளைவித்த இவனை நாம் மன்னித்துப் பொறுத்தாலும், இறைவன் இவனுக்குத் தண்டனையைப் பின்னர்த் தவரு மல் அளிப்பானே என்று நினைத்து அவன்பாற் கொள்ளும் பரிவு ஆகிய**இரக்கம்.**

தம்மை இகழ்ந்தமை தாம்பொறுப்ப தன்றிமற்
றெம்மை இகழ்ந்த வினைப்பயத்தால்—உம்மை
எரிவாய் நிரயத்து வீழ்வர்கொல் என்று
பரிவதூஉம் சான்றோர் கடன்!

—நாலடியார்.

(3) எல்லாம் இறைவன் செயலேயாக நாம் நினைத்திருக்கும்போது, தாம் ஏதோ நமக்குக் கேடு விளைப்பதாகப் பிறழ உணர்ந்து கொண்டு, 'பிறர்க்கின்னா முற்பகல் செய்யின் தமக்கின்னா பிற்பகல் தாமே வரும்' என்பதனை யுணராமல், தமக்குத் தாமே இவர்கள் கேடு செய்து கொள்ளுகின்றனரே! என்னே இவர் களின் அறியாமை! என்று எண்ணி, உளம் நெகிழ்தலால் உண்டாகும் **சிரிப்பு.**

(4) ஒருவன் மற்றொருவனுக்குச் செய்யும் கேடுகள், அழிவில் பொருள் ஆகிய உயிரை ஒன்றும் செய்யமாட்டாமையினால், உடலுக்கு மட்டுமே ஊறு பயப்பதாதல் கூடும். நாமோ 'பிறப்பறுக்கலுற்றார்க்கு உடம்பும் மிகை' என்றபடி, இறைவனை அடைதற்கு இவ் வுடம்பு தடையாக உளதே என்று எண்ணி, உடம்பைப் பகையாகக் கருதி யிருக்கின் றோம். இங்ஙனம் நமக்குப் பகையாகிய உடம் பிற்குக் கேடு விளைக்க முற்படுவோர், நாம் இறைவனை விரைவில் அடைதற்குத் துணை புரிபவர்களாய் நமக்கு ஒரு வகையில் நண்பர் களே யாவர் அன்றோ? எனக் கருதி உள்ளத் துக்குள்ளே மகிழும் **உவப்பு.**

(5) ஒரு மனிதன் 'ஏதிலார் குற்றம் போல்' தன் குற்றங்களையும் கண்டுணர்ந்து கொள்ள வல்லவனாதல் வேண்டும்; நாம் அது செய்யா மல் மயங்கி மறந்து கிடக்கின்றோம். இவர்கள்

நம்மைப் புறங் கூறிப் பழித்துத் திரிவதனுல், நம்முடைய குற்றங்களை நாம் உணர்ந்து கொண்டு திருந்தி உய்யும் வண்ணம் உதவி புரியப் பாடுபடுகின்றனர் அல்லரோ? என நினைந்து மகிழ்ந்து, அவர்களின் செயல்களை யெல்லாம் ஒரு பெரும் உதவி என்றே கொண்டு, அன்பு செய்து மகிழ்தல் ஆகிய நன்றியுணர்வு.

"குற்றம் செய்தவர்கள் பக்கல் பொறையும், கிருபையும், சிரிப்பும்,உகப்பும், உபகாரஸ்மிருதி யும் நடக்கவேணும்"

என்று, ஸ்ரீவசனபூஷணம் இவ்வைந்து செயல் களையும் அழகுறக் குறிப்பிடுகின்றது.

இவ்வைந்து பண்புகள் அல்லது செயல் கள், "நன்னயம்" எனத் திருவள்ளுவர் தம் திருக்குறளிற் குறிப்பிட்டருளிய சொல்லுக் குரிய விரிவுரை விளக்கப் பொருள்களாக விளங்குதல் காணலாம். இங்ஙனம் தொட் டனைத் தூறும் மணற் கேணிபோல, ஆராயுந் தொறும் பொருள் விரிந்து செல்லும் தன்மை, திருக்குறளின் தனிப்பெரு மாட்சிமை ஆகும்.

முடிவுரை :

இத்தகைய சிறந்த நூலை இயற்றி நமக்கு அளித்துச் சென்ற திருவள்ளுவர்க்கு நாம் செய்யும் நன்றியும் வழிபாடும், அவர்தம் திருக்குறள் நூலினைக் கசடறக் கற்றலும், அதன் வழி நிற்றலுமே யாகும். "தேவர்கள் கடன் வேள்வியானும், முனிவர் கடன் கேள்வி யானும், தென் புலத்தார் கடன் புத்திரப் பேற்ருனும் இறுக்கப்படும்" எனப் பரிமேல் அழகர் குறிப்பிடுதல், ஈண்டு நினைவு கூர்தற் குரியது.

"ஞான நூல் தனைஓதல் ஓதுவித்தல்
நற்பொருளைக் கேட்பித்தல்தான்
கேட்டல் நன்ரு
ஈனமிலாப் பொருளதனைச் சிந்தித்தல் ஐந்தும்
இறைவனடி அடைவிக்கும்
எழில் ஞான பூசை"

எனச் சிவஞான சித்தியார் கூறுதற்கு இையயத் திருக்குறளை நாம் ஓதுதலும், பிறரை ஓதுவித்தலும், அதன் நற்பொருளை அறிஞர்கள் வாயிலாக நாம் கேட்டுணர் தலும், பிறரைக் கேட்பித்து உணர்த்துதலும், அதன் பொருள் நலங்களை இடைவிடாமற் சிந்தித்துத் தெளிந்து கொள்ளுதலுமே, திரு வள்ளுவர்க்கு நாம் இயற்றும் சிறந்த வழி பாடாகும்.

—ஆசிரியர்.

சிறப்பு நிகழ்ச்சிகள்

மதுராந்தகம் ஸ்ரீ கோதண்டராம சுவாமி கோயில் அரசமுடி சமர்ப்பண விழா (30—3—69)

கோட்டூர் மணியம்பலநாத சுவாமி கோயில் மகா கும்பாபிஷேக விழா	2—5—69
உதகமண்டலம் மாரியம்மன் கோவில் திருத்தேர் விழா	15—4—69
கருவலூர் மாரியம்மன் கோயில் திருத்தேர் விழா	15—4—69
குமாரவயலூர் முருகன் கோயிலில் ஓய்வு விடுதித் திறப்பு விழா	31—3—69
சென்னை சென்னமல்லீசுவரர் கோயில் ஸ்ரீமகாவருண ஜபம்	21—3—69 23—3—69
திருநாகை ஸ்ரீ சௌந்தரராசப் பெருமாள் கோயில் அஷ்ட பந்தன மகாகும்பாபிஷேக விழா.	2—5—69

அபிராமி அந்தாதி

(மூலமும் உரையும்)

குரம்பை அடுத்துக் குடிபுக்க ஆவி,வெங் கூற்றுக்கிட்ட
வரம்பை அடுத்து மறுகும்அப் போது, வளைக்கையமைத்து
அரம்பை அடுத்த அரிவையர் சூழவந்து அஞ்சலென்பாய்;
நரம்பை அடுத்த இசைவடி வாய்நின்ற நாயகியே.

(பொழிப்புரை) யாழினது நரம்பைப் பொருந்திய இசையின் வடிவமாக விளங்குகின்ற, கலைத்தலைவியாகிய அபிராமி அம்மையே! உடல் ஆகிய குடிசையைச் சார்ந்து, குடியிருப்பாகப் புகுந்துள்ள என் உயிரானது, கொடிய கூற்றுவனுக்குக் குறித்த எல்லையை நெருங்கி வருந்துகின்ற நேரத்தில், அரம்பை ஊர்வசி மேனகை திலோத்தமை முதலிய தேவமாதர்கள் சூழும்படி வந்து, வளையல் அணிந்த நின்திருக்கையைக் காட்டி, பயப்படாதே என்று எனக்குக் கூறியருள்வாயாக!

(குறிப்புரை) அம்பிகையின் திருவுருவச் சிறப்பை வியந்து, 'நரம்பை அடுத்த இசை வடிவாய் நின்ற' என்றார். 'ஏழிசையாய் இசைப்பயனாய் இன்னமுதாய்' எனவரும் தேவாரம் முதலியன காண்க. அம்பிகை எல்லாக் கலைகளுக்கும் தலைவியாய் நயக்கப்படுதலின் 'நாயகி' எனப் புகழப் பெற்றாள். எண்சாண் அளவே உடையதாய், மலமும் சலமும் மாறாது ஒழுகுவதாய், சுற்றிலும் பற்பலபொத்தல் வாய்ந்து, சீழும் கிருமியும் சேர்ந்து, குப்பையும் நாற்றமும் மிகுந்த சிறுகுடில்போல இருப்பதாகலின், உடலின் இழிவைக் 'குரம்பை' என்னும் சொல்லாற் குறிப்பிட்டார். மெய் வாய் கண் மூக்கு செவி என்னும் ஐம்பொறிகள் உடனிருந்து நெருக்க, வாதம் பித்தம் சிலேத்துமம் என்னும் மூவர்க்குரிய உடல் ஆகிய சிறுகுடிலில், நாடொறும் பல முறை பிண்டம் என்னும் பெருங்குடிக்கூலி தர இசைந்து, ஓர் ஒதுக்கிடத்தே கிடத்தலின், உயிரைக் 'குடிபுக்க ஆவி' என்றார். இழைத்தநாள் எல்லை ஆகிய வாழ்நாளின் முடிவைக் 'கூற்றுக்கு இட்ட வரம்பு' என்றார். மாற்றேன் எனவரும் காலன் ஆகிய கொடியவன் ஆதலின், அவனைக் 'கொடுங்கூற்று' என விதந்தார். கூற்றுவன் வரும்போது, 'பாம்பின் வாய்த் தேரைபோலப் பலபல நினைத்து' உயிர் வருந்துமாகலின் 'மறுகும் அப்போது' என்றார். யான் அஞ்சும்படி கூற்றுவன் வரும்போது, நீ அஞ்சேல் என்று அபயக்கை காட்டி என்னைக் காத்தருள்க என்பார், 'கை அமைத்து வந்து அஞ்சல் என்பாய்' என்றார். காக்கும் கையை 'வளைக்கை' என்று சிறப்பித்தார். இறப்புத் துன்பம் நீக்குதல் மட்டுமே யன்றித் துறக்க இன்பமும் தந்தருள்க என்னும் குறிப்பில், வறிதே வந்து என்னாது, 'அரம்பையர் சூழ வந்து' என்றார். (49)

நாயகி நான்முகி நாரா யணி,கைந் நளினபஞ்ச
சாயகி சாம்பவி சங்கரி சாமளை சாதிநச்சு
வாய்அகி மாலினி, வாராகி சூலினி மாதங்கியென்று
ஆய கியாதி யுடையாள் சரணம் அரண்நமக்கே.

(பொழிப்புரை) இறைவி, நான்கு முகங்களை யுடையவள், நாராயணி எனப்படுபவள், தாமரை போன்ற திருக்கையில் ஐந்து மலரம்புகளை வைத்திருப்பவள், சாம்பவி சங்கரி சாமளை என்னும் பெயர்களை யுடையவள், கொடிய நஞ்சை வாயிலே கொண்ட பாம்பை மாலையாக

அணிந்தவள், வாராகி சூலினி மாதங்கி என்று பரவி வளர்ந்த புகழைப் பெற்றவள், ஆகிய அபிராமி அம்மையின் திருவடிகளே, நமக்குப் புகலிடம் ஆகும்.

(குறிப்புரை) உலகங்களுக்கெல்லாம் தலைவி யாதலின், 'நாயகி' என்றார். அம்பிகையே பிரமனையும் திருமாலையும் இயக்கி நின்று, படைத்தல் காத்தல் ஆகிய தொழில்களைச் செய்து வருதலின், 'நான்முகி நாராயணி' எனப் புகழ்ந்தார். அம்பிகை தாமரை மா அசோகு முல்லை நீலம் ஆகிய மலர்களை அம்புகளாகத் தன் கையிற் கொண்டிருத்தலின் 'கைந் நளின பஞ்ச சாயகி' என்றார். நளினம் - தாமரை, மென்மை எனினுமாம். பஞ்ச - ஐந்து. சாயகம் - அம்பு. சாயகம் தரித்தவள் சாயகி. சம்புவின் மனைவியாதலின் 'சாம்பவி' எனப்பட்டனள். சங்கரி - நன்மையைச் செய்பவள், சங்கரனின் துணைவி. சாமளை - சாமள நிறம் கொண்டவள். சாதி - உயர்ச்சி. 'சாதி' என்னும் அடைமொழி, நஞ்சுக்கும் பாம்புக்கும் பொருந்தும். நஞ்சு, நச்சு என வந்தது. அகி - பாம்பு. மாலினி - மாலை அணிந்தவள். வராக வடிவம் கொண்ட திருமாலின் சத்தியாகிய நிலமகள் 'வாராகி' எனப் பெற்றாள். நாராயணரின் மனைவி நாராயணி, தங்கை எனக் கொள்ளலுமாம். சூலினி-சூலம் ஏந்தியிருப்பவள். மாதங்கி - மதங்கர் என்னும் பாணர் குலத்தில் தோன்றியருளியவள். அபிராமி அம்மையாகிய ஒருத்தியையே இங்ஙனம் நூல்கள் அனைத்தும் பல்வேறு பெயரினளாயும் வடிவினளாயும் கருதிப் புகழ்ந்து போற்றுதலின் 'ஆய கியாதி உடையாள்' என்றார். ஆதல் - மேன்மேற் பரவி வளர்தல். கியாதி - புகழ். சரணம் - திருவடி. அரண் - புகலிடம், பாதுகாப்பு. வலிவுக்குக் காரணமாயும், நலிவுக்குப் புகலிடமாயும், வாழ்விலும் தாழ்விலும் நம்மைப் பாது காத்து நிற்றலின், 'சரணம் அரண் நமக்கே' என்றார். 'சரணமே அரண் நமக்கு' எனக் கொள்க. தம்மொடு நெஞ்சையும் சேர்த்துக் கூறுகின்றாராதலின் 'எனக்கு' என்னாது 'நமக்கு' என உளப்பாட்டுத் தன்மையிற் கூறினார். உலக மக்களாகிய நம்மையும் தம்மொடு உளப்படுத்திக் கொண்டார் எனினுமாம். (50)

அரணம் பொருளென் றருளொன் றிலாத அசுரர்தங்கள்
முரண்அன் றழிய முனிந்தபெம் மானும் முகுந்தனுமே
சரணம் சரணம் எனநின்ற நாயகி தன்னடியார்
மரணம் பிறவி இரண்டும்எய் தார்இந்த வையகத்தே.

(பொழிப்புரை) பொன் வெள்ளி இரும்பு என்பவற்றால் அமைந்த மதில்களையே, உறுதிப் பொருள் என்று எண்ணிக் கொண்டு, இரக்கம் என்பது சிறிதும் இல்லாதவர்களாக இருந்த, திரிபுர அசுரர்களினுடைய வலிமையானது அழிந்து போகும்படி, அன்றொரு நாள் முனிவு கொண்ட சிவபெருமானும், திருமாலும், நின் திருவடியே எமக்குப் புகலிடம் என்று கூறும்படி விளங்குகின்ற, தலைவியாகிய அபிராமியம்மையின் அடியார்கள், இறப்பு பிறப்பு ஆகிய இரண்டு துன்பங்களையும், இந்த உலகத்தில் அடையமாட்டார்கள்.

(குறிப்புரை) அரண் - மதில். அஃது அரணம் என வந்தது. பொருள் - உறுதிப் பொருள்; மதிக்கத் தக்கது. 'காக்க பொருளா ஒழுக்கத்தை' 'பொருளல்லவரைப் பொருளாகச் செய்யும்' என்பன காண்க. அருள் - இரக்கம். 'ஒன்று' என்பது சிறிதும் என்னும் பொருளில் வந்தது. எல்லாம் இருந்தும் இஃதொன்றில்லையாயின், யாவும் பயனிலவாம் என்பதற்கு 'அருள் ஒன்று இலாத' என்றார். 'அசுரர்' என்றது ஈண்டுத் திரிபுர அசுரர்களைக் குறித்தது. அவர்கள் வித்யுன்மாலி தாரகாட்சன் கமலாட்சன் எனப்படுவர். இறையருட்டிறனுக்கு மாறுபட்டு நின்றமையினால் அவர்களின் வலிமையை 'முரண்' என்றார். அன்று - முன்னொரு காலத்தில். 'அன்றே அழிய' எனக் கொள்ளலுமாம். திரிபுர அசுரர்களை இறைவன் தனது திருவுள்ள நினைவினாலேயே அழித்தனன் என்பார் 'முனிந்த' என்றார். உலகநலன் கருதி முனிவு கொண்ட சிறப்பினனாதல் பற்றிப் 'பெம்மான்' எனப் புகழ்ந்தார். சிறுமைதரும் முனிவு ஈண்டுப் பெருமையை விளைவிப்பதாயிற்று. முகுந்தன் - திருமால்;முத்தியை யளிக்கவல்லவன் என்பது பொருள். அம்பிகையின் சிறப்பை விதந்து வியந்து 'பெம்மானும் முகுந்தனுமே சரணம் சரணம் என நின்ற நாயகி' எனப் புகழ்ந்தார். சரணம் இரண்டனுள், முன்னையது திருவடியையும், பின்னையது புகலிடமாதலையும் உணர்த்தி நின்றது. பிறப்பு இறப்பு என்பதே முறையாயினும், நிகழ இருக்கும் முன்மையும் பின்மையும் கருதி 'மரணம் பிறப்பு' என மாற்றி அமைத்தார். கொடுமை மிகுதி பற்றி முன்வைத்தார் எனினுமாம். கைம்மேற் பயனைக் காணலாம் என்பதனை வலியுறுத்த 'இந்த வையகத்தே' என்றார். 'இந்த' என்பது

நெஞ்சறிசுட்டு. அம்பிகையை வழிபட்டால் பிறப்பிறப்புத் துன்பங்களினின்று நீங்கி உய்ய லாம் என்பது கருத்து. கைமுதிக நியாயத்தால், பிறதுன்பங்கள் எய்தாமை, கூறுமலே பெறப்படும். (51)

வையம் துரகம் மதகரி மாமகு டம்சிவிகை
பெய்யுங் கனகம் பெருவிலை ஆரம் பிறைமுடித்த
ஐயன் திருமனை யாள்அடித் தாமரைக் கன்புமுன்பு
செய்யுந் தவமுடை யார்க்குள வாகிய சின்னங்களே.

(பொழிப்புரை) பிறைமதியைத் திருமுடியிற் சூடியருளிய தலைவராகிய சிவபிரானின், சிறந்த மனைவியாகிய அபிராமி யம்மையின், தாமரை மலர் போன்ற திருவடிகளுக்கு வழிபாடு செய்கின்ற தவத்தினை, முற்பிறவிகளில் பெற்றிருந்தவர்களை அறிவிப்பதற்கு ஏற்பட்டுள்ள அடையாளங்களாவன, தேர் - குதிரை - மதநீர் பெருகும் யானை - பெரிய மணிமுடி– பல்லக்கு - அயலரசர் திறையாகச் செலுத்தும் பொற்குவியல் - மிகுந்த விலைமதிப்புள்ள முத்து மாலை - முதலியனவாகும்.

(குறிப்புரை) சிவபிரானைப் 'பிறைமுடித்த ஐயன்' என்றும், அம்பிகையைத் 'திருமனை யாள்' என்றும் புகழ்ந்தார். வணங்குதற்குரிய பெருஞ் சிறப்புடைமையினுல் திருவடியை 'அடித்தாமரை' என விதந்தார். வழிபாடு செய்தற்கு அன்பு இன்றியமையாததாதலின், வழிபாட்டை 'அன்பு' என்றே குறித்தார். அன்பு செய்தலே தவமாகலானும், தவம் செய்வோர்க்கே மேன்மேல் அன்பு நிகழுமாகலானும், 'அன்பு செய்யும் தவமுடையார்' என்றார். முற்பிறப்பில் அம்பிகையை வழிபட்டவர்கள், இப்பிறப்பில் பேரரசர்களாக விளங்கு வார்கள் என்பது கருத்து. வையம் - தேர். 'தச்சன் செய்த சிறுமா வையம்' என்பது காண்க. கனகம் - பொன். ஆரம் - முத்துமாலை. ஐயன் - தலைவன்; வியக்கத் தக்க பல திறச் சிறப்புகள் உடையவன். ஐ-வியப்பு; 'என்ஐமுன் நில்லன்மின்' என்பது திருக்குறள். சின்னம் - அடையாளம். (52)

சின்னஞ் சிறிய மருங்கினிற் சாத்திய செய்யபட்டும்,
பென்னம் பெரிய முலையும்முத் தாரமும் பிச்சிமொய்த்த
கன்னங் கரிய குழலும்கண் மூன்றுங் கருத்தில்வைத்துத்
தன்னந் தனியிருப் பார்க்கிது போலுந் தவமில்லையே.

(பொழிப்புரை) மிகச் சிறிய நுண்ணிடையின்கண் சார்த்தப் பெற்ற சிவந்த பட்டாடையும், மிகப் பெரிய திருமுலைகளும், அவற்றின் மேலே அணிந்த முத்துமாலையும், பிச்சிமலர்கள் நெருங்கிய மிகக் கரிய கூந்தலும், மூன்று கண்களும் கொண்ட அபிராமி யம்மையின் திருவுருவத்தினைத், தமது உள்ளத்தின்கள் நிலைபெற வைத்து, தன்னந்தனியாக இருந்து தியானிப்பவர்களுக்கு, அங்ஙனம் தியானிக்கும் செயலையன்றி, வேறு பயனுடைய தவம் ஏதும் இல்லை.

(குறிப்புரை) பெண்களுக்குச் சிறிதாக அமையவேண்டிய உறுப்புக்களுள் ஒன்றுதலின் இடையைச் 'சின்னம் சிறிய மருங்குல்' என்றும், பெருகி அமைய வேண்டிய உறுப்புக்களுள் ஒன்றுதலின், 'பென்னம் பெரிய முலை' என்றும் கூறினார். 'அகல் அல்குல் தோள் கண் என மூவழிப் பெருகி, நுதல் அடி நுசுப்பு என மூவழிச் சிறுகி'' என்பது கலித்தொகை (108). சின்னஞ் சிறிய - பென்னம் பெரிய - கன்னங்கரிய - தன்னந்தனி என்பன உலகவழக்குத் தொடர்கள். உலக வழக்காய சொற்றொடர்கள், ஒரோவொருகால் அருகி அமைந்த வழி அழகு பயப்பனவாகலின், அவற்றையும் செய்யுளில் அமைத்துப்பாடி மகிழ்ந்தார். கருத்தில் வைத்தல் - தியானித்தல். 'தவத்திற்கு ஒருவர் தமிழிற்கு இருவர்' என்பவாதலின், **'தனியிருப்பார்'** என்றார். ''மோனிகளாய் முனிச் செல்வர் தனித்திருந்து தவம்புரியும் முதுகுன்றமே'' என்பது சம்பந்தர் தேவாரம். அம்பிகையின் திருவுருவை நினைந்து தியானிப்பதே மிகப் பெரிய தவச் செயல் ஆகும் என்பது கருத்து. மருங்கு - இடை. ஆரம் - மாலை. குழல் - கூந்தல். சிவபிரானுக்குப் போல அம்பிகைக்கும் முக்கண் உண்டு ஆதலின் 'கண் மூன்றும்' என்றார். பிற தவங்களைச் செய்யப் பொறி புலன்களை அடக்கி இடர்ப்பட வேண்டியிருத்தலின், எளிதாகவும் இனிதாகவும் செய்யக்கூடும் இயல்பு பற்றித் தியானத்தினையே விதந்து ''இதுபோலும் தவம் இல்லை'' என்று அருளிச் செய்தார். (53)

நெடுநாளைய தேட்டம் *

(டாக்டர் திரு வ. ஆ. தேவசேனுபதி, எம்.ஏ., பி.எச்.டி)
தத்துவப் பேராசிரியர்; சென்னைப் பல்கலைக் கழகம்

மனிதன் தேடியலைந்த பொருளாகக் கடந்த காலத்தில் விளங்கியது யாது? நிகழ்காலத்தில் அங்ஙனம் திகழ்கின்றது எது? எதிர்காலத்தில் அஃது யாதாக இருக்கும்? இதற்குரிய விடையினை ஒரு சொல்லிலேயே தருதல் இயலும். அது தான் 'இன்பம்' என்பது. இஃது ஏதோ ஒரு புதுமை போலத் தோன்றலாம். இன்பம் மட்டுமே யன்றிப் பொருள் புகழ் பதவி முத லியனவற்றையும் மனிதன் விரும்பித்தேட வில்லையா? ஆம், தேடியலைகின்றுன். எனி னும், அவன் அங்ஙனம் தேடுவதன் அடிப் படை நோக்கத்தினை ஆராய்ந்து பார்த் தால், இன்ப வேட்கையே அதன் சாரமாக அமைந்திருத்தலைக் காணலாம். ஒருகால் இவ்வுண்மையை இன்னும் தெளிவாக இவ் வாறு கூறலாம்; ஒன்று, துன்பத்தினின்று தப்புதல்; இரண்டு, இன்பத்தினை அடை தல். துன்பத்தினின்று தப்புதல் என்பது உணவு கொள்ளுதலாற் பசி நீங்கப் பெறு தல் போல்வது. இன்பத்தையடைதலாவது; பசி நீங்கப் பெறுதலால் விளையும் உடல் வளனை யுறுதலொப்பது. ஆனுல், மனிதன் பசி நீங்குவதனுல் மட்டுமே இன்பம் எய்து கின்றனனு? அவன் மீண்டும் பசிப்பிணியை அடைகின்றனன்!அல்லனே? 'பசித்துண்டு பின்னும் பசிப்பானை யொக்கும்' என மெய் கண்டார் கூறுதல் போல, பசித்தலும் உண்ணலும் ஆகிய இச்செயல்கள் மீண் டும் மீண்டும் ஒரு முடிவின்றி நடைபெற் றுக்கொண்டே யிருக்கின்றன அல்லவோ?

இங்ஙனமே பொருள் புகழ் பதவி முதலி யனவற்றையும் அவை நிலையான இன்பம் தரக்கூடும் என்ற நம்பிக்கையில் மனிதன் தேடி யலைந்து கொண்டிருக்கின்றுன். ஆனுல், இவைகளையே வாழ்க்கையின் சிறந்த பேருகவும், குறிக்கோளாகவும் கொண்டு தேடியலைபவர்கள், அணிமை யிலோ சேய்மையிலோ என்றேனும் ஒரு நாள் அவற்ருற் சிந்தை கலங்கித் திகைப் புறுகின்றுர்கள். தேடும் அளவில் இவை கள் கிடைப்பதில்லை. அல்லது, ஒரோவழிக் கிடைத்தாலும் இவற்றின் பயன் ஏமாற்றம் விளைவிப்பதாகவேகாணப்படுகின்றது. இவ் வாற்ருல் இவர்கள் அடையும் இன்பமானது துன்பத்தின் இருநிலைகளுக்கிடையே நிக ழும் ஒருசிறிய இடைப்பிறவரல் நாடகம் போலவே உள்ளது. மனிதனின் இந்நிலை யானது,

"செருக்கும் சினமும்சேர்
சிற்றுடலின் துன்பங்கள்
இருக்கின்ற நெடுநாளாய்!
என்றும்இவை ஒழிவதின்றே"

என்னும் கருத்தமையப் பாடிய ஆங்கிலக் கவிஞரைப்போலவே, அழுங்கியரற்றும் தகையதாய் இருக்கின்றது. இத்தகைய 'திகைப்பு நற்செய்தி' (Gospel of Despair)யோடு நாமும் ஒத்துச்செல்ல வேண்டு வது தானு? இதனைத் தவிர வேறு யாதும் 'நற்செய்தி' யில்லையா? ஆம். இருக்கின் றது! உண்மையிலேயே, பலப்பல இருக் கின்றன. அவற்றுள் ஒன்றை ஈண்டு நாம் ஆராய்வோம். இந் நற்செய்தியானது, ஆசிரியர் மெய்கண்டாரால் தரப்பெற்ற தாகும். 'மெய்கண்டார்' என்ருல் 'உண் மையைக் கண்டுணர்ந்தவர்' என்பதுபொருள். மெய்கண்டார் ஆன்மீகத் துறையில்

* The Quest Eternal

மூவாண்டிற் சிவஞானம் பெற்ற 'ஒரு குழந்தைமைப் பேரறிஞர்' (Child—prodigy) ஆவர்.

அற்றேல், இம்மெய்கண்டார் என்பார் யார்? அவர் கி.பி. 12-ஆம் நூற்றாண்டில் தோன்றியருளியவர். அவர்தம் தந்தையார் அச்சுதகளப்பாளர் என்பவர். வழிவழியாக வழங்கிவரும் கதையின்படி, அவர்தம் தந்தையார் மகப்பேறு இல்லாதவராக இருந்தார். அதனால், அவர்தமது குலகுருவாகத் திகழ்ந்துவந்த "சகலாகம பண்டிதர்" (எல்லா ஆகமங்களையும் கற்று வல்லவர்) என்பவர்பாற் சென்று மகப்பேறில்லாத் தமது குறையைக் கூறி வருந்ினர். அவர் இறைவனை வணங்கி, அக்கால முறைப்படி, தேவாரத்திருமுறையினை எடுத்துக் கயிறு சார்த்திப் பார்த்தார். அதுபோது, "திருவெண்காடு என்னும் தலத்திற்குச் சென்று அங்குள்ள முக்குளநீரில் மூழ்கிச்சிவபெருமானை வழிபடுபவர்களுக்கு எல்லாத் தீங்குகளும் நீங்கும். மகப்பேறில்லாத குறையும் தீரும். இதில் ஏதும் சந்தேகம் கொள்ள வேண்டுவதேயில்லை" என்னும் கருத்து அமைந்த

"பேயடையா பிரிவெய்தும் பிள்ளையினே
டுள்ளநினைவு
ஆயினவே வரம்பெறுவர் ஐயுறவேண்
டாஒன்றும்
வேயனதோள் உமைபங்கன் வெண்காட்டு
முக்குளநீர்
தோய்வினையார் அவர்தம்மைத் தோயாவாம்
தீவினையே";

என்னும் திருப்பாடல் கிடைத்தது. அச்சுதகளப்பாளர்க்கு இது பெரும் மகிழ்ச்சியைக் கொடுத்தது. அவர் தமது மனைவியாருடன் திருவெண்காட்டிற்குச் சென்று இறைவனை முறைப்படி வழிபட்டு வந்தார். சிறிது காலத்திற்குப் பின்னர், அவருக்கு ஒரு குழந்தை தோன்றியது. அதுவே பிற்காலத்து மக்களால் 'மெய்கண்டார்' எனப் போற்றப் பெறுவதாயிற்று. மெய்கண்டாரை அவர்தம் தாய்மாமன் வளர்த்து வந்தார். அக்குழந்தை "சிறிய பெருந்தகையார்" எனப் போற்றலாம்படி, இளம் பருவத்திலேயே மிகப் பேரறிவு வாய்ந்ததாகப் பிறங்கியது. மிக இளம் பருவமாகிய மூன்றும் வயதிலேயே, பரஞ்சோதி முனிவர் என்பவர்பால் அருளுபதேசம் பெற்றுத் தியான சமாதி கைகூடி, மெய்யுணர்வு எய்தியது. உடனே அக்குழந்தை சைவசித்தாந்த உண்மைகளை விளக்கத் தொடங்கியது. தம்மிடம் கல்வி கற்பதற்கு வரும் என்று கருதியிருந்த குலகுருவுக்கு இஃது ஒருபெரும் வியப்பை விளைத்தது. அவர் குழந்தையாகிய மெய்கண்டார் இருக்குமிடம் சென்றார். அக்குழந்தை, உயிர்களின் துன்பங்களுக்கு எல்லாம் காரணமான ஆணவமலத்தின் இயல்பினை விளக்கிக் கொண்டிருந்தது. தாம் எய்தியிருந்த நூற்புலமையின் செருக்கால், குலகுருவாகிய சகலாகம பண்டிதர் மெய்கண்டாரை நோக்கி 'ஆணவமலத்தின் சொரூபம் யாது?' என விளக்கும்படி வினவினர். ஏதும் பேசாமலே மெய்கண்டார் அவ்வினவுக்கு அளித்த விடை அவரைத் துணுக்குறச் செய்தது. மெய்கண்டார் தமது கைவிரல்கொண்டு 'நீர்தாம் ஆணவமலத்தின் சொரூபம்' என வினவுக்கு விடைகூறுவது போல அவரையே சுட்டிக்காட்டினர். சகலாகம பண்டிதர் அதுகாறும் வெறும் நூற்கல்வியையே உயிர்விளக்கமாகிய மெய்யுணர்வு எனத் தவறாகக் கருதிச் செருக்குக்கொண்டிருந்தார். தமது பிழையினை யுணர்ந்து அவர், உடனே அச்சிவஞானக் குழந்தையின் திருவடிகளில் விழுந்து பணிந்தார். தமது பிழை பொறுத்துத்தம்மை மாணவராக ஏற்றுக்கொண்டருளும்படிவேண்டினர். மெய்கண்டாரும் அங்ஙனமே சகலாகம பண்டிதரை மாணவராக உவந்தேற்றுக்கொண்டு அவருக்கு 'அருள்நந்தி' என்னும் திருப்பெயர் சூட்டி, தாம் இயற்றியருளிய சிவஞான போதத்திற்கு விரிவுரை நூல் ஒன்றை இயற்றும்படி பணித்தருளினர். சிவஞான போதத்திற்கு அருள்நந்தி இயற்றிய விரிவுரை நூலே 'சிவஞான சித்தியார்' என்பது.

மெய்கண்டாரின் சிவஞானபோதம் சுருக்கமானதொரு சிறிய நூல். அது பன்னிரண்டு சூத்திரங்களையும், இடையிடையே வார்த்திகம் என்னும் பொழிப்புரையையும், ஒருசில உதாரண வெண்பாக்களையும் கொண்டது. அஃது அளவாற் சிறியதாக

இருந்தாலும் சைவசித்தாந்தத்தின் அடிப் படைக் கொள்கைகளை யெல்லாம் தெளி வுற வகுத்துணர்த்துகின்றது. உண்மை யில் அதுதான் சைவசித்தாந்த உண்மை களை முறையாகவும் முதன்முதலாகவும் தமிழில் விளக்கும் நூலாகும். கச்சியப்ப முனிவர் என்னும் பெரும்புலவர் ஒருவர் பாராட்டிக் கூறியிருப்பதுபோல, மிகப் பெரியமலையையும் தன்னுள்ளே அடக்கிக் காட்ட வல்ல மிகச் சிறிய கண்ணுடியைப் போலவே, சிவஞான போதமானது அள விற் சிறியதாக இருப்பினும், சைவசித் தாந்த அடிப்படையுண்மைகளையெல்லாம் தன்னகத்தே பொதிந்துகொண்டு விளங்கு கின்றது.

"சிறிய ஆடியிற் பெரியமால்
வரைப்பொருள் செறிந்தாங்கு
அறிவு நூல்களின் முடிபெலாம்
அகத்தடக் கியதோர்
நெறியின்நீடிய நிகழ்சிவ
ஞானபோ தத்தைக்
குறிய தீந்தமி ழால்உரை
குரவனைப் பணிவாம்"

மனிதன் தேடத் தகுந்த பொருளாக யாது இருத்தல் வேண்டும்? மனிதன் ஏன் ஆரா இயற்கை அவாவுடையனுய்த் துன் புறுகின்ருன்? நிலையான பேரின்பத்தினை மனிதன் எவ்வாறு அடைதல் இயலும்? என்னும் வினக்களுக்கு இந்நூலில் மெய் கண்டார் தரும் விடை என்ன? மனிதன் தேடத்தக்க பொருள் கடவுளேயாவர். கட வுளைப் பிரிந்திருத்தலே துன்பங்களுக்குக் காரணம். மீண்டும் கடவுளை யடைந்து அவரோடு ஒன்று படுதலே நிலையான பேரின்பத்தைத் தரும்.

இவற்றைச் சிறிது விளக்கமாகக் காண் போம்! மெய்கண்டார் கூற்றின்படி என் றும் உள்ள 'நித்தியப்' பொருள்கள் மூன்று உள்ளன. அவை பதி (கடவுள்), பசு (உயிர்கள்), பாசம் (தளைகள்) எனப் படும். உயிர்கள் தொன்றுதொட்டே அநாதியாகப் பாசங்களாற் பிணிக்கப்பட் டுள்ளன.உயிர்களைப் பிணித்துள்ள பாசங் களுக்குத் தொடக்கம் இல்லாதொழியினும் முடிவுண்டு. பாசங்களைக் களைதல் இய லும். உயிர் என்பது என்ன? உடம்பா, பொறிகளா, மனம் முதலியவைகளா? உயிர் என்பது இவைகளெல்லாம் அல்ல; இவைகளெல்லாம் ஒன்று திரண்ட கூட் டத்திற்கும் உயிர் என்பது பெயர் அன்று. அது 'பதி' எனப்படும் கடவுளும் ஆகாது. அஃது ஓர் அறிவுடைப் பொருள்; அறி விக்க அறியும் தன்மையுடையது. உண் மையில் உயிர்கள் எண்ணில்லாதனவாக இருக்கின்றன. அவைகள் ஆணவம் மாயை கன்மம் என்னும் மும்மலங்களாற் பிணிக்கப்பட்டுள்ளன. எல்லாத் தீங்கு களுக்கும் மூலகாரணமாய் நிற்பது ஆண வமலம். உயிர்கள் வியாபகத் தன்மை யுடையன. அவற்றை ஆணவம் அணுத் தன்மைப் படுத்துகின்றது. மாயை என் பது நமது தனுகரண புவன போகங்களுக் குக் காரணமாய் அமைவது. கன்மம் என்பது செயல் எனப்பொருள்படும். நாம் செய்யும் செயல்களுக்கு முதல்வர்கள் நாமே என உரிமை கொண்டாடினல் அவைகள் நம்மை அடிமைப் படுத்துகின் றன.

"நான்செய்தேன் எனுமவர்க்குத்
தான்அங் கின்றி,
நண்ணுவிக்கும் போகத்தைப்
பண்ணுவிக்கும் கன்மம்!
ஊன்செய்யா ஞானம்தான்
உதிப்பின் அல்லால்
ஒருவருக்கும் யான்எனதிங்
தொழியா தன்றே!"

அங்ஙனமின்றி, இறைவன் திருக்கைகளில் நாம் ஒரு கருவியே என்னும் உண்மையை யுணர்ந்தால், அவைகள் நம்மைக் கட்டுப் படுத்த மாட்டா.

"உலகினில்என் செயலெல்லாம்
உன்விதியே! நீயே
உள்நின்றும் செய்வித்தும்
செய்கின்ருய்! என்றும்,
நிலவுதோர் செயல்எனக்கின்
றுன்செயலே! என்றும்,
நினைவார்க்கு வினைகளெல்லாம்
நீங்கும் தானே."

எனவே, நம்முடைய செயல்களின் பயனு கிய வலையிலேயே நாம் சிக்கிக் கொள்ளு கின்றோம். ஆணவம் மாயை கன்மம் என்னும் மூன்றும் 'பாசம்' எனக் கூறப்படு

மாயினும், மாயையும் கன்மமும் இறைவன் திருவுள்ளப்படி நல்வழியிற் பயன்படுத்தப் பட்டால், அவைகள் நமது பாசப் பிணிப் பைக்கடக்க நமக்கு உதவி செய்யக்கூடும்.

எங்ஙனமெனின் முதலில் மாயையினை எடுத்துக் கொள்வோம்! உயிரின் அறி வானது மூலமலமாகிய ஆணவத்தால் மறைக்கப்படுகின்றது. இறைவன் உயிர் களுக்கு உடல்கருவி உலகம் நுகர்பொருள் கள் ஆகியவற்றைப் படைத்துக்கொடுத்து உயிர்களின் அறிவை ஒருசிறிது விளங்கச் செய்கின்றார். உடலானது ஐம்பொறிகளா லும் அந்தக்கரணங்களாலும், உயிர் தனது மறைப்பை நீக்கிக் கொள்ள ஓரளவு உதவி புரிகின்றது. உயிரானது உடலைத் தக்க வழியிற் பயன்படுத்திக் கொண்டால், தான் உடலெடுத்தது இறை வழிபாட்டின் பொருட்டே என்பதனை யுணர்ந்து கொள் ளும். மனிதப்பிறவியே இறைவழிபாட்டிற்கு உறுதுணையாக இருத்தலின், மனித வாழ்க் கையானது மிகவும் அருமையும் சிறப்பும் வாய்ந்த தாகும். விண்ணுலகத்திலுள்ள வர்களும் கூட, இறைவனை வழிபட இம் மண்ணுலத்திற்கு வருகின்றார்கள்.

"மானுடப் பிறவி தானும்
வகுத்தது மனவாக் காயம்
ஆனிடத் தைந்தும் ஆடும்
அரன்பணிக் காக அன்றே?
வானிடத் தவரும் மண்மேல்
வந்தரன் தனைஅர்ச் சிப்பர்!
ஊனெடுத் துழலும் ஊமர்
ஒன்றையும்உணரார் அந்தோ!"

உயிரானது மனிதப் பிறவியின் அரு மையையும் சிறப்பையும் மறந்து, வெறும் புலன்களின் நுகர்ச்சிக்கே அதனைத் தவறு கப்பயன் படுத்துமாயின், மாயையானது உயிரின் மலப்பிணிப்பை நீக்கப் பயன்படா மல் உயிரை மயக்கி, அம் மலப்பிணிப்பி லேயேஅழுந்தச் செய்யும்! "வைத்ததோர் மலமாய் மாயை மயக்கமும் செய்யும் அன்றே' என்பது சிவஞானசித்தியார்.

இங்ஙனமே, கன்மமலமும் கூட நல்வழி யிற் பயன்படுத்தப் பெற்றால் உயிருக்குத் துணைசெய்யும். இறைவனின் திருக்கை களில் தான் ஒரு கருவியே என்பதை உணர்ந்துகொண்டு, உயிரானது தன் கடமையைச் செய்தால், கன்மமலம் உயி ரைக் கட்டுப்படுத்தாது. அதற்கு மாறாகத் தன் செயல்களுக்குத் தன்னையே முதன் மையாகக் கருதி உரிமை கொண்டாடி னால், கன்மமலம் உயிரை நிச்சயமாகப் பிணித்துவிடும். பயன்கருதாமற் கடமை யைக் கடமைக்காகவே செய்வதின்மூலம் தான், உயிரானது பாசத் தளையினை நீக் கிக் கொள்ளக் கன்மமலத்தைப் பயன் படுத்த முடியும். இங்ஙனம் மாயையும் கன் மமலமும் உயிரின் பாசப் பிணிப்பினை அகற்றுதற்கும் உதவி செய்யும். அல்லது அதனை இறுகச் செய்வதற்கும் காரணமாக அமையும். மாயை கன்மங்களை உயிர் எங் ஙனம் பயன் கொள்ளுகின்றது என்ப தனைப் பொறுத்தே இவைகளெல்லாம் அமைகின்றன. ஒரு சங்கிலியின் வலிமை யானது அதனுடைய வலிமையற்ற மிக மெல்லிய சிறிய இணைப்பைப் பொறுத்தே அமைகின்றது என்பர். இங்கே ஆணவம் மாயை கன்மம் என்னும் மும்மலங்களில் மாயை கன்மம் என்னும் இரண்டினையும் நாம் வலிமை குன்றச் செய்தல் கூடும். அங்ஙனம் செய்தலால், ஆணவ மலத்தின் ஆற்றலும் தானே குறையும்.

எனினும், இவைகளெல்லாம் இறைவன் திருவருள் துணையால் மட்டுமே இயலும். ஆனால், இறைவன் ஒருவன் இருக்கின்றான் என்பதனை நாம் எவ்வாறு உணர்வது? மெய்கண்டார் இறைவனுண்மையில் நமக்கு நம்பிக்கை யுண்டாக்குவதற்காகக் காரணகாரிய ஆராய்ச்சி முறைகளைக் கையாளுகின்றார். நாம் உலகத்திற் காண் கின்ற எந்தப் பொருளும் முதற்காரணம் நிமித்த காரணங்களை யுடையதாக விளங்குகின்றது. உதாரணமாக, ஒரு குடத்தினை எடுத்துக்கொண்டால், அதற்கு மண் முதற்காரணம்; தண்ட சக்கரங்கள் துணைக் காரணம்; குயவன் நிமித்தகார ணம். குடம் தோன்றுவதற்குக் குயவன் ஒருவன் இன்றியமையாமை போல, அவய வப் பகுப்புடைய, நிலைமாறும் தன்மையுள்ள உலகப்படைப்பிற்கும், இறைவன் ஒருவன் இன்றியமையாதவன் ஆவன்.

"காரிய காரணங்கள் முதல்துணை நிமித்தம் கண்டாம்!
பாரில்மண் திரிகை பண்ணு மவன்முதல் துணைநி மித்தம்!
தேரின்மண் மாயை யாகத் திரிகைதன் சத்தி யாக,
ஆரியன் குலாலன் ஆய்நின் ருக்குவன் அகிலம் எல்லாம்!"

இதுமட்டுமே யன்றி, வேறொருகாரணமும் கூட உள்ளது. மனிதர்கள் செயல்களில் ஈடுபடுகின்றார்கள். அவர்களைத் தம் அளவில் விட்டுவிட்டால், அவர்கள் தாம் செய்யாத நற்செயல்களுக்கு உரிமை கொண்டாடுவார்கள்; தாங்கள் செய்த தீச்செயல்களுக்குத் தண்டனையினின்று தப்பித்துக் கொள்வார்கள். செயல்களின் பயன்கள் தம்மைச் செய்தவரைத் தாமே சென்றடைவன அல்ல. ஆதலின், செய்தார் மாட்டுச் செய்வினைகளின் பயனை முறையே சேர்ப்பிக்கவல்ல இறைவன் ஒருவன் இருத்தல் இன்றியமையாததாகின்றது.

"அவ்வினையைச் செய்வதனின் அவ்வினைஞர் தாம் சென்றங்கு
அவ்வினையைக் காந்த பசாசம்போல் அவ்வினையைப்
பேராமல் ஊட்டும் பிரானின் நுகராரேல்
ஆர்தாம் அறிந்தணைப்பார் ஆங்கு?"

அவ்விறைவன் படிப்படியாகத் தரும் ஒழுகலாற்றுப் பயிற்சியால் இன்ப துன்பப் பயன் எதனையும் கருதாமற் கடமைகளைப் புரியும் திறனை உயிர்களுக்கு உண்டாக்குகின்றான்.

இத்தகைய காரணங்கள் இறைவன் ஒருவன் இருப்பதனை உடன்பட விரும்பாதவர்களை உடன்படச் செய்யக் கூடியன அல்ல. எனினும், போதிய நல்லூழால் நமக்கு ஆன்மீக அனுபவம் வாய்த்திருந்தால், அதனை வளர்க்க இக்காரணங்கள் உதவியாகக்கூடும். அல்லது, அத்தகைய ஆன்மீக அனுபவங்கள் நிகழக் கூடியவையே என்றும், அவைகள் அறிவு நெறிக்கும் இயைந்தனவே என்றும் இக்காரணங்கள் உணர்த்தாநிற்கும்.

சுருக்கமாகக் கூறினால், மெய்கண்டாரின் உபதேசம் இதுவே! உயிரானது வேடர்களாற் கவர்ந்து செல்லப்பெற்ற ஓர் அரசிளங்குமரனைப் போன்றது. அஃது ஊனியல் வழிப்பட்டு வளர்கின்றது. புலன்களை யொட்டிய வாழ்க்கையை நடத்துகின்றது. அரசன் அரசிளங் குமரனை வேடர்களின் சூழலினின்று மீட்டு, அவனை அவ்வேடர்களின் இழிந்த வாழ்வியல் விளைவுகளை விடுத்தொழிக்கச் செய்து, அரசிளங் குமரனுக்குரிய சிறந்த பண்புகளை மேற்கொண்டு வாழுமாறு செய்தல் போல, இறைவனும் உலகியல் வாழ்வினின்று, உயிர்களை அருளியல் வாழ்வின்கண் தலைப்படுமாறு செய்தருள்கின்றான். அரசிளங் குமரனின் இன்பமானது, வேடர்களின் வாழ்க்கைமுறைகளைத் தொடர்ந்து பின்பற்றுதலா லன்றி, அவற்றினை விட்டொழித்து, அரசநிலைக்குரிய வாழ்க்கைக்கு மாறி அதனை மேற்கொள்ளுதலாலேயே அமைகின்றது. அதுபோலவே, உயிர்களின் இன்பமும் தன்னலங் குறித்த புலன் வழி வாழ்க்கையை விடுத்தொழித்து, இறை வழிப்பட்ட அருளியல் வாழ்க்கையைக் கடைப்பிடித்தலால் அமைகின்றது.

"ஐம்புல வேடரின் அயர்ந்தனை வளர்ந்தெனத்
தம்முதல் குருவுமாய்த் தவத்தினில் உணர்த்த விட்டு
அன்னியம் இன்மையின் அரன்கழல் செலுமே

என்பது சிவஞானபோதம்.

இறைவன் உயிர்வாழ்பொருள்கள் எல்லாவற்றின் நலன்களையுமே குறிக்கோளாகக் கொண்டுள்ளனர். அதுபோலவே, இறைவழிப்பட்ட உயிரும்எல்லாப்பொருள்களின் நலத்தினையும் தனது பயன்கருதாத் திருத்தொண்டுக்கு உரியதாக்கிக் கொள்ளுதல் வேண்டும். அத்தகைய உயிரானது தன் நலம் பற்றிக் கருதுவதேயில்லை. அது மன்னுயிர்களின் நலம் பொருட்டே வாழ்கின்றது. இதுவே இறைவனுக்குரிய திருத்தொண்டாகும். உயிரானது மன்னுயிர்களுக்காக வாழ்ந்து, தன்னை இறைவனின் திருக்கையில் ஒரு கருவியாக மட்டும் எப்போது கருத முற்படுகின்றதோ,

அப்போது ஆணவம் மாயை கன்மம் ஆகிய மும்மலங்கள், உயிரைப் பிணிக்கும் வலியிழந்து விடுகின்றன. இத்தகைய தொரு நிலையை, இடைவிடாது இறையருளுணர்வில் ஒன்றிப் பயிலுதலின் மூலமே அடைதல் இயலும். இறைவழிபாட்டிற் கழிக்கும் ஒவ்வொரு நாளும் இன்பநாள் ஆகும். இறைவனை மறந்து கழித்த ஒவ்வொருநாளும் துன்பநாள் ஆகும்.

"துன்பம் நும்மைத் தொழாத நாள்கள்
என்பாரும்
இன்பம் நும்மை ஏத்துநாள்கள் என்பாரும்
நும்பின் எம்மை நுழையப் பணியே
என்பாரும்
அன்பன் ஆரூர் ஆதிரை நாளால்
அதுவண்ணம்"

இறைவனை வழிபடுதலும், அவனது புறவியல் மறுபகுதியாகிய உயிர்களுக்குத் தொண்டு செய்தலுமே, நிலைபேறுன இன்பத்தினை அளிக்க வல்லவை.

"ஈசனுக்கன் பில்லார்
அடியவர்க்கன் பில்லார்;
எவ்வுயிர்க்கும் அன்பில்லார்
தமக்கும் அன்பில்லார்"

மனிதனின் "நெடுநாளைய தேட்டம்" என விளங்கி வருவது, இன்பத் தேட்டமே. இறைவனை வழிபடுதலாலும், இறைவன் படைத்த உயிர்களுக்குத் தொண்டு புரிதலாலுமே, மனிதன் இன்பம் அடைதல் இயலும்! மெய்கண்டாரின் ஞானச்செய்தியைச் சுருக்கமாகத் தொகுத்துக் கூறவேண்டுமாயின்; அண்மைக்கால அருட்பெருஞ் சான்றோராகிய தாயுமானவர் திருமொழியாற் பின்வருமாறு கூறி முடிக்கலாம்.

"அன்பர்பணி செய்யஎன்னை
ஆளாக்கி விட்டுவிட்டால்
இன்பநிலை தானேவந்து
எய்தும் பராபரமே"

—தமிழாக்கம்,
ஆசிரியர்.

சைவ சித்தாந்த சாத்திர வகுப்பு

சமயநெறி பரப்பும் நன்னோக்குடன், வழக்கம்போல இவ்வாண்டும், சைவ சித்தாந்த சாத்திர வகுப்பு, லால்குடி என வழங்கும் திருத்தவத்துறையில், **தம்பாச்சியாப்பிள்ளை** அறநிலையத்தில், 15—5—69 முதல் 29—5—69 முடிய, 15 நாட்களுக்கு நடத்த ஏற்பாடு செய்யப் பட்டிருக்கின்றது. சைவ சமய ஞானாசிரியர்களுள் ஒருவராகிய உமாபதி சிவாசாரிய சுவாமிகள் அருளிச் செய்த "சிவப்பிரகாசம்" என்னும் சைவ சித்தாந்த ஞான நூலிற்கு, நாள்தோறும் காலையிலும் மாலையிலும் வகுப்பு முறையில் பாடம் நடத்தி, விளக்கம் செய்வதற்குத் தகுதி சான்ற அறிஞர் ஒருவர் இசைந்துள்ளார்கள். வித்துவான் திரு. ந. சிவப்பிரகாச தேசிகர் அவர்கள், தேவாரத் திருமுறைகளுக்குப் பொருள் விளக்கம் செய்வார்கள்.

வகுப்பு நேரம் : காலை 9 மணிமுதல் 11 மணிவரை.
மாலை 4 மணிமுதல் 6 மணிவரை.

தமிழ் **வித்துவான்** அல்லது **புலவர்** பட்டம் பெற்றவர்களும், தமிழ் எம். ஏ. பட்டம் பெற்றவர்களும், இந்த வகுப்பிற் கலந்துகொள்ளத் தகுதியுடையவர்கள் ஆவர். வகுப்பிற் கலந்துகொள்ள விரும்புவோர்க்கு, உறையுளும் இருவேளை உண்டியும் கட்டணம் இன்றி அளிக்கப் படும். வகுப்பிற் கலந்துகொள்ள விழைவோர் 30—4—1969 தேதிக்குள் கீழ்க்காணும் முகவரிக்கு விண்ணப்பித்தல் வேண்டும் :—

திரு. ஜி. வரதராஜ பிள்ளை, பி.ஏ.,
7. வடக்கு வீதி,
லால்குடி,
திருச்சி மாவட்டம்.

—ஆசிரியர்.

நலந்தரும் சொல்

(நாவீறர் திரு. நா. ஸ்ரீகாந்தராமாநுச சுவாமிகள், காரைக்கால்)

உலகம் பெரிது. அதனிடைப் பிறந்துள்ள உயிர்கள், ஒருபோதும் துன்பத்தை விரும்புவதில்லை என்றாலும், துன்பம் வாழ்க்கையில் காணப்படும் பேருண்மையாகின்றது. நாம் வதியும் பரந்த இப் பேருலகம், எவ்வாறு உண்மையில் காணப்பெறுகின்றதோ அதனினும் தெளிவாகத் துன்பம் காணப்படுகின்றது.

துன்பம் ஒருவனைப் பற்றி வாட்டுகின்றது. ஆனால், அவன் எனக்கொன்றும் துன்பமில்லை என்று கூறுவானாயின்; அது புண்ணைப் பொன் இலைகொண்டு மூடி மறைப்பதற்கு ஒப்பாகும்.

துன்பத்தை யாரே விரும்புகின்றார்? துன்பம் வந்துறும் காலத்து அதனை வருக என்று விரும்பியழைப்பாரைக் காண்டல் அருமை.

துன்பத்தை மனிதன் அடியோடு வெறுக்கின்றான்; வெறுத்தே வாழ விரும்புகின்றான். ஆயினும், மனிதனின் வாழ்க்கையில் பெரும்பகுதி துன்பமாகவே துலங்குகின்றது; துலாக் கோல் கொண்டு தூக்கிப்பார்ப்போமாயின் துன்பத்தட்டே தாழ்ந்திருக்கக் காணுகின்றோம்.

மனித உடலின் இயல்பே துன்பம் என்பர் திருவள்ளுவர். மனிதன் பிறப்பதும் துன்பத்திலே, இறப்பதும் துன்பத்திலே. இடை நடுவில் காணப்படும் சிறு வாழ்க்கையின் பெரும்பகுதியும் துன்பமயமாகவே காணப்படுகின்றது. ஒன்றை அகற்றின், மற்றொன்று தோன்றுகின்றது.

துன்பத்தின் நீங்கி வாழவே மனிதன் துடிக்கின்றான். அது வராது தடுக்கவே முயலுகின்றான். அன்றி, அது வரினும் அதனை அகற்றவே மனிதன் ஒல்லும் வகை முயலுகின்றான். மனிதன் மட்டும் என்ன? உயிரினம் அனைத்துமே இதற்கு விலக்கன்று. துன்பத்தினின்றும் தப்பித்து வாழ எத்தனை எத்தனை வழியுண்டோ அத்தனையும் செய்கின்றோம். அதனைப் புறம்காணவே விரும்புகின்றோம். என்றாலும் எதுபோது துன்பம் வேண்டாம் என்று வெறுக்கின்றோமோ, வராது தடுக்க முயலுகின்றோமோ, அதுபோதுதான் துன்பம் தன் முழுவலியுங் கொண்டு நம்மைத் தாக்கத் தொடங்குவதை உணர்கின்றோம். அத்தறுவாயில்தான், துன்பம் தன்நஞ்சு முழுவதையும் கக்கிக் கொடுமை இழைப்பதைக் காணுகின்றோம்.

பலவேளை நச்சரவங்கள் நம் அருகே ஊர்ந்து செல்வதுண்டு. அவ்வேளை அவைகளை நாம் கவனிப்பதில்லை. அந்நேரம் அவைகளும் நம்மை ஒன்றும் செய்வதில்லை. ஆனால் அவைகளைக் கண்டு, பதறித்துடித்து அடித்துக்கொல்ல முயலும்போது தான், அவைகளும் தம்முழு வலிமையுங் கொண்டு நம்மைத் தாக்குகின்றன.

அவ்வாறே துன்பம், நாம் வேண்டாது வெருட்டுந்துணையும் நம்மை அது தன் முழுவலிகொண்டு தாக்குகின்றது. உண்மை இது. இதனை இல்லையென்பார் இல்லை. ஆனபோது, துன்பத்தைத் துடைக்கும் வழி, துன்பநீக்கத்திற்கு உரிய நெறி, ஒன்றும் இல்லையாஎன்று, மனித மனம் ஏங்கித்தவிக்கின்றது. எல்லாம் நன்மைக்கே என்ற கோட்பாடு ஒன்று உண்டு. எல்லாம் நன்மையே, யாவும் நன்மைக்கே என்ற சான்றோர் கூற்றைக் கேட்டிருக்கின்றோம். சில சமயங்களில் இத்தத்துவம் உண்மையென்றே தர்க்க முறையில் விளக்கப்பெறுகின்றபோது உணர்கின்றோம்.

என்றாலும், எல்லாம் நன்மைக்கே என்று மட்டும் நாம் வாளாவிருப்பது கிடையாது. துன்பம் இன்றி இன்புற்றிருக்கும் காலத்து எல்லாம் நம்மைக்கே என்ற தத்துவம், அறிவுக்கு ஏற்றதாகவே படுகின்றது. ஆனால், துன்பம் வரும்போதுதான் நம்மால் அத்தத்துவ உபதேசங்களுக்கு செவி சாய்க்க முடிவதில்லை. எவ்வாறேனும், துன்பத்தினின்றும் நீங்கி வாழவே துடிக்கின்றோம்; முயலுகின்றோம். அதுபோது கொள்கைகளும் கோட்பாடுகளும் நம்மை விட்டு ஓடிப்போய் விடுகின்றன. இந்நிலையில்தான், சான்றோரின் கடவுட் கொள்கையான சமயம், மனித குலத்துக்குக் கைகொடுத்து உதவுகின்றது. சமயமே; மனிதன் துன்பமற்ற வாழ்க்கை வாழமுடியும்—எய்தமுடியும்என்று எடுத்து இயம்புகின்றது.

அறப் பெரியனும், அருளாளனுமான இறைவனைச் சார்ந்து நின்ற சான்றோர்களைச் சமயம் தன் கூற்றுக்குச் சான்றாக எடுத்துக்காட்டுகின்றது. சமயம் அளித்தருளும் "அஞ்சேல்" என்ற உறுதியை நோக்குமிடத்து; துன்பம் நிலையற்றதும் உண்மையற்றதும் ஆகத் தெரிகின்றது. தீதில் நன்னெறிகாட்டும் திருவருட் பெரியார்களான ஆழ்வார்கள் அருளிச் செய்யும் வழியில், துன்பம் அடியோடு துடைப்பதற்கு உரிய ஒரு பொருளாகவே தோன்றுகின்றது. ஆகவே இவ்விரண்டு கூற்றுக்களும் உண்மைகளேயாகின்றன. சமயம் கூறுவது பேருண்மை. சமயம் துன்பத்தை இல்லையென்று மறுப்பதில்லை. ஆனால் அதனின்றும் நீங்கி வாழ நெறி காட்டுகின்றது.

உலகை உயிர்கள் அனைத்தும் ஒன்று மற்றொன்றினைவிட உயர்ந்தோ தாழ்ந்தோ தான்காணப்படுகின்றன. அவற்றுள் எது வாயினும் தனக்கு ஒப்பும் உயர்வும் அற்ற நிலையில் விளங்குதல் இல்லையெனலாம். உள்ளம் தோற்றம் உரை செயல் முதலிய அனைத்திலும் வேற்றுமைகள் பல விளங்குகின்றன.

இவ்வேறுபாடுகளே உயிர்களை ஒரே வழியில் நிறுத்தாது, அவைகளைப் பல வழிகளிலும் அலக்கழிக்கச் செய்கின்றன. இங்ஙனமன்றி, ஒன்றே ஒன்று தனக்கு ஒப்பும் உயர்வும் இன்றி இருக்குமாயின் அது உள்ளம் உரைசெயல் கடந்த ஒரு பொருளாகும். அப்பொருள் ஒரே நிலையுடையதாய், நிலை பேறுடையதாய், பேரறிவும் பெருஞ் செயலுமுடையதாய், அல்லல் அனைத்திற்கும் எதிர்த்தட்டாய், துன்பம் என்ற தொன்றை ஏற்காததாய், இன்பமயமாய் எல்லாம் வல்லதாய் இருக்கும்.

இங்ஙனமாய பொருள் ஒன்று உண்டு. அது இருள்சேர் இருவினையுஞ் சேரா இறைப்பொருள். தனக்குவமையற்ற தனிப் பொருள். அப்பொருளைப் பற்றி, அவனது தூய திருப்பெயர்களை இடையறாது எண்ணி ஏத்திவாழத் துன்பம் ஒழியும் என்பர், இறையருள் கைவரப்பெற்ற அருளாளர்களான ஆழ்வார்கள்.

தேனும் பாலும் அமுதுமாய திருமாலின் திருநாமமான திருவெட்டெழுத்தை

அண்டை கொண்டார்க்குத் துன்பம் போம். எந்நாளும் இன்பம் ஒழியத் துன்ப மில்லை. மற்றும் பெறுதற்குரிய பெரும் பேறுகள் எல்லாம் கைகூடும் என்று, அடர்ந்த அருளாளரும், நாட்டுக்கு மன்ருடும் நல்லியல்பு உடையவருமான ஆழ்வார் திருமங்கை மன்னர் பின்வருமாறு அருளிச் செய்தருளுவர்.

குலந்தரும் செல்வம் தந்திடும் அடியார்
படுதுயர் ஆயின எல்லாம்
நிலந்தரம் செய்யும் நீள் விசும்பு அருளும்
அருளொடு பெருநிலம் அளிக்கும்
வலந்தரும் மற்றும் தந்திடும் பெற்றதாயினும்
ஆயின செய்யும்
நலந்தரும் சொல்லை நான்கண்டு கொண்டேன்
நாராயணா என்னும் நாமம்.

என்று தீங்கின்றி உலகம் வாழத் "திருமாமகளால் அருள்மாரி" என்ற சீர்மை சான்ற ஆழ்வார்,உலகினர்க்குத் தம் பேரருளால் உபதேசித்தருளுகின்ருர். இத்திருப் பாசுரத்தின் பொழிப்புரை வருமாறு :

தேனும் பாலும் கன்னலும் அமுதுமாய திருமாலின் திருவெட்டெழுத்தான நாராயணன் என்னும் நலந்தரும்சொல், தன்னை நற்றுணையாகப் பற்றினர்க்கு மிக உயர்ந்த தொண்டக் குலத்தைத் தந்தருளும்; நீங்காத திருத்தக்க செல்வத்தையும் தந்தருளும்; அடியவராயினும் அனுபவித்தே கழிக்க வேண்டிய துன்பம் என்று பெயர் பெற்றவை அனைத்தையும் தரை மட்டமாக்கி ஒழித்தருளும்; உயர்வற உயர்ந்த வீட்டின்பமாகிய பரமபதத்தையும் கொடுத்தருளும்; ஞானபக்திகளோடு கைங்கர்யம் என்னும் தொண்டாகிய பேற்றையும் தந்தருளும். மேலும், தன்னை இறைவனைப் பெற்றுத் துய்க்கும் வலிமையையும் இவனறியாத எல்லா நலன்களையும் செய்து கொடுத்தருளும். ஈன்ற தாயினும் சாலப் பரிந்து ஆன்ம ஞானத்தையும் பிறப்பித்து அருளும். இத்தகைய உயர்வற உயர்ந்த பெருநலம் ஒன்றுண்டு என்று அறியாத யான், இன்று அதனைக் கண்டு கொண்டேன். உய்திபெற்றேன்'' என்பதாகும்.

இவ்வாறு, இப்பேரருளாளர் தலைவரான அருள்மாரி வள்ளல் கண்டுபற்றி, கைவரப் பெற்ற பெரும் பேற்றை, உலகமும் பெற்றின்புறுமாறு சொல்லியருளுகின்ருர்.

"நங்கள் வினைகள் தவிர உரைமின்
நமோ நாராயணமே."

செய்திச் சுருக்கம்

பங்குனி உத்திரப் பெருந்திருவிழாக்கள்

கோவை பேரூர் பட்டீசுவர சுவாமி கோயில்
அந்தியூர் ஸ்ரீபத்திரகாளியம்மன் கோயில்
காசவளநாடு கோவிலூர் சம்புகேசுவரசுவாமி கோயில்
திருப்பரிதி நியமம் பரிதியப்பர் கோயில்
சென்னை வடபழநி ஆண்டவர் கோயில்
பழநி, ஸ்ரீ தண்டாயுதபாணி சுவாமி கோயில்
சுவாமிமலை சுவாமிநாதசுவாமி கோயில்
பெருந்தலையூர் பொன்னுச்சியம்மன் கோயில்
குமாரவயலூர் சுப்பிரமணியசுவாமி கோயில்
திருவாமாத்தூர் அபிராமேசுவரர் கோயில்
தாயமங்கலம் ஸ்ரீமுத்துமாரியம்மன் கோயில்
ஆத்தூர் சோமநாதசுவாமி கோயில்
காஞ்சிபுரம் ஏகாம்பரநாதசுவாமி கோயில்
சென்னை சென்னமல்லீஸ்வரர் கோயில்.

மகாபாரதம்

அருண்மொழியரசு

திருமுருக கிருபானந்தவாரியார் சுவாமிகள்.

(முற்றொடர்ச்சி)

அம்பையின் ஆன்மா துருபதன் மனைவி பால் சேர்ந்து பிறந்தது. சிகண்டினி என்று பேரிட்டான் துருபதன். சிகண்டினி வளர்ந்து முற்பிறப்பின் வாசனையால் அந்த மாலையை யணிந்து கொண்டாள். பீஷ்மரைப் பகைப்பது பெருந்துயரம்என்று கருதிய துருபதன், தன் மகளான சிகண்டினியை ஊரைவிட்டே விரட்டிவிட்டான். சிகண்டினி அஞ்சிக் கங்கோத்பத்தியில் தவஞ் செய்துகொண்டிருந்த, இஷீகர் என்ற முனிபுங்கவருக்குப் பணிவிடை புரிந்துகொண்டிருந்தாள். அவளுடைய பணிவிடையால் உள்ளம் உவந்த முனிவர் "இங்கு விபஜனம் என்ற விழா நடைபெறும்; அப்போது துப்புரு என்ற கந்தருவ மன்னன் உனக்கு உதவி செய்வான்" என்று வரம் தந்தார்.

விபஜனம் என்ற கந்தருவ விழா நடைபெற்றது. கந்தர்வர் இருவர் அங்கே ஒரு நாடகம் நடிக்க விரும்பினார்கள். ஒருவன் பெண்வேடம் போட நினைத்தான். அங்குள்ள சிகண்டினியைப் பார்த்து அவளுக்குத் தன் ஆண்வடிவைத் தந்து அவளுடைய பெண்வடிவைப் பெற்றுக்கொண்டான். சிகண்டி ஆணுகி, புத்புதகம் என்ற இடம் சென்று சிறந்த விற்பயிற்சி பெற்று பாஞ்சால நாட்டை யடைந்து, தந்தையைப பணிந்து, "நான் பீஷ்மரை வதைப்பேன். நீர் அஞ்சற்க" என்று கூறித் தைரியம் ஊட்டி இருந்தான். ஒற்றர் மூலம் இவற்றையெல்லாம் அறிந்த பீஷ்மர் சிறிதும் சலனம் உறாமல், விதிப்படி எதுவும் நடைபெறும் என்றிருந்தார்.

விசித்திர வீரியன் தன் இரு மனைவியருடன் இன்புற்று வாழ்ந்தான். தங்கட்குத் தகுதியான கணவன் வாய்த்தான் என்று கருதி அம்பியையும் அம்பாலிகையும் ஒருமைப்பட்ட மனத்துடன் அவனுக்கு வேண்டிய பணிகளைப் புரிந்து வாழ்ந்தார்கள். விசித்திர வீரியன் பேரழகுள்ளவன். அவனைக் கண்ட எந்தப் பெண்மணியும் சித்தம் கலக்கமுறுவாள். அழகினுல் ஈடும் எடுப்பும் இல்லாத அவன், சதா மனைவியர் சுகத்திலேயே அதிகம் ஆழ்ந்தான். ஏழு ஆண்டுகள் சென்றபின் க்ஷயம் என்ற நோயால் பீடிக்கப்பட்டு, யௌவன வயதிலேயே அவன் மரணம் அடைந்தான்.

சத்தியவதியும் பெருந் துயரமுற்றாள். பீஷ்மரும் கலக்கமுற்றார். மருமக்கள் இருவரும் ஆருத்துயரம் அடைந்து அழுதார்கள். அந்தக் குலம் இருண்டுவிட்டது.

தனியான இடத்தில் பீஷ்மரைச் சத்தியவதி அழைத்து "மகனே! நீ எல்லா அறங்களையும் அறிந்தவன். ஆசை பற்றிச் செய்வதுதான் பாவம். இந்தச் சந்திர குலம் காலற்றுவிட்டது. என் சொல்லை நீ தட்டமாட்டாய் என்று கருதுகின்றேன். உன் கொழுந்தியர் இருவரும் இளமையிலேயே கணவனையிழந்து விட்டார்கள். நீ அவர்களிடம் சந்ததியை உண்டு பண்ணு. இது குற்றமாகாது. நம் குலம் அழியக்கூடாது" என்றாள்.

அம்மா! இந்தப் பீஷ்மன் ஒருபோதும் உண்மையை விடமாட்டான், உயிரை

யேனும் விடுவான். ஆசையின்றிப் புத்திரனை மட்டும் விரும்பிச் செய்வது ஆபத்துக் காலத் தருமந்தான். இதைவேறு தக்கவர் மூலம் நியமிக்கலாம்'' என்றார் பீஷ்மர்.

சத்தியவதி, வியாசருடைய வரலாற்றைக் கூறி, அவர் மூலம் குல வளர்ச்சி செய்யலாம் என்று தெரிவித்துப் பீஷ்மருடைய அனுமதியும் பெற்று வியாசரை நினைத்தாள். வியாச முனிவர் உடனே தோன்றித் தாயாருடைய திருவடியில் வீழ்ந்து தொழுதார். குலவளர்ச்சி செய்யுமாறு வேண்டிக்கொண்டாள்.

மூவாசையுந் துறந்த முனிவர் பெருமான் தாயின் மொழியைத் தலைமேற் கொண்டார். அவருடைய கரிய உருவம் தாடி சடை முதலிய விகாரவுருவைக் கண்டு அம்பிகை கண்களை மூடிக்கொண்டாள். அவளுக்குக் கருத்தானம் தந்து, வியாசர் தாயாரிடம் வந்து ''அம்மா! பதினாயிரம் யானை பலத்துடன் ஒரு புத்திரன் பிறப்பான். அவனுக்கு நாலு புதல்வர்கள் பிறப்பார்கள். ஆனால் தாய் செய்த பிழையால் பிறக்கும் மகனுக்கு விழிப்புலன் இருக்காது'' என்று கூறிவிட்டுச் சென்றார். அதுபடியே பிறந்த குழந்தை குருடாக இருந்தது.

பரிமளகந்தி மீளவும் வியாசரை அழைத்து, இரண்டாவது மருகிபால் சந்ததியைத் தருமாறு பணித்தாள். அம்பாலிகை வியாசருடைய தவவொளியைத் தாங்கமாட்டாமல் உடல் வெளுத்து விட்டாள். அம் முனிவர் அவளுக்குப் புத்திரதானந் தந்து தாயாரிடம் வந்து ''அம்மா! நல்ல மைந்தன் பிறப்பான். தாயின் பிழையால் உடம்பு வெண்மையாக இருக்கும். பாண்டு என்று பேர் பெறுவான். அவனிடம் தேவர்களே வந்து ஐந்து குமாரர்களாகப் பிறப்பார்கள்'' என்று கூறிவிட்டுச் சென்றார். அதுபடியே வெண்மையானநிறமுள்ளமகன்பிறந்தான். சத்தியவதி அது கண்டு நிறைவு பெறாது மீளவும் மகனை அழைத்து, மூத்த மருகியிடம் இன்னொரு உத்தமமான மகவைத் தருமாறு கட்டளையிட்டாள். அம்பிகை வியாசருடைய அருவருப்பான உடம்பை நினைந்து அஞ்சித் தன் தாதியை ஏவினாள். தாதி வியாசரைத் தொழுது உபசரித்தாள். அவளிடம் மகப்பேற்றைத் தந்து, வியாசர் தாயாரைத் தொழுது தருமந் தெரிந்த ஒரு சிறந்த மைந்தன் பிறப்பான். ஆனால் தாதி வயிற்றில் பிறப்பான். இனி எனக்கு இந்த ஏவல் தரக்கூடாது'' என்று கூறிவிட்டுச் சென்றார். தாதி வயிற்றில் தரும தேவதையே வந்து பிறந்தார்.

ஜனமேஜயர் வைசம்பாயனரைப் பார்த்து, ''முனிவர் பெருமானே! தரும தேவதை பிறக்கக் காரணம் யாது?'' என்று கேட்டார்.

''அரசனே! மாண்டவ்யர் என்ற முனிவர் தீர்த்த யாத்திரை செய்து கொண்டிருந்தார். ஓய்வு பெறும் பொருட்டு ஒரு நகரின் புறத்தே பர்ணசாலை அமைத்து அதில் அமர்ந்து தவஞ் செய்துகொண்டிருந்தார். இரவில் மன்னன் வீட்டில் திருடிய கள்வர்கள் வெளிப்பட்டபோது, காவலரால் தொடரப்பட்டார்கள். கள்வர்கள் மாண்டவ்யருடைய பர்ணசாலையில் நுழைந்து, திருடிய பொன்னை அவர்முன் வைத்துவிட்டு ஒளிந்து கொண்டார்கள். காவலர் முனிவரையும் கள்வர் என்று கருதி, அவரையும் கள்வர்களையும் பிடித்துக்கொண்டு போய், மன்னனிடம் ஒப்படைத்தார்கள். கள்வர்களை மன்னன் கொல்வித்தான். மாண்டவ்யரைக் கழுவில் ஏற்றினான்.

இரவில் வானிடையுலாவும் முனிவர்கள் கண்டு வணங்கி, எந்தப் பாவி இவ்வணணம் புரிந்தான்? அவனையும் அவனுடைய நகரையும் ஏன் எரிக்காமலிருக்கின்றீர்? தவ வலிமையால் உலகத்தை எரிக்கும் பெருமையுடைய நீர் ஏன் பொறுமையாக இருக்கின்றீர்?'' என்று கேட்டார்கள். மாண்டவ்யர் ''என்னை ஒருவரும் இடர்ப் படுத்தவில்லை. என் வினையே இதற்குக் காரணம்'' என்றார். இந்த உரையாடலை ஒற்றுக்கேட்ட ஒற்றர்கள் அரசனிடம் கூறினார்கள். அரசன் அஞ்சி அவரைக் கழுவிலிருந்து இறக்கி மன்னிப்புக் கேட்டுக் கொண்டான்; உடம்பில் உள்ள சிறு சிறு ஆணிகளை

யெல்லாம் எடுத்துவிட்டு, நெஞ்சில் உள்ள ஆணியை அரம் கொண்டு அராவினுன். நான்கு விரற்கடையுள்ளபோது "மன்னனே! இந்த அளவில் இருக்கட்டும். சிவபூசை செய்யும் எனக்கு இது பூக்குடல் மாட்டுவதற்குப் பயன்படும்" என்ருர். அதனுல் அவர் ஆணிமாண்டவ்யர் என்று பேர் பெற்ருர்.

கடுந்தவமுள்ள அம்முனிவர் ஒரு சமயந் தருமதேவதையைச் சந்தித்தார். "ஆணி என் கழுத்தில் கிடப்பதற்கு உரிய தீவினை என்ன செய்தேன்?" என்று கேட்டார்: அறக்கடவுள், "முனிவரே! நீர் இளமையில் பறவைகளைப் பிடித்து வாலை வெட்டி ஆணியைச் சொருகிப் பறக்கவிட்டீர். புண்ணியமும் பாவமும் செய்தவனிடம் வளர்ச்சியடைந்து வருகின்றன" என்ருர். முனிவர் இளமையில் செய்த பாவம் என்னைச் சேர்வது நியாயமாகாது. இன்று முதல் நான் இந் நியதியை ஏற்படுத்துகின்றேன். பதினுன்கு ஆண்டு வரை மக்கள் செய்த பாவம் அவர்களைச் சேரக்கூடாது. சிறிய குற்றத்திற்காகப் பெரிய தண்டனை விதித்த படியால் நீ பூவுலகில் தாதியின் மகனுகப் பிறப்பாய்" என்று கூறினுர். அதனுல் அறக்கடவுள் விதுரராக வந்து பிறந்தார்" என்று கூறினுர்.

திருதராட்டிரன், பாண்டு விதுரன்என்று மூன்று புதல்வர்களும் பொன்மேருகிரியின் மூன்று சிகரங்கள் போல வளர்ந்தார்கள். பீஷ்மரே அவர்கட்குக் கலைகளைப் போதித்தார். பீஷ்மர் ஆளுகின்ற அந்தக் காலத்தில் கிருதயுகம்போல் தரும நெறி ஓங்கியது. பாண்டுவும் விதுரரும் வில்வாள் முதலிய போர்க்கலையிலும் வல்லவர்களாக ஆனுர்கள்.

அரசியன் முறைப்படி கண்ணில்லாதவன் பட்டத்துக்கு உரியவனுகக்கூடாது. பாண்டுதான் அரசனுக வேண்டும். ஆனுல் பாண்டு தன் தமையனே முடிசூடியாள வேண்டும் என்று வற்புறுத்தினுர். பீஷ்மர் திருதராஷ்டிரனுக்கு முடிசூட்டினுர். பாண்டு சேனுபதியாகவும், விதுரர் முதல் அமைச்சராகவும் இருக்குமாறு செய்தார். ஒப்புக்குத் திருதராஷ்டிரன் அரசன் என்று இருந்தான். அரச காரியங்கள் அனைத்தையும் பாண்டுவே குறைவறச் செய்து வந்தான்.

பீஷ்மர், திருதராஷ்டிரனுக்கும் பாண்டுவுக்கும் திருமணஞ் செய்யவேண்டும் என்று சிந்தித்தார். அறிவு நிறைந்த விதுரருடனும் ஆலோசித்தார். சிவபெருமானை ஆராதித்து நூறு புதல்வர்களைப் பெறவேண்டும் என்று வரம் பெற்றவளான காந்தாரியைப் பற்றியும், குந்தி தேவியைப் பற்றியும், மாத்திரா தேவியைப் பற்றியும் கேள்விப்பட்டார். தக்க அமைச்சர்களைக் காந்தாரதேயத்துக்குப் பெண் கேட்கும் பொருட்டு அனுப்பினுர். அவர்கள் சென்று ஸுபலனைக் கண்டு கேட்டார்கள். சந்திரகுலத்தின் சம்பந்தத்தை விரும்பிய மன்னன் பெண் தருவதற்கு இசைந்தான். இதைக் கேட்ட காந்தாரி தனக்கு அமையும் கணவனுக்குக் கண் இல்லையென்று கேட்டு, தானும் கண்ணில்லாதவளாக நாயகனைப்போலவே இருக்க வேண்டும் என்று கருதி, ஒரு துண்டை மடித்துக் கண்ணைக் கட்டிக்கொண்டாள். பின்னர் எக்காலத்தும் அதை அவள் அவிழ்க்கவில்லை. காந்தாரிக்கும் திருதராஷ்டிரனுக்கும் சிறப்பாகத் திருமணம் நிகழ்ந்தது.

காந்தாரியின் தங்கைகள் சத்திய விரதை, சத்திய சேனை, சுதேஷ்ணை, சம்ஹிகை, தேஜச்ரவை, சுச்ரவை, நிக்ருதி, சுபை, சம்படை, தசார்ணை என்று பத்துப் பெண்களையும் சுபலன் என்று மன்னன் திருதராஷ்டிரனுக்கே கல்யாணம் செய்து தந்தான்.

அன்றியும் வேறு வேறு தேயத்து அரச குமாரிகளான நூறு கன்னியர்களை அவ்வப்போது திருதராஷ்டிரனுக்கு மணஞ் செய்வித்தார். நூற்றுப் பதினெரு மனைவிகளுடன் வாழ்ந்த அவன், ஒரு வைசியப் பெண்ணையும் வைப்பாகக் கொண்டான்.

யது குலத்திலே சூரசேனன் என்பவன், பிரதை என்று ஒரு பெண்மணியைப் பெற்ருன். அவன் முன்பு தன் மைத்துனனிடம் வாக்களித்திருந்தபடி தன் மகனைத்

தன் மைத்துனன் குந்திபோஜனுக்கு சுவீகாரமாகத் தந்தான். குந்திபோஜன் வளர்த்தபடியால் பிரதை என்ற அவள், குந்தி என்ற நாமத்தையடைந்தாள். அவள் அறிவு அடக்கம் பண்பு ஒழுக்கம் அழகு முதலிய குணங்களை யெல்லாம் அணிகலன்களாகக் கொண்டிருந்தாள்.

குந்திபோஜனிடம் வந்த துருவாசருக்கு அவள் ஓராண்டு நியமந்தவருது தொண்டு புரிந்தாள். கோபமே ஒரு வடிவான துருவாசருக்குக் குறிப்பறிந்து சிவபூசைக்குரிய பால் தயிர் நெய் மலர் முதலியன தந்து அவர் மனம் மகிழப் பணி செய்தாள். துருவாசர் குந்தியை அழைத்து ஒரு மந்திரம் உபதேசித்து "அம்மா! இந்த மந்திரத்தை உச்சரித்து எந்த எந்தத் தேவதையை ஆவாகனம் செய்வாயோ, அந்த அந்தத் தேவதையைப் போன்ற மகிமையுள்ள மைந்தன் பிறப்பான்" என்று அருள் செய்தார்.

குந்தி கன்னிமாடத்தில் இருக்கும்போது விளையாட்டாக, அம் மந்திர சக்தியைப் பரிட்சிக்க நினைத்துச் சூரியபகவானை நினைத்து மந்திரத்தை உச்சரித்தாள். ஆதித்த பகவான் ஒளிமயமாக வந்து அவள் முன்னே நின்றார். அவள் அவரைக் கண்டு அஞ்சினாள். தாங்கள் யார்? என்று கேட்டாள். "அன்புள்ளவளே! நான் கதிரவன். இம்மந்திரத்தின் ஆற்றலினால் வந்தேன். உனக்குச் சந்தானத்தைத் தருவேன். அம்மகன் கவச குண்டலத்துடன் தோன்றுவான். அவன் தருமஞ் செய்பவனாகவும், நானே தடுத்தாலும் இல்லையென்னாது வழங்கும் வள்ளலாகவும் மானமுள்ளவனாகவும் இருப்பான்" என்று கூறினார்.

குந்தி "ஐயனே! நான் கன்னிகை; என்பால்குழந்தை தோன்றுவது நலமன்று. என்னைமன்னிப்பீர். வேண்டாம்" என்றாள். "குந்தியே என்வரவு வீணாகக்கூடாது, நீ பயப்படாதே; மீளவும் கன்னியாவாய்; இல்லையேல் மந்திரத்தை உபதேசித்த முனிவனையும் உன்னையும் உன் குலத்தையும் எரித்துவிடுவேன்" என்றார் சூரிய பகவான்.

அவர் அவளிடம் கவசகுண்டலத்துடன் கூடிய ஒரு குமாரனை யளித்தார். அம் மாதரசி குலத்தாருக்கு அஞ்சி, ஒரு பெட்டியில் நவரத்தினங்களை நிரப்பித் தேவ குமாரனைப் போன்ற அம்மைந்தனை அப் பெட்டியில் வைத்து, பெட்டிக்கு அடியில் தக்கைகளையும் வைத்து நதியில் விட்டாள்.

திருதராஷ்டிரனுடைய தேர்ப் பாகன் அதிரதன் என்பவன் நீராடச் சென்றவன், மிதந்துவரும் பெட்டியை எடுத்துப் போய்ப் பார்த்தான். கண்கூசுகின்ற ஒளியுடன் கூடிய அழகிய குமாரனைக் கண்டு அதிசயம் அடைந்தான். தன் மனைவி இராதை என்பவளிடம் தந்தான்; "வசுசேனன்" என்று பேரிட்டான். வசு—நவரத்தினத்துடன், சேனன்—சம்பந்தப்பட்டவன். நவமணியுடனும் கவச குண்டலத்துடனும் சேர்ந்து பிறந்தவன் என்பது பொருள். அம்மகன் சூரியன் உச்சியிலிருந்து மேற்கே சாய்கின்றவரை வெட்ட வெளியில் இருந்து சூரியனை உபாசனை செய்துவந்தான். அவன் அந்தணர்கள் எதனைக் கேட்டாலும் தருவான். ஒருநாள் கனவில் சூரியன் தோன்றி "மகனே! நாளை இந்திரனே வந்து உன்னிடம் கவச குண்டலங்களைக் கேட்பான். நீ கொடாமல் இருக்க வேண்டும்" என்றார். மறுநாள் இந்திரன் அவனிடம் அந்தணனாக வந்து யாசித்தான். ஆதித்தன் மறுத்தும் அவன் உடம்பில் ஒட்டிக்கொண்டிருந்த கவசத்தையும் குண்டலத்தையும் அறுத்துத் தந்தான். அதனால் அவன் கர்ணன் என்றும், வைகர்த்தன் என்றும் பேர் பெற்றான். (க்ருணு, க்ரதி என்கிற இரு பகுதிகட்கும் சேதிப்பது என்று பொருள்). இந்திரன் மகிழ்ந்து, யார் மீது விடுத்தாலும் அவரைக் கொல்லக்கூடிய சக்தியாயுதத்தைக் கர்ணனுக்குத் தந்தான். அது ஒரு முறை விட்டவுடன் யாரையும் கொல்லும்; பின் என்பால் வந்துவிடும்" என்று இந்திரன் கூறிச் சென்றான்.

குந்திபோஜன் சுயம்வரம் அமைத்தான். மற்ற அரசர்களைத் தன் அழகினால் ஒளி குன்றவைத்து, அரச சிம்மம்போல் அமர்ந்திருந்த பாண்டுவுக்குக் குந்தி மண மாலையைச் சூட்டினாள். குந்திக்கும் பாண்டுவுக்

கும் விதிப்படி அங்கேயே திருமணம் நடை பெற்றது. சகல வரிசைகளுடனும் மனைவி யுடனும் பாண்டு அத்தினபுரம் போய்ச் சேர்ந்து, குந்தியைப் பட்டத்தரசியாக்கி னுன்.

பீஷ்மரே தன் பரிவாரங்களுடன் சென்று மத்திரதேயத் தலைவனுன சல்லியனைப் பார்த்து, அவன் தங்கையான மாத்திரா தேவியைப் பாண்டுவுக்குக் கல்யாணம் செய்து வைத்தார்.

அதிவீரனுகிய பாண்டு சதுரங்க சேனை களுடன் புறப்பட்டு, நான்கு திசைகளிலும் உள்ள மன்னர்களை வென்ருன். அவனை எதிர்த்த அரசர்கள் அழிந்தார்கள். பணிந்தவர்கள் வாழ்ந்தார்கள். அரசர்கள் விலைமதிக்க முடியாத பொன் மணி ஆடை களை அவனுக்குக் காணிக்கையாகத் தந் தார்கள். எங்கும் தன் புகழை நிலைநாட்டித் திக்குவிஜயம் புரிந்து சிம்மநாதஞ் செய்து திரும்பி வந்தான். பீஷ்மர் முதலியவர்கள் எதிர்கொண்டு அவனை வரவேற்ருர்கள். கொண்டுவந்த நிதிகளைச் சத்தியவதிக்கும் தன் தாய்க்கும் தமையனுக்கும் வறிய வர்க்கும் வழங்கினுன். குருகுலத்தின் புகழ் அவனுல் வளர்ந்தது. பாண்டுவின் ஆற்றலைக் கண்டு அரசர்கள் நடுங்கி னுர்கள். அவனுடைய ஆட்சியில் பலர் நலம் பெற்ருர்கள். பரத சக்ரவர்த்தியைப் போல் பாண்டுவும் பல யாகங்களைச் செய் தான். சயந்தனைக் கண்டு சசிதேவி மகிழ்ந்தது போல் பாண்டுவின் பெரு மையைக் கண்டு அம்பாலிகை ஆனந்த மடைந்தாள். குரு குலத்தின் மங்கிய கீர்த்தி பாண்டுவினுல் மறுமலர்ச்சியடைந் தது. பாண்டு எந்த ஒரு சிறு காரியத் தையும் தன் தமையன் திருதராட்டிரனைக் கேட்டே செய்தான். அண்ணனை எல் லோரும் மதிக்குமாறு நடந்தான். பாண்டு வின் அடக்கத்தைக் கண்டு எல்லோரும் அவனை வாயார வாழ்த்தினுர்கள்.

(தொடரும்)

செய்திச் சுருக்கம்

சென்னை தியாகராயநகர் தருமபுர ஆதீன சமயப் பிரசார நிலையத்தின் சார்பில் நடைபெற்று வரும் தமிழ் வித்துவான் வகுப்பின் 15—ஆம் ஆண்டு நிறைவு விழா, 15—3—69 அன்று மாலை, தமிழ்நாடு அரசின் இந்துசமய அறநிலைய அமைச்சர் மாண்புமிகு திரு கே. வி. சுப்பையா B. A., அவர்கள் தலைமையில் மிகவும் சிறப்புற நடைபெற்றது. வித்வான் ஸ்ரீலஸ்ரீ சோமசுந்தரத் தம்பிரான் சுவாமிகள் அவர்கள், தொடக்கவுரை நிகழ்த்திச் சிறப்பித்தார்கள். தமிழ் வித்வான் வகுப்பிற் பயிலும் மாணவ மாணவியரின் சார்பில், மாண்புமிகு அறநிலைய அமைச்சர் அவர்களுக்கு "வரவேற்பு வாழ்த்துக் கவிதை" சிறந்த முறையில் வாசித்தளிக்கப்பெற்றது. 'திருக்கோயில்' ஆசிரியர் புலவர் திரு. ந. ரா. முருகவேள் M. A., M. O. L. அவர்கள், இலக்கியச் சுவை ததும்பும் வண்ணம் "விடைதரு சொற்பொழிவு" (Valedictory Address) நிகழ்த்தி, மாணவர்களுக்கு வாழ்த்துரை வழங்கினுர்கள். பாடம் நடத்திய ஆசிரியர்களுக்கு, மாணவர்கள் நன்றிப் பாராட்டுரைகள் நவின்று, மாண்புமிகு அமைச்சர் அவர்களின் கைவழியாக, அன்பளிப்புப் பரிசில்களை வழங்கி மகிழ்ந்தனர். இறைவணக்கத்துடனும், தேசீய கீதத்துடனும், விழா சிறப்புற நிறைவு எய்தியது.

"செல்வச் செழிப்பு"

திருமலை. நல்லான் இராமகிருஷ்ணையங்கார், சென்னை.

"திரு" என்னும் சொல்லுக்குப் பல பொருள்கள் உண்டு. செல்வம் என்பது ஒரு பொருளாகும். செல்வம் என்ற சொல்லுக்கு மேம்பாடு என்ற பொருள் கொண்டார் பரிமேலழகர். "அருட்செல்வம் செல்வத்துட் செல்வம்" என்னும் திருக்குறளின் உரைகாண்க. மேம்பாடு அவரவர் தகுதிக்கேற்ப அமையும்.

முச்செல்வம் :

அறிவுடைய மேலோர் இறைவனுடன் தமக்கேற்படும் தொடர்பினையே செல்வமாக மதிக்கின்றனர். அங்ஙன் அறிவுடையோர் மதிக்கும் செல்வம் மூன்று வகைப்படும். இறைவனுக்கு அடிமைசெய்யும் திறத்தது இவ்வான்ம வடிவம் என்று தன்னையுள்ளபடி உணர்ந்து நிற்கும் நிலையே செல்வம் என்பது ஒருவகை. இலக்குவன் இவ்வகைச் செல்வம் வாய்ந்தவனாகக் கருதப்படுகிறான். 'இலக்குவன் செல்வம் நிரம்பினவன்' என்று வான்மீகி முனிவர் இராமனை இன்புறுத்தும் செயல் புரியுமவனான இலக்குவனைக் குறிப்பிட்டிருப்பதுகாண்க.

இனி அடிமைத்திறன் வாய்ந்த தனக்கு, அவ்வடிமை இன்பம் பெற இறைவனே வழியென்று துணிந்து நிற்கும் நிலை மற்றொரு வகைச் செல்வமாம். இவ்வகைச் செல்வம் வாய்ந்தவனாக விபீடணன் கருதப்படுகிறான். மனைவி மக்களை விட்டுப் பேரின்பமுற இராமனே தஞ்சமென்று துணிந்து விண்ணின் மிசையே கிளம்பிய விபீடணனை விண்ணகத்திற்கிளம்பிய செல்வன் என்று வான்மீகி குறிப்பிட்டிருப்பதுகாண்க.

இனி இறைவன் வழியாக அவன் திறத்துப் புரியும் அடிமையே பேரின்பப்பேறு என்று துணிந்துநிற்கும்நிலை, வேறொரு வகைச் செல்வமாகும். இவ்வகைச்செல்வம் வாய்ந்தவனாகக் கஜேந்திரன் கருதப்படுகிறான். பறித்தபூவை இறைவனடியிற்சேர்ப்பதொன்றினையே தனக்குப் பெற வேண்டிய பேறாகத்துணிந்து நீரிலமூழ்ந்தி அழுகி விடாதபடி அப்பூவைத் துதிக்கையால் தூக்கி நிற்கும் கஜேந்திரனை "ஸ்து நாசு வரஃஸ்ரீமாங்" (அந்த கஜேந்திரச் செல்வன்) என்று விஷ்ணு தருமம் குறிப்பிட்டிருப்பதுகாண்க.

வைணவச் செல்வம் :

ஆக, தன்னையுணர்ந்து தனக்கு இறைவனே தஞ்சம் என்று துணிந்து அல்லல் தீர்ந்து அடிமையே குறிக்கோளாகக் கொண்டிருப்பது, மூவகைச் செல்வமும் வாய்ந்து பெருஞ் செல்வராக வாழ்வதாகுமன்றோ? இத்தகைய செல்வமே வைணவச் செல்வமென்று வழங்கப் படுகின்றது. இத்தகைய செல்வம் தமக்குச் சிறப்பாக வாய்த்துள்ளதென்று திருமழிசைப் பிரான் அருளிச் செய்கிறார். திருவரங்கன் தனக்கு அடியார் வேண்டுமென்று தேடி அலைகின்றானும். மறைப்பொருளைக் கேட்டறிந்து தாமாகக்கண்டு கொண்டு விட முயலும் எவருக்கும் காண்டற்கரியவனாயினும், அவன் தானாகத்தன்னைக் காட்டற்குத் திருவரங்கத்திலே எழுந்தருளி, "ஆரோநமக்கு அகப்படுவோர்" என்று பார்த்துக்கொண்டிருக்கிறானும். திருவடியை நாடி உழலுகிறாராம் திருமழிசைப்பிரானும். அங்ஙனம் நாடி உழலும்படிமனம் பற்றிநிற்கின்றதாம் திருவரங்கனிடத்திலே. அந்தமனம் விலகி

விடாதபடி பார்த்துக்கொள்ள வேண்டும் என்று வேண்டுகிருர் திருமழிசைப் பிரான் திருவரங்கனை நோக்கி. உடனே அவருடை வேண்டுகோள் பயனடைந்துவிடுகிறது "ஏழுலகும் செங்கோலோச்சும் திருவரங்கன் எழுந்தருளி நெஞ்சுதவிரும்புதலை விடாதபடி பார்த்தருள என்னேடு ஒன்றி நின்று விட்டான். அத்தகைய செல்வம் எனக்கே உள்ளது. அதுதானும் இன்றே" என்று பெருமிதத்துடன் பேசுகிருர் திருமழிசைப்பிரான்.

வைணவச் செல்வம் தமக்குச் சிறப்பாக வாய்த்த பெருமிதத்தை வளமிக்க சொற்களால் விளக்கும் திருமழிசைப்பிரான் பாசுரங்கள் இதோ தரப்படுகின்றன. படித்துப் இன்புறுக :—

"ஆட்பார்த் துழிதருவாய் கண்டுகொள் ளென்றுநின்
தாட்பார்த் துழிதருவேன் தன்மையை—கேட்பார்க்
கரும்பொருளாய் நின்ற வரங்கனே யுன்னை
விரும்புவதே விள்ளேன் மனம்"

"மனக்கேதம் சாரா மதுசூதன் தன்னைத்
தனக்கேதான் தஞ்சமாக் கொள்ளில்—எனக்கேதான்
இன்றென்றி நின்றுலகை யேழாணை யோட்டினன்
சென்றென்றி நின்ற திரு"

(நான்முகன் திருவந்தாதி 60, 61).

(ஆட்பார்த்தல்—அடிமையை எதிர்பார்த்தல். உழிதருதல்-அலேதல். உழிதருவேன்-தன்மையை என்றும், கண்டுகொள்க என்றும், மனம் விள்ளேன் என்றும் தனித் தனியேகூட்டிமுடிக்க. இனிஉழிதருவேன், விள்ளேன் தன்மையை, என்றும் கண்டுகொள் என்று ஒன்ருய்க் கூட்டி முடித்தலுமாம். மனக்கேதம்—மனம் கேதம் என்று பிரிக்க. வடமொழித்தொடர். இனி மனக்கு (மனத்துக்கு) ஏதம் என்று பிரித்தலுமாம். ஏழ் உலகை எனமாறுக. ஆணையோட்டினன்—ஆணையிட்டு ஆட்சி நடத்துபவன், வினையாலணையும் பெயர். சென்று-வந்து; திரு எனக்கேதான் என்று இயையும்)

இப்பாசுரங்களில் "தாட்பார்த்துழி தருவேன் தன்மை" என்பதனல் முதல் வகையைச் சேர்ந்தசெல்வமும், 'தனக்கே தான் தஞ்சமாக்கொள்ளில்" என்பதனுல் இரண்டாம் வகையைச் சேர்ந்த செல்வமும், "ஆணையோட்டினன்" சென்று ஒன்றி நின்றதாகக் கூறுவதால் மூன்ரும் வகையைச் சேர்ந்த செல்வமும் உய்த்துணரத்தக்கனவாய் அமைந்து வைணவச் செல்வம் மிளிருவதைக் கண்டு களிக்க.

செல்வம் கொழிக்கும் இடம் :

இரண்டாம் பாசுரத்தில் உலகேழை ஆணையோட்டினன் என்பது திருவரங்கனையே குறிக்கிறது. 'புவனியும் விண்ணுலகும் ஆதும் சோராமே ஆள்கின்ற எம் பெருமான் செங்கோலுடைய திருவரங்கச் செல்வனுர்' என்று ஆண்டாள் அருளியதை இங்கு நினைவு கூர்க.

திருவரங்கனல், தாம் செல்வம் பெற்றதாகத் திருமழிசைப் பிரான் கூறுதலின், வைணவச் செல்வத்தை இறைவன் அடியார்க்கு வழங்குமிடம் திருவரங்கம் என்பது போதரும். வைணவச் செல்வம் கொழிக்குமிடம் திருவரங்கம் என்க. எனவே அடியார்கள் எங்கிருப்பினும் "ஸ்ரீரங்க ஸ்ரீயை இடையூறின்றி வளர்த்தருளவேணும்" என்று இறைவனை அன்ருடம் வேண்டுவது இந்த வைணவச் செல்வத்தையே என்று அறிக.

செல்வ வாழ்வு :

எங்கிருப்பினும் வேண்டப்படும் ஸ்ரீரங்க ஸ்ரீயாகிய வைணவச் செல்வத்தைத் திருவரங்கத்திலேயே இருந்து துய்த்து மகிழ விழைகின்றனர் நல்லோர் பலர். "நல்லார்கள் வாழும் நளிரரங்கம்" என்று ஆண்டாள் அருளிச் செய்திருப்பது காண்க. இங்கு "வாழும்" என்னும் சொல் அமைந்திருக்குமழகு கவனித்தற்குரியது. அரங்கத்தில் இருப்பதே வாழ்ச்சி என்பது குறிப்பு. ஏனைய இடங்களில் சிலரே வாழ்வர். மற்றவர் ஏதோ இருப்பவர். இங்கு அங்ஙனன்று. அரங்கத்தில் இருத்தலும் வாழ்தலும் வேறுபட்டவையல்ல. வைணவச் செல்வம் எல்லாருக்கும் ஒக்க வாய்ந்து

உள்ளமையின் நல்லார்களாய் வாழ்கின்றனர் என்று விளக்கம் கொள்க.

வீட்டிலும் வீறுடைமை :

பெரிய வாச்சான் பிள்ளை நாம் காட்டிய ஆண்டாள் திருமொழிக்குப் பேரின்ப வடிவமானதொரு வியாக்கியானம் அருளியுள்ளார். திருவரங்கம் பயன் துய்க்கும் இடமாம். இங்கிருந்து இன்பம் துய்த்தற்கு வேறோரிடம் போக வேண்டியதில்லையாம். இறைவனை எளிய நிலையில் கண்ணாரக் கண்டு இங்கேயே களித்தலின், மேன்மை நிலையில் இறைவனைக் கண்டு இன்புறும் வீட்டுலகமும் இத்திருவரங்கத்துக்கு ஈடாக மாட்டாதாம். இச்சரீரம் நீங்கியதும் பரம பதம் வந்துவிடப் போகிறதே என்று அஞ்சுகின்றார்களாம் அவ்வூரிலுள்ளார். இதற்கு இரு சரித்திரச் சான்றுகளும் காட்டியுள்ளார் பெரிய வாச்சான் பிள்ளை.

(1) முதுகில் புண்வந்து நொந்து கிடக்கும் போது பட்டரை, திருவரங்கன், "(சாவுக்கு) அஞ்சினையோ" என்று கேட்டதும், "இங்கே குளிர்ந்த முகத்தையும் திருநாமத் தழும்பையும் முறுவலையும் இழக்கவென்றால் அடியேன் அஞ்சேனோ? என்று பதிலிறுத்தாராம்.

(2) ஆளவந்தார் மகனார் சொட்டை நம்பி முடிவு நேரத்தில் "ஸ்ரீவைகுண்ட நாதன் முகம் நம் பெருமாள் திருமுக மண்டலம் போலே குளிர்ந்திருந்ததில்லையாகில் முறித்துக் கொண்டு வருவதாக நினைத்திருந்தேன்" என்றாராம்.

"இச் சுவை தவிர யான் போய் இந்திர லோகமாளும் அச்சுவை பெறிலும் வேண்டேன் அரங்கமாநகருளானே" என்னும் தொண்டரடிப்பொடி ஆழ்வார் திருவாக்கும் இங்கு நோக்குதற்குரியது. இவ்விடத்தில் இந்திர லோகமென்பது கீழ்த் திசைக் கதிபனாய இந்திரனுடைய உலகத்தை அன்று; வீட்டுலகத்தையே ஆகும். "போய்" என்னும் சொல் வீட்டுலகம் திரு திருவரங்கத்துக்கு அண்ணியதாயிருந்தாலாவது ஒரு வேளை வேண்டுவதாகலாம். அது நெடுந் தொலைவிலுள்ளதே: அதனை எங்ஙனம் வேண்டுவது என்னும் கருத்துப் பட நின்றது.

மூன்றும் விபூதி :

வீட்டுலகமே வேண்டாம் என்னும் தொண்டரடிப் பொடியார் இந்நிலவுலகிலேயே நிலை பெற்றிருக்க வேண்டுமென்று கருதுகிறாரா? அதுவுமில்லை. "ஆதலால் பிறவி வேண்டேன் அரங்கமா நகருளானே" என்று அடுத்த பாசுரத்தில் நிலவுலக வாழ்வையும் வெறுக்கிறார். வீடும் வேண்டாம். இந்நாடும் வேண்டாம் என்றால் பின்னை இவர் வேண்டுவது தான் யாது? எனின் "அரங்க மாநகருளானே" என்பதனால் திருவரங்கத்திலிருப்பதே இவர் வேண்டுவதென்று தெரிகின்றது. திருவரங்கம் ஸம்ஸாரத்திற் சேர்ந்ததன்று என்பது இவர் கருத்துப் போலும். ஆக வீட்டுலகத்தினும் வீறுபெற்று வேறுபட்ட தாம் இறைவனாகிய அரங்கனை என்றும் காட்டிக் கொடுத்துக் கொண்டிருப்பதால், அவனை நினைக்கவே ஒட்டாத நிலவுலகத்தினும் விலகியதாய் விளங்குகின்றது திருவரங்கம். வீட்டுலகம் நித்திய விபூதி எனப்படும்; மற்ற ஏனைய உலகங்கள் லீலாவிபூதி எனப்படும். இவையிரண்டும் இறைவனுடைய சொத்துக்களாம். இவ்விரண்டிற்குள் அடங்காத தெதுவுமில்லை. திருவரங்கமோ இவற்றுளடங்காது தனித்துச் சிறந்து விளங்குகிறது. அதனை இறைவனது மூன்றும் விபூதியாகத் தொண்டரடிப் பொடியார் கருதுகிறார் போலும்.

பிறவிப்பேறு :

திருவரங்கத்தை விட்டுப் போய் விடலாகாது; அங்கேயே இருந்து அரங்கனையனுபவிக்கவேண்டும் என்றார் தொண்டரடிப் பொடியார். குலசேகரரோ அரங்கனிடம் ஈடுபாடு கொண்ட தொண்டருக்கு அடிமை செய்யப் பல பிறப்புக்கள் எடுக்க வேண்டுமென்று ஆசைப்படுகிறார். "அரங்கன் எனம்மானுக்கே, காதல் செய் தொண்டர்க் கெப்பிறப்பிலும், காதல் செய்யுமென்னெஞ்சமே" (பெருமாள் திருமொழி 2.6) என்பது அவரது திருமொழி. "அனேக ஜன்மங்கள் பிறந்து அவர்களுக்கு அடிமை செய்ய வேணும் என்று ஆசைப்படா நின்றது என் நெஞ்சு" என்பது அவ்விடத்துப் பெரிய வாச்சான் பிள்ளை இட்டருளிய வியாக்கியானம்.

அரசனும் ஆசைப்படு செல்வம் :

திருவரங்கன் தொண்டர்களைத் "திரு முற்றத்தடியார்" என்று குறிப்பிடுகிருர் குலசேகரர். முச்செல்வமும் வாய்ந்த பெருஞ் செல்வர்களல்லவா அவர்கள்? அவர்கள் திருவரங்கத்திற் பெருந்திர ளாகக் கூடி மிக்க இன்பந் துய்த்துக் கொண்டிருக்கின்றனராம். உள்ளம் குளிர்ந்துள்ளனர். ஏனைய இடங்களிற் போல அங்கே வெப்பம் இல்லை. அந் நல்லார்கள் வாழ்வது நளிரரங்கத்தி லன்ருே? கோடைமிக்க காலத்தில் பெருஞ் செல்வர்கள் உதக மண்டலத்தில் வெப்ப மின்றிக் குளிர்ந்து வாழ்கின்றனரன்ருே? அங்ஙனமே திருமுற்றத் தடியார்களும் மிகவு மின்பமாக வாழ்கின்றனர். அவர்கள் குழுவில் தாமும் சேர்ந்து வாழுவதற்கு ஆசைப்படுகிருர் "இவ்வரசும் யான் வேண் டேன்" என்று அரசச் செல்வத்தையும் வேண்டாத குலசேகரர். வைணவச் செல் வத்தைப் பார்க்கும்போது அற்பமும் அழிவுறுவதுமான அரசச் செல்வம் ஒரு பொருளாகத் தோன்ருதன்ருே? வைண வச் செல்வம் "கைங்கரிய சாம்ராச்சியம்" எனப்படுகிறது. அப்பேரரசுக்கு எதிரே இவ்வரசு நிற்க முடியுமா? "அணியரங்கன் திருமுற்றத்தடியார் தங்கள், இன்பமிகு பெருங் குழுவு கண்டு யானும் இசைந் துடனே என்று கொலோ இருக்கும் நாளே" (பெருமாள் திருமொழி 1-10) என்பது குலசேகரர் திருமொழி. இதில் வைணவ ஆக்கத்தில் தமக்குள்ள ஏக் கத்தைத் எவ்வளவு அடக்கத்துடன் கொடைக் குலசேகரன் வெளிப்படுத்து கிருர் என்பதையும், நமக்கும் அதில் ஆர் வத்தை அவர் கொடுக்கிருர் என்பதையும் நாம் காண முடிகிறது.

செல்வக் களிப்பு :

வைணவச் செல்வர்கள் திருவரங்கத் திலே களிப்பின் மிகுதியால் மால் கொள் கின்றனராம். தம்மை யறியாமல் ஆடிப் பாடி அரங்க! ஓ! என்று அழைக்கின்றன ராம். கண்ணீர் பெருக்கித் திருமுற்றத் தைச் சேறு செய்கின்றனராம். தொழுது மெய் சிலிர்க்கின்றனராம். களிப்பு மிக்க இத்தகைய தொண்டர் வாழ்வுக்கு ஆசை மிக் கூர்ந்து தமக்குப் பயித்தியமே பிடித்து விட்டதாகச் சொல்லுகிருர் குலசேகரர். "தொண்டர் வாழ்வுக்கு மாலையுள்ள தென் னெஞ்சமே" என்று பித்தேறியதாகக் கூறிக் கொள்ளும் குலசேகரர் தம்பித்துக் கேற்பக் கூறும் நயம் களிப்பூட்டுவதா யுள்ளது. "காணுதார் கண்ணென்ன கண்ணே" (சிலப்பதிகாரம்) "காணுதார் கண்ணென்றும் கண்ணல்ல கண்டாமே" (பெரிய திருமொழி) என்றபடி கண் படைத்த பயன் இறைவனைக் காண்ப தன்று; மெய்யடியார் ஈட்டங் கண்டிடக் கூடுமேல் அதுகாணும் கண் பயனுவது என்பர். இறைவனடியிலிருந்து உண்டான கங்கையில் நீராடித் தூய்மை பெற விரும் புவர் பிறர். இவரோ, "தொண்டர் அடிப் பொடி ஆடநாம் பெறில் கங்கை நீர் குடைந்தாடும் வேட்கை என்னுவதே" என்பர். ஏனையோர் நீராடிய பிறகு புழுகு நெய் முதலியவற்ருல் சென்னிக்கு அணி செய்வர். இவரோ, பொடியாடிய பிறகு "தொண்டர் சேவடிச் செழுஞ் சேறு என் சென்னிக்கு அணிவனே" என்பர்.

செல்வத்திற்கு அரங்கம் :

திருமழிசைப்பிரான் தம்மைப் போன்று பல துறவிகள் திருவரங்கத்தில் வைண வப் பெருஞ் செல்வராய் வாழ்ந்து வருவ தாகத் திருச் சந்த விருத்தத்தில் அருளிச் செய்கிருர். "சிற்றெயிற்று முற்றல் மூங் கில் மூன்றுதண்ட ரொன்றினர் அற்ற பற்றர் சுற்றி வாழு மந்தணீர ரங்கமே"(52) இங்கு "மூன்று தண்டர்" என்று முக் கோல் பகவர்களைக் குறிப்பிடுகிருர். "ஒன் றினர்" என்று இறைவனது அடிமைத் திறத்து மனமொன்றிய நிலையைக் குறிப் பிடுவதால் முதல் வகைச் செல்வமும், "அற்ற பத்தர்" என்று வேறு வழியும் பயனுமின்றிப் பெரிய பெருமாளையே அவைகளாகக் குறிப்பிடுகையாலே இரண்டு, மூன்றும் வகைகளைச் சேர்ந்த செல்வமும் உடையவர்களாக அங்குள் ளோர் விளங்குவது துலங்குகிறது.

இங்ஙனம் பெருஞ் செல்வம் வாய்ந்த நல்லாராய் எல்லாரையும் வாழவைக்கும் சிறப்புடைமை பற்றித் "திருவரங்கம்" என்று பெயர் வந்தது என்பதும் பொருந் தும். திரு - செல்வம், வைணவச் செல்வம்; அதற்கு அரங்கம் என்க.

இங்ஙனம் எல்லாரையும் வாழவைக்கும் செல்வம், நமது அறிவின்மை மிடியையும் போக்கடிக்க வல்லதாம்படி, திருவரங்கத் திற் செழிப்புறுவதாகுக!

வழித்துணை

(சிவஸ்ரீ தத்புருஷ தேசிகரவர்கள், தேவகோட்டை)

"துணையோ டல்லது நெடுவழி ஏகேல்" என்பது ஔவைப் பிராட்டியார் திருவாக்கு. திருக்குறளில் "பெரியாரைத் துணைக்கோடல்" என்னும் தலைப்பில் ஒரு அதிகாரத்தையே திருவள்ளுவர் பெருமான் அமைத்து வைத்துள்ளார். உயிர்கள் அனைத்தும், எந்த வேளையிலும் பயணம் செய்தபடியேதான் இருக்கின்றன. முதற் படைப்புக் காலத்தில் தொடங்கிய அவைகளின் பயணம், முத்திக் காலம் வரையில் தொடர்ந்து நிகழ்ந்துகொண்டு தான் இருக்கும். இந்தப் பயணம் சில வேளைகளில் குறுகிய காலம் இடம் முதலியனவற்றைக் கொண்டதாயும், சில வேளைகளில் நீண்டகாலம், இடம் முதலியனவற்றைக் கொண்டதாயும் நிகழ்ந்து வருகின்றது.

இவ்வாறு பயணிகளாகத்தான் நாம் எப்போதும் இயங்கிவருகின்றோமென்பதைப் பெரும்பாலானவர்கள் சிந்திக்காமலேயே காலங்கழித்து வருகின்றார்கள். இந்தப் பயணமும் நம்முடைய விருப்பத்திற்கேற்ப, நாம் குறித்த இடங்களுக்கே நிகழுவதாகவும் இல்லை. பயணத்தை மேற்கொள்ளுகிறவர் அனைவரும் அதற்குரிய வசதிகளைத் திட்டம் செய்துகொண்டு, நாம் விரும்புகிற இடத்திற்குச் செல்லுவது கண்கூடு. இங்குக் குறிப்பிடுகிற நமது பயணமோ, அங்ஙனம் அமைந்ததில்லை. அமைவதுமில்லை.

நாம் செய்திருக்கிற நற்செயல் தீச்செயல்களுக்கேற்ப அவற்றின் பயன்களை ஊட்டுவதற்காக, ஊட்டுவானாகிய சிவபெருமான் பலவேறு வகைப்பட்ட பொருள்களை மேற்கொள்ளுமாறு நம்மைச் செலுத்தினார். எதிலும் தன்னிச்சைப்படி நடக்க முடியாத நாம், அவர் செலுத்துகிறபடி எல்லாப் பயணங்களையும் மேற்கொண்டு ஆங்காங்கே நமது முன்னைச் செயல்களுக்கேற்ற இன்ப துன்பங்களை நுகர்ந்து வருகிறோம்.

அநாதி கேவலத்தில் ஆணவ மலத்துடன் அத்துவிதமாகக் கலந்து கிடந்த நமக்குக் கருணைக் கடலாகிய சிவ பெருமான் "காரண சரீரம்" என்னும் மூல உடம்பைக் கொடுத்து முதற் பயணத்தை மேற்கொள்ளும்படி செய்தார். அந்தப் பயணத்தில் நாம் ஒவ்வொருவரும் செய்த நல்வினை தீவினைகள் நமது அடுத்த பயணங்களுக்குக் காரணமாகி மேலும் பல உடம்புகளைக் கொடுத்ததோடு பின்னும் பல நல்வினை தீவினைகளைச் செய்வதற்கும் காரணமாகிவிட்டன. வினைகளின் பயனாக வந்த உடம்பு உரிய அநுபவத்தைப் பெற்ற பிறகு நம்மை விட்டு நீங்கிவிடும். நாம் ஈட்டிய வினை எஞ்சியிருக்கும் வரை, அவற்றின் அநுபவத்திற்கு மேலும் உடம்புகளைத் தொடர்ச்சியாகப் பெற்றேயாக வேண்டும். இங்ஙனம் உடம்புகள் தோறும் சென்று வாழுவதும் அவற்றை விட்டுப் பிரிவதுமே இங்கு பயணத்தை மேற்கொள்ளுதலும், முடித்ததுமெனக் குறிக்கப் பெற்றது.

பயணத்தை மேற்கொள்ளுகிறவன் தனது வசதிக்கேற்பப் பலவேறு வகைப்பட்ட ஊர்திகளை அமைத்துக்கொள்ளுகிறான். கால்நடையில் தனது உடம்பையே ஊர்தியாகக் கொள்ளுபவன்

முதல், விண் வழியில் வானவூர்தியைப் பயன்படுத்திக்கொள்ளுபவன்வரை பயணிகள் பலதிறப்பட்டவர்களாய் இருக்கிருர்கள். இந்தப் பயண வசதிகள் பயணிகளின் பொருளாதார வசதியை அடிப்படையாகக் கொண்டிருப்பது போல, உயிர்களின் பயண வசதிகளும் அவைகள் செய்த நற்செயல் தீச்செயல்களை அடிப்படையாகக் கொண்டே அமைவனவாகும்.

காலங்கடந்து அநாதி காலத்தில் தொடங்கப்பெற்ற நம்முடைய இந்தப் பயணம், மாறி மாறி நிகழ்ந்துகொண்டேயிருந்தால், ஓய்வு பெற்று ஓரிடத்தில் நிலையாக நாம் இன்புற்றிருப்பது எப்போது? "புல்லாகிப் பூடாய்ப் புழுவாய் மரமாகிப் பல்விருகம் ஆகிப் பறவையாய்ப் பாம்பாகிக் கல்லாய் மனிதராய்ப் பேயாய்க் கணங்களாய், வல்லசுரர் ஆகி முனிவராய்த் தேவராய்ச் செல்லாஅ நின்றவித் தாவர சங்கமத்துள் எல்லாப் பிறப்பும் பிறந்திளைத்தேன் எம்பெருமான்'' என்பது திருவாசகம். எத்தனையோ கோடிக் கணக்கான பிறப்புக்களை எடுத்து இதுவரை இடையீடில்லாத பயணத்தைச் செய்து வருகின்ற நாம், இனியாவது ஓய்வு பெறுவதற்கான உபாயத்தை உணர்ந்து ஒழுகுதல் வேண்டும்.

அந்த உபாயம் யாது? அதுவே: பயணத்தில் நம்மைச் செலுத்துகிற சிவபெருமான் எந்த வேளையிலும் நமக்கு உற்ற துணைவராயிருந்து உதவுகிருர் என்பதை உள்ளபடி அறிந்து அவர்பால் உண்மையன்பு செய்வதாகும். அன்பு செய்தோரும் செய்யாதோருமாகிய இருதிறத்தினருக்கும் அவர் துணையாயிருந்து உதவி புரிவாரென்பது உறுதி. ஆனுல் செய்வோருக்கு, முன்னின்று வழிகாட்டி அழைத்துச் செல்லும் துணையாகவும், அது செய்யாதோருக்குப் பின்னின்று அவர் செல்லும் நெறியிற் செலுத்தும் துணையாகவும் அவர் இருப்பார். சிற்றறிவுடையதாகிய உயிர், வழிகாட்டி அழைத்துச் செல்லும் உதவியைப் பெறுகின்றபொழுது பயணத்தை முடித்து ஓய்வு பெறும் பேற்றையும் செல்லும் நெறியிற் செலுத்தும் உதவியைப் பெறுகின்றபொழுது மீண்டும் மீண்டும் பயணங்களை மேற்கொள்ள வேண்டிய புதுப்புதுப் பெரும்பொறுப்புக்களையும் அடைகின்றது. இதனை "உற்கை தரும் பொற்கை உடையவர் போல் உண்மைப்பின் நிற்கை அருளார் நிலை'' என்ற திருவருட்பயனில் ஆசிரியர் உமாபதிசிவம் உணரவைத்துள்ளார்.

"சிவாய நமவென்று சிந்தித் திருப்போர்க் கபாயம் ஒரு நாளும் இல்லை— உபாயம், இதுவே மதியாகும் அல்லாத எல்லாம் விதியே மதியாய்விடும்'' என்ற நல்வழி வெண்பா இங்கே சிந்திக்கத் தக்கதாகும். இன்றியமையாது உணர்ந்து கொள்ளவேண்டிய இப்பேருண்மையைத் திருமூலதேவ நாயனுர், தமது திருமந்திர மாலைக் கடவுள் வாழ்த்து இருபத்தெட்டாவது திருப்பாடலில் தெளிவு செய்துள்ளார். அத்திருப் பாட்டு,

> " இணங்கிநின் ருன்எங்கும் ஆகிநின் ருனும்
> பிணங்கிநின் ருன்பின்முன் ஆகிநின் ருனும்
> உணங்கிநின் ருன்அம ராபதி நாதன்
> வணங்கிநின் ருர்க்கே வழித்துணை யாமே''

என்பதாகும்.

உயிர்களுடன் ஒன்ருகி அவற்றுடன் கலந்து நிற்றலும், அவற்றின் வேருகித் தனித்து நிற்றலும், அவற்ருேடு உடனுகிச் செலுத்தி நிற்றலுமாகிய மூன்று நிலைகளில் நின்று, சிவபெருமான் உயிர்களுக்கு உதவி புரிந்து வருகின்ருர். இதனை "இணங்கி நின்ருன், எங்குமாகி நின்ருன், பிணங்கி நின்ருன்'' என்று பாடலின் முற்பகுதி புலப்படுத்தியது.

இங்ஙனம் ஒன்ருயும் வேருயும் உடனும் நின்று சிவபெருமான் உயிர்களுக்குச் செய்துவரும் உதவி, இடையீடின்றி எஃத நாளிலும் நிகழுவதாகும். உயிர்களது கேவலநிலை சகலநிலை சுத்தநிலை ஆகிய மூன்று நிலைகளிலும் இறைவனது உதவியை யின்றி ஏதும் நிகழாதாதலின் அவர் முன்னைப் பழம் பொருட்கு முன்னைப் பழம் பொருளாயும், பின்னைப் புதுமைக்கும்

பேர்த்துமப் பெற்றியராயும் எழுந்தருளி யிருக்கின்றார். இது "பின்முன்னாகி நின் றான்" என்று குறிக்கப்பெற்றது.

உயிர்களின் தொலையாத பயணத் திற்குக் காரணமாகிய வினையை விரட்டு வதற்குச் சிவபெருமான் கொள்ளுகின்ற திருமேனி "அகோரவடிவம்" என்றுசொல் லப்பெறுவது. கோரமாகிய இந்தத் திரு மேனியை மேற்கொண்டு உயிர்கள் கோரங்களைச் சிவபெருமான் ஒழிப்பதால் இந்தத் திருமேனியை அகோர வடிவம் என்று ஞான நூல்கள் கூறுகின்றன. "வேகியா னாற்போல் செய்த வினையினை வீட்டல் ஓரார்" என்பது சிவஞான சித்தி யார். உயிர்களின் பிறவிப் பயணத்தை ஒழிக்கச் சிவபெருமான்" வணங்கி நின் றான்" என்று அவரது வினை வீட்டும் திரு மேனியை ஆசிரியர் உணர்த்தி, அவரே உயிர்கள் எல்லாவற்றுக்கும் தலைவனும் என்பதை "அமராபதி நாதன்" என்பதில் புலப்படுத்தினார். திருவருட் பேற்றால் வரும் இவ்வுண்மைகளை உணர்ந்து தொழுது தூமலர்தூவித் துதித்து நின்று அழுது காமுற்று அரற்றுகின்ற மெய்த் தொண்டர்கள் செல்லும் நெறிகளெல்லாம் செந்நெறிகளாம்படி செய்து வழித்துணை யாயிருப்பது சிவபெருமானது இயல்பு என்பதை "வணங்கி நின்றார்க்கே வழித் துணையாம்" என்பதில் அறிகிறோம்.

ஸ்ரீ சென்னமல்லீசுவரர், சென்னை.

ஸ்ரீவசந பூஷணத்தின் சாரம்

மகாவித்வான் ஸ்ரீமத் பி. ப. அண்ணங்கராசாரிய சுவாமிகள்
காஞ்சிபுரம்.

மணவாள மாமுனிகள் உபதேச ரத்தின மாலையில் சில ஆழ்வார்களுக்கு ஒரு பாசுரம், சில ஆழ்வார்களுக்கு இரண்டு பாசுரம் மூன்று பாசுரம், பெரியாழ்வார்க்கு ஐந்து பாசுரம் இப்படியாக இட்டருளினவர்,

"அன்ன புகழ்முடும்பை அண்ணல்உல காசிரியர்
இன்னருளாற் செய்தகலை யாவையிலும்— உன்னில்
திகழ்வசன பூடணத்தின் சீர்மைஒன்றுக் கில்லை..."

என்று தொடங்கி, ஏழுபாசுரங்கள் இட்டருளினர் ஸ்ரீவசந பூஷணத்திற்கு! "ஆர்வசன பூடணத்தின் ஆழ்பொருள் எல்லாம் அறிவார்" என்றருளிச் செய்ததோ, மிகவும் நுட்பம் பொதிந்தது.

இதற்கு உள்ள பல தனியன்களில் "ஸாங்காகில த்ரவிட ஸம்ஸ்கிருத" என்கிற ஒரு சுலோகமே போதும், இதன் அளவற்றை பெருமையை உணர்வதற்கு. "அங்க உபாங்கங்களோடு கூடிய வடமொழி தென்மொழி வேதங்களின் சாரமான பொருள்களை உட்கொண்டதும், முழுதும் உணர்ந்த பிள்ளைலோகாசாரியர் பணித்ததும், மேலோர்க்கு மிக இனியதுமான ஸ்ரீவசநபூஷணம் என்னும் சிறந்த சாத்திரத்தைத் தொழுகின்றேன்" என்பது அந்தச் சுலோகத்தின் பொருள். அதன் கண், முழுவதும் உணர்ந்த பிள்ளைலோகாசாரியர் பணித்தது' என்னும் கருத்தில் 'சர்வஜ்ஞ லோககுரு நிர்மிதம்' என்று இதற்கு வழங்கிய சிறப்பு அடைமொழியானது, மிகப்பெரிதும் உண்மையுடையது.

பிள்ளைலோகாசாரியரின் முற்றுணர்வு ஒருபுறம் இருக்கட்டும், அவருடைய பரமப் பிராமாணிகத்துவம், அநந்ய சாமாந்யம் அன்றோ? எந்த அர்த்தத்திலும் பிடிவாதம் இன்றிக்கே பிரமாணப் பொருத்தமுடைய அளவே அருளிச்செய்யும் நடை வேறு எந்த ஆசாரியாருடைய நூலிலும் காண முடியாத தொன்றன்றோ! இவ்வதிசயங்கள் எல்லாவற்றிற்கும்மேற்பட, மணவாள மாமுனிகளால் உரை வகுக்கப்பெற்றது என்னும் அதிசயம், எல்லாவற்றிற்கும் மேலான சிறப்புடையதன்றோ! இந்தப்பெரு நூலை நான்கு பிரகரணமாகக் கொண்டிருப்பது, அத்தியயன அத்யா பனங்களுக்கு ஆனதொரு பிரக்கிரியையே ஒழிய ஒன்பது பிரகரணமான விச்சேதமும், ஆறு பிரகரணமான விச்சேதமுமே, வியாக்கியானத்தாலும் தனியன்களாலும் சித்தமானது. ஸ்ரீவசநபூஷணம் என்று இந்நூலுக்குத்திருநாமம் செவிக்கினிதாக அமைந்துள்ளது. இரத்தினங்களை நிறைத்துச் சமைத்ததொரு அணிகலனுக்கு இரத்தின பூஷணம் என்று பெயரமைவது போலே, பூருவாசாரியர்களின் சிறந்த வசனங்களை நிறைத்துச் செய்தருளப்பட்டதாய், அநுசந்திக்கின்றவர்களுக்கும் மிக்க அழகு பெறுவிக்குமதாய் இருக்கையாலே, இதற்கு ஸ்ரீவசந பூஷணம் என்று திருநாமம் ஆயிற்று. இது உபதேச ரத்தினமாலையில்,

"முன்னம் குரவோர் மொழிந்த வசநங்கள்
தன்னைமிகக் கொண்டுகற்றோர்
தம்உயிர்க்கு—மின்னணியாச்
சேரச் சமைத்தவரே சீர்வசந பூடணமாம்
பேர்இக் கலைக்கிட்டார் பின்"

எனவரும் பாசுரத்தினுல் விளங்கும்.

“பிராட்டியானவள் சிபாரிசு செய்ய வேண்டியவள் என்று முனிவர்கள் மொழிந்தனர். என்னுடைய கொள்கையும் இதுவேயாகும். வேறுவகையான தன்மைகள் இல்லை” என்கிற பகவத் சாத்திர வசநத்தின்படி, பிராட்டிக்குப் புருஷ காரத்துவம் நியதமாய் இருக்கும். இயல்பாகவே பெருங்கருணை உடையவனாய், உலக மக்களுக்கு அருள்புரிய வழிதேடிக் கொண்டிருப்பவனான எம்பெருமானுக்குப் புருஷகார கிருத்தியம் செய்ய ஒருவர் வேணுமா? என்கிற ஐயப்பாட்டிற்கு, ஸ்ரீகுணரத்தின கோசத்தில் பட்டரின் திருமொழியை அநுசரித்து முமுட்சுப்படியிலே பரிகாரம் அருளிச் செய்யப்பட்டது. “அன்புக்கு இடமான புதல்வனிடத்திலே தந்தை பின்விளையும் நலன் கருதிச் சிலகாலங்களில் சீற்றம் கொள்வது போலே, எம்பெருமான் தானும் கூட நம்போன்ற குற்றவாளர்கள் பக்கலிற் சிலகால் சீற்றம் கொள்வதும் உண்டு” என்பது பட்டரின் திருமொழி. “நீரிலே நெருப்புக் கிளருமா போலே குளிர்ந்த திருவுள்ளத்திலே அபராதத்தாலே சீற்றம் பிறந்தால் பொறுப்பது இவளுக்காக” என்பது முமுட்சுப்படியில் இவர் தம்முடைய ஸ்ரீசூக்தி. பிரகிருத ஸ்ரீவசந பூஷணத்தில் 10, 11, 12, 13 ஆகிய நான்கு சூர்ணைகள் இன்சுவை மிக்கவை. அவற்றின் சாரமான கருத்தைக் கேண்மின்கள்.

கூடல் நிலையில் பிராட்டி ஈசுவரனைத் திருத்துவாள் என்றும், அவ்வாறு திருத்து உபதேசத்தாலே என்றும், உபதேசத்தாலே ஈசுவரன் திருந்தாவிடில் அழகாலே திருத்துவாள் என்றும் சொல்லப்படுகிறது. இதைச் சிறிது விவரிப்போம். தயாளு என்றும், பொறுமைக் கடல் என்றும்பேர்பெற்ற பெருமாள், குற்றவாளர்களான அஸ்மதாதிகளையும் காத்தருளக் குதூகலம் உடையவனே. அதனால் அவன் நமது குற்றங்களைக் கணிசியாமலே, பொறுத்தோ போக்கியமாகக் கொண்டோ அநுக்கிரகிப்பன். அவன்தான் இதபரனும் ஆகையாலே குற்றங்களைக் கணக்கிட்டு நிக்கிரகிக்கவும் தண்டிக்கவும் புகுவன். அப்படிப்பட்ட சமயங்களில் “உலகுக்கு நன்மையைச் சிந்திப் பவளும், சீற்றத்தை ஒருகாலும் அறியாதவளுமான பிராட்டியை வணங்குகின்றேன்” என்று போற்றப்பட்ட பிராட்டியானவள், பெருமானுக்குச் சில உபதேசங்கள் பண்ணுவள், மன்றுடுவள், அவன் இரக்கம் கொள்ளும் வகையில் செய்யத்தகுவன பலவும் செய்வள். இங்குத் திவ்விய தம்பதிகளின் சம்வாதம் கேளீர்.

பிராட்டி : நாதா! மணற் சோற்றிலே கல்லாராய்வதுண்டோ? குற்றமே ஒரு வடிவெடுத்த இவர்கள் பக்கலிலே நற்றம் தேடுவதும், அஃதில்லையென்று கைவிடப்பார்ப்பதும் தகுதியோ? சிறிது ஆலோசித்து விடைதரவேணும்.

நாதன் : திருவே! நான் விதி நிஷேதங்கள் நிரம்பிய சாத்திரங்களை வெளியிட்டிருக்கிறேனென்பது உனக்குத் தெரியுமே. விதித்தவற்றைச் செய்தும், விலக்கியவற்றை விட்டும் நெறியிலே வர்த்திப்பவர்களை அநுக்கிரகிப்பதும், நெறி மீறினவர்களை நிக்கிரகிப்பதும் செய்வேனென்பதும், சாத்திரங்களிலெல்லாம் முறையிட்ட விஷயந்தானே. குற்றவாளர்களையெல்லாம் பரிக்கிரகிப்பதானால் சாத்திரம் ஏதுக்கு? இதை நீ ஆலோசிக்கவேணும்.

பிராட்டி : நீர்சொன்னபடி சாத்திரம் இருப்பது உண்மை. உம்மைத் தயாளுவென்றும், க்ஷமாசீலரென்றும், வத்ஸலரென்றும் சொல்லிப் போருகிற சாத்திரங்களும் உண்டே. அவற்றுக்கு ஜலாஞ்சலி தானோ?இதை நீர் நன்கு ஆலோசித்து விடை தர வேணும்.

நாதன் : என்னுடைய க்ஷமை முதலான குணங்களும் வாழவேணும்; சாத்திரமும் வாழவேணும்; அதற்குரிய வழியை நீயே சொல்லு பார்ப்போம். எனக்குப் பிடிவாதம் ஒன்றுமில்லை. பொருத்தமான வழி காட்டினால் அதைத் தழுவுகின்றேன்.

—தொடரும்